www.padippakam.com

# பாலம்

இலக்கிய மாத இதழ்



நவம்பர் 1989 விலை ரூபாய் ஐந்து

ஈழ நண்பர் கழக கலை மாநாட்டுச் சிறப்பிதழ்

படிப்பகம்

www.padippakam.com



பேராசிரியர் கு. வே. கி. ஆசான்



கோ. கேசவன்



சரசுவதி



இந்திரன்



நாகார்ஜுனன்



கு. திருமாறன்



புலவர் தமிழ் மாறன்



சுலைமான்



பிரபஞ்சன்

படிப்பகம்

www.padippakam.com

# பாலம்

## என்றென்றும் புதிதாய் இருப்போம்

பாலம்

சிறிய ஏடுகளின் வரலாற்றில் அதிக ஆயுளோடு இருக்கிறது.

இதுவரை வந்த இதழ்கள் தரம் மிக்கவையாக இருந்தாலும் இனிவரும் இதழ்களில் மேலும் மாற்றங்களைச் செய்ய இருக்கிறோம். இவை அனைத்தும் வளர்ச்சியை நோக்கிய மாற்றமாகவே அமையும்.

ஈழ நண்பர் கழக அமைப்பாளராக **சி. அறிவுறுவோன்** பொறுப் பேற்றிருக்கிறார். அமைப்புக்குழு உறுப்பினர்களாக அறுவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு கலை இயக்கத்தை செயல்வேக மிக்கதாக மாற்ற முழு அளவில் ஈடுபட்டுள்ளனர். பாலத்திற்கு புதிய ஆசிரியர் குழுவும் புதிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நிர்வாக ஏற்பாடுகள் முறையானதாக சரி செய்யப்பட்டுள்ளது. செயல்படுகிற ஆசிரியர் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இனி தாமதம் இன்றி இதழ் வெளிவரும்.

தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் உள்ள நண்பர்கள் சந்தா சேர்க்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சென்னை மாநகரில் முக்கிய இடங்களில் உள்ள கடைகளில் பாலம், விற்பனைக்கு கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துள் ளோம்.

உங்கள் ஊர்களிலும் முன்பணம் செலுத்தக்கூடிய விற்பனை யாளர்களை அறிமுகப்படுத்துங்கள்.

இலக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனங்கள், பேட்டிக்கட்டுரை கள், நூல் அறிமுகங்கள், சிறுகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப் புகள் என்ற அளவில் தொடர்புகளை வளர்த்துக் கொண்டு இறுக் கப்படுத்துங்கள்.

உதவ நினைக்கிற பேருள்ளம் படைத்தவர்கள் 'நினைப்பது' என்ற நிலையை மாற்றி 'உதவி செய்வது' என்ற நிலைக்கு இரங்கி வர வேண்டுகிறோம்.

**தனி இதழ் விலை ரூ. மூன்று**
**ஆண்டுச் சந்தா ரூ. முப்பது**
**அனைத்து தொடர்புகளுக்கும்**
**நிர்வாகி**
**பாலம்**
**12, முதல் பிரதான சாலை**
**நேருநகர்**
**அடையாறு, சென்னை-20**
**என்ற முகவரிக்கே தொடர்பு கொள்ளுங்கள்.**

---

**முகப்பு :**
**ஈழத்தில்**
**இராணுவத் தாக்குதலில் காயமுற்ற சிறுவன்**
**நன்றி : Stuart Nicol**

□ 1989 நவம்பர் □

படிப்பகம்

www.padippakam.com

# பாலம் பற்றி ... கலை மாநாடு பற்றி ... பாலம் பற்றி

பாலம் இலக்கிய இதழா? அல்லது ஈழப் பிரச்சினை பற்றிய இதழா ? பாலம் இலக்கிய ஆர்வமுள்ள வாசகர்களைச் சென்றடைந்ததா ? அல்லது ஈழம் பற்றி அக்கறை கொண்டோரைச் சென்றடைந்ததா ?

இப்படி கேள்விகள் பல.

ஓர் இலக்கிய இதழுக்கு சமூகம் பற்றியும் உலகில் நடைபெறும் போராட்டங்கள் பற்றியும் அக்கறை இருக்கக் கூடாதா? பாலம் எவ்வாறு இவற்றை நிறைவேற்றியுள்ளது ?

இவை எல்லாம் சரி. சரியான விஷயங்கள் சரியான அளவில் பாலம் இதழில் இடம் பெற வில்லையே என்ற ஆதங்கம் ஒருபுறம்.

பாலம் ஓர் இலக்கிய இதழ்தான். இலக்கிய இதழுக்கு சமூக அக்கறையும் உண்டு. அந்த அளவில் ஈழம் பற்றியும் தமிழகம் மற்றும், உலகப் பிரச்சினைகள் பற்றியும் கவனம் செலுத்தும் இனிவரும் காலத்தில்.

சிறந்த படைப்புகளைத் தருகின்ற படைப்பாளிகள் பலர் பாலத்திற்கு நண்பர்களாக இருக்கிறார்கள். உரிய ஒத்துழைப்பைப் பெறுவோம்.

சிறந்த படைப்புகளோடு கூடிய பாலம் தரமான வாசகர்களைத் தேடி சென்றடைய வேண்டும். இதற்கான ஏற்பாட்டை ஆங்காங்கு உள்ள நண்பர்கள் செய்ய வேண்டும்.

முழு வீச்சோடு கூடிய கலை இதழாக பாலம் வெளிவருமானால் தமிழில் விழிப்பினைத் தோற்றுவிக்கும் கலை இயக்கமாக பாலம் மாற வாய்ப்பு ஏற்படும்.

வாசகர்களின் கருத்தை அறிய அடுத்த இதழில் வினாத்தாள் ஒன்றை இணைக்க உள்ளோம்.

□

பாலம் இவ்விதழ் ஈழ நண்பர் கழக கலை மாநாட்டுச் சிறப்பிதழாக வெளி வருகிறது.

கலை மாநாடு வெற்றிகரமாக நிகழ்வதற்கு மதுரை, இராசபாளையம், தஞ்சை, சென்னை ஆகிய பகுதிகளில் உள்ள நண்பர்கள் நன்கொடை திரட்டுவதில் முன்நின்றார்கள்.

மதுரை ஈழ நண்பர் கழகத்தினர், சிற்பி நூலகத்தினர் என பலரும் முன்னின்று அல்லும் பகலும் தமது உழைப்பை நல்கினர். இரா. திரவியத்தின் கூட இருந்து ஊர் ஊராக அலைந்து நன்கொடை வசூலில் விடாப் பிடியோடு 'இருந்து உதவி செய்தவர் சத்திரப்பட்டி ஏ. ஆர். மணி அவர்கள்.

அர்ப்பணிப்போடு சுவர் எழுத்துக்களையும் விளம்பரத் தட்டிகளையும் துணி பதாகைகளையும் தோரண வாயிலையும் எழுதினர்.

ஓவியக் கண்காட்சிக்காக தமது ஓவியங்களை அன்புள்ளத்தோடு தந்தவர்கள் ஆதிமூலம், வீர. சந்தானம், மருது, ரபீக், முருகேசன்.

மாநாட்டில் பங்கேற்ற பல்வேறு துறை சார்ந்த அறிஞர்கள், நந்தன் நாடகம் நிகழ்த்திய அரங்கம் குழுவினர், இயக்குநர் இரா. இராசு, பறை முழக்க வீரநாட்டியம் நிகழ்த்திய கலைஞர்கள் மற்றும் டாக்டர் கே. முருகேசன் இவர்கள் அனைவரின் பங்களிப்பையும் பாலம் நினைவு கூர்கிறது. புத்தகக் கண்காட்சி சிறப்புற அமைய காரணமானவர் ஈஸ்வரன்.

மாநாடு வெற்றி பெற வாழ்த்தி, ஈழத்திலிருந்து ஈழப் புரட்சி அமைப்பு, ஈழவர் ஜனநாயக முன்னணியின் இலங்கை நாடாளு மன்றக் குழு, மாணவர் இளைஞர் பொது மன்றம் மற்றும் வெளிநாட்டுத் தமிழ் அமைப்புக்கள் செய்திகள் அனுப்பி இருந்தன.

மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர் பொன். இளங்கோ, வரவேற்புக் குழுச் செயலாளர் இரா. திரவியம், மாநாட்டுப் பொருளாளர் அ. தனசேகரன் ஆகியோர் சுறுசுறுப்பாக இயங்கத் தலைமை ஏற்றனர்; முப்பது பேருக்கு மேற்பட்ட வரவேற்புக் குழுவினரையும் இணைத்துக் கொண்டு திறம்பட செயல் பட்டனர்.

இவ்வனைத்து நிகழ்வுகளையும் பாலம் பதிவு செய்கிறது பெருமிதத்தோடு.

□

இவ்விதழ் மாநாட்டுச் செய்திகளை முழுக்கத் தருகிறது. ஈழப் போராட்டம் என்பது ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமாகும். ஈழத் தமிழர்களின் உரிமைப் போரை ஈழ நண்பர் கழகம் அங்கீகரித்து ஒரு பிரகடனம் வெளியிட்டுள்ளது. அப்பிரகடனமும், மாநாட்டின் தீர்மானங்களும் நிகழ்ச்சித் தொகுப்பும், இடம் பெறுகின்றன.

பாலம் வாசகர்கள் தங்கள் கருத்துகளை எழுதினால் பாலம் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

□ — ஆசிரியர் குழுவினர்

□ — நிர்வாகக் குழுவினர்

படிப்பகம்

www.padippakam.com

**...இலங்கையில் தற்போது வடகிழக்கு மாகாணத்தில் நிலைமை வேறு; தென்மாகாண நிலைமை வேறு. இரு கூறுகளாக நோக்கப்பட வேண்டிய இந்த நிலைமையானது இனப்பிரச்சனையின் வெளிப்பாடே...**

□

# இனப்பிரச்சனைக்கான தீர்வைக் காணாவிட்டால் ஏனைய பிரச்சனைகள் தீர்க்க முடியாததாகிவிடும்

## *இலங்கை சர்வகட்சி மாநாடு பற்றி ஈரோஸ் நிலைப்பாடு*

தென் பகுதியில் நிலவும் நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் நாம் இவ் வறிக்கை மூலம் எமது பார்வையையும், எமது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்த முன் வருகிறோம்.

இம்மாநாட்டின் நோக்கத்தை இரு கோணங்களிலிருந்து நோக்க வேண்டியதாய் உள்ளது. இலங்கை அரசின் நோக்கம் ஒரு புறமும், பெரும்பாலான எதிர்க்கட்சிகளின் எண்ணங்கள் இன்னொரு புறமுமாக விளங்கு கின்றன.

இலங்கை அரசைப் பொறுத்த வரையில் ஜே. வி. பி. மீது மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை கடந்த சில மாதங்களாக துரிதப்படுத்தியுள்ள நிலையில், அவற்றின் பலாபலன்கள் எதுவும் இம் மாநாட்டின் மூலம் கிடைக்கப்பெறுமா என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறது. ஆதலால், இம் மாநாட்டில் அவர்கள் கலந்து கொள்ளாத வரையில் இலங்கையரசின் நோக்கம் நிறைவேறாத ஒன்றாகவே விளங்கப் போகிறது. நிலைமை இவ்வாறே நீடித்தால் மாநாடு பிசுபிசுத்துப் போகும் தன்மையும் தோன்றி விடும்.

எதிர்க் கட்சிகளைப் பொறுத்த வரையில் தமது கோரிக்கைகளை வலுவாக முன்வைக்க இம்மாநாட்டைப் பயன்படுத்த முனைந்துள்ளன. ஜனாதிபதியின் அதிகாரத்தை பாராளுமன்றத்துக்கு மாற்றவும், தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைத்து இடைக்கால அரசு ஒன்றை உருவாக்கவும், தேர்தலொன்றை மீளவும் நடத்தவுமாக சில கோரிக்கைகளை இவை முன்வைத்துள்ளன. இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் நாட்டில் நிலவும் பிரச்சனைகளின் தோற்றுவாய்களைக் கவனத்தில் கொள்ளாமல் வெறுமனே வடிவமொன்றையே சுகாரி நிற்கின்றன. யதார்த்த சூழ்நிலையைக் ணேக்கிலெடுக்காமல் அதிகாரம் செலுத்துவதற்கான ஆள் மாற்றமும், வடிவ மாற்றமும் கோருவது பிரச்சனையைத் தீர்க்கும் வழியாக முடியாது.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் அவர்கள் எதிர்பார்ப்பது போல் ஜே. வி. பி. யினர் மாநாட்டில் கலந்துகொள்ள முன்வராத போது மேலும் இராணுவ நடவடிக்கைகளை வேகப்படுத்தி பேச்சுக்கு வரவழைக்க முடியுமா என்ற போக்கில் செயற்படத் தயாராகி வருகிறது. எனவே இராணுவமூடாக நெருக்குதலும், மாநாட்டினூடாக பேச்சுவார்த்தையும் என்ற உபாயத்தைச் சார்ந்தே தென்பகுதி நிலைமைகள் இனிவரும் காலங்களில் அணுகப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இலங்கை அரசின் இவ்வகை அணுகுமுறை பற்றிய, எமது கருத்தைத் தெரிவிப்பதற்கு முன் 83ற்கு பின்னால் இனப்பிரச்சனை தொடர்பாக அன்றைய ஜனாதிபதி மேற்கொண்டு வந்த அணுகுமுறைகளை இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியமாய் உள்ளது.

இனப் பிரச்சனையானது வடகிழக்கில் ஆயுதம் தாங்கிய போராட்டமாக அடையாளம் காட்டி நின்ற போது ஒருபுறம் பேச்சுவார்த்தையும், மறுபுறம் இராணுவ வன்முறையுமாக இரு வேறு கோணங்களில் அணுகப்பட்டு வந்திருக்கிறது.

1983ல் ஆரம்பமான வட்டமேசை மாநாட்டில் இருந்து இதை நோக்குதல் பொருத்தமானது. 83ல் கூட்டப்பட்ட வட்டமேசை மாநாடானது பரஸ்பர கருத்துப் பரிமாற்றலை மட்டும் கொண்டிருந்த வேளையில் நாட்டில் தூண்டிவிடப்பட்ட கலவரத்தினால் இடை நடுவில் முறிந்து போனது.

பின்பு 84 ஜனவரி 10ல் சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி இருந்தன. இக்காலத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் கூட்டாக இணைந்து பொதுக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து இதில் பங்குபற்றியிருந்தன. மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கவும், குடியேற்றப் பிரச்சனையைத் தீர்க்கவும், தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ

படிப்பகம்

www.padippakam.com



நடவடிக்கைகளை நிறுத்தவுமாக இவர்கள் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத் திருந்தனர். ஆனால் இவற்றிலுள்ள அரசியல் முக்கியத்துவத்தை கருத்திற் கொள்ளாமல், மாவட்ட சபையொன்றை உருவாக்குவதன் மூலம் இவையனைத்தையும் தீர்த்து விடலாம் என்ற தீர்ப்பே இம்மாநாட்டின் முடிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசியல் கோட்பாடுகளை புறக்கணித்து வெறுமனே நிர்வாகப் பரவலாக்கத்தின் ஊடாக தீர்வைத் தேடிய முறையானது மாநாட்டை அர்த்தம் இல்லாத முடிவு நிலைக்குக் கொண்டுவந்தது. இதனால் மீண்டும் இராணுவ வன்முறைகள் தலைதூக்கின.

இராணுவ ரீதியான நெருக்குதல்கள் 85ன் ஆரம்பப் பகுதிகளில் உச்சமடைந்த போது மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இந்தியாவின் நேரடிக் கண்காணிப்பில் திம்புவில் நடைபெற்ற இம்மாநாட்டில் நாமும் கலந்துகொண்டிருந்தோம். அங்குதான் நாம் முதன் முதலாக இலங்கையரசுடன் நேரடியாக இனப் பிரச்சனை பற்றி பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அம்மாநாட்டில் அனைத்து இயக்கங்களுடனும் இணைந்து 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். இவையேதுவும் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் மீண்டும் இராணுவ வன்முறைகள் தலை தூக்கின.

இராணுவ நடவடிக்கைகள் 86ன் ஆரம்பப் பகுதிகளில் மேலும் உக்கிரமடைந்த போது அன்றைய ஜனாதிபதியால் அரசியல் கட்சிகள் மாநாடு என்ற பெயரில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. இதுவும் பிரச்சனை எதையும் தீர்க்காது போக, இலங்கை-இந்திய ஒப்பந்தம் இரு அரசுகளிடையே கைச்சாத்திடப்பட, இந்தியப்படை இனப்பிரச்சனையைத் தீர்க்கப் போவதாகக் கூறிக்கொண்டு இலங்கைக்குள் நுழைந்தது.

இராணுவ நெருக்குதலும் பேச்சுவார்த்தையும் என்ற உபாயத்தின் ஊடாக வட்டமேசை மாநாடும், சர்வகட்சி மாநாடும், திம்பு மாநாடும், அரசியல் கட்சிகள் மாநாடும் நடந்து முடிந்த போதும், இனப்பிரச்சனையானது இன்னமும் தீர்க்கப்பட்டதாய் இல்லை. இதுபோலவே தென்பகுதி நிலைமைகளும் ஆகிவிடக் கூடாது என்பதே எமது வேண்டுகோள் ஆகும்.

இளைஞர்கள் வடகிழக்கிலும் சரி, தென் பகுதியிலும் சரி, ஆயுதம் தரித்து அணி வகுத்து நிற்பதை; வெறுமனே கிளர்ச்சியாகவும், வன்முறையாகவும், பயங்கரவாதமாகவும் சித்தரித்து அவர்களை அணுகுவதால் தீர்வு கிட்டாது. வன்முறை மூலம் ஆயுதங்களைக் களையமுற்படுவதாலும், சரணடையும்படி கோரிக்கை விடுவதாலும் பிரச்சனைக்கான தீர்வை தேடிவிட முடியாது. போராட்ட அமைப்புக்கள் கடந்த காலத் தவறுகள் அனைத்தையும் ஆயுத முனையில் சுட்டிக்காட்டி நிற்கும் சக்திகள் என்பதை ஒப்புக்கொண்டு பிரச்சனைகளை அணுகுவதே பொருத்தமான அணுகுமுறையாகும். போராட்ட அமைப்புக்கள் ஒவ்வொன்றும் சமூக மாற்றத்தையே கோரி நிற்கின்றன. நிர்வாகத்தில் அதிகாரப் பகிர்வு செய்வதாலோ, சமரசம் செய்து கொள்ள அழைப்பு விடுவதனாலோ தீர்வு எதையும் தேடிக் கொள்ள முடியாது; இதுவே யதார்த்த சூழ்நிலையாகும். யதார்த்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இராணுவ தீர்வற்ற முறையில் அரசு புதிய கோணத்தில் பிரச்சனைகளை அணுகும்போது அதற்கு நாம் தடையாக இருக்கப் போவதில்லை.

சட்டம் வேறு, யதார்த்தம் வேறு என்பதே தற்போதைய சூழ்நிலையின் சுருக்கமாகும். ஆதலால் யதார்த்த சூழ்நிலையைக் கணக்கிலெடுக்காமல் அதிகாரம் செலுத்துவதற்காக அரசியல் யாப்பில் வடிவ மாற்றம் கோரும் எதிர்க் கட்சிகளின் கோரிக்கையானது பிரச்சனைக்கான தீர்வைத் தராது.

இலங்கையில் தற்போது வடகிழக்கு மாகாணத்தில் நிலைமை வேறு, தென் மாகாணத்தில் நிலைமை வேறு. இரு கூறுகளாக நோக்கப்பட வேண்டிய இந்த நிலைமையானது இனப் பிரச்சனையின் வெளிப்பாடே. ஆதலால் இனப் பிரச்சனைககான தீர்வை தற்போது காணாவிட்டால் நாட்டின் ஏனைய பிரச்சனைகள் எதுவும் தீர்க்கப்பட முடியாததாகிவிடும். இனப் பிரச்சனையை தீர்த்து வைப்பதே அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதற்கான திறவுகோலாகும்.

இனப் பிரச்சனையை தீர்த்து வைப்பதில் நாம் முன்வைக்கும் நிலைப்பாட்டினை இங்கு தருகிறோம். இலங்கையில் தமிழ்ப்பேசும் மக்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய அரசியல் மாற்றமொன்றையே கோரி நிற்கின்றனர். இதற்கான உத்தரவாதம் எதுவும் அரசியல் யாப்பில் இடம்பெறாத வரையில் பிரச்சனையெதுவும் தீர்ந்து போகாது. இனப் பிரச்சனையின் தீர்வுக்கு அரசியல் ரீதியில் காணப்பட வேண்டிய கொள்கை முடிவுகளை நாம் ஏற்கனவே திம்பு மாநாட்டில் ஏனைய இயக்கங்களுடன் இணைந்து முன் வைத்திருந்தோம். இதை அடியொற்றி கடந்த பொதுத் தேர்தலின் போது ஐந்து அம்சக் கொள்கைகளை முன்வைத்து அதற்கான அங்கீகாரமும் பெற்றிருந்தோம்.

படிப்பகம்

www.padippakam.com



அவையாவன :

1. இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு தனியான தேசிய இனம்.
2. 1948 பெப்ரவரி 4-ல் இலங்கைப் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டவர்களும் அவர்களது இயற்கை அதிகரிப்புமே இலங்கைப் பிரஜைகளை தீர்மானிக்கும் காலநியமம்.
3. இம் மக்கள் தமக்கான பாரம்பரிய பிரதேசம் உடையவர்கள்.
4. இப் பிரஜைகள் அவர்கள் வாழும் பாரம்பரிய பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமையுடையவர்கள்.
5. இவர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவான தேசிய அமைப்பை நிறுவ உரித்துடையவர்கள்.

இவ் ஐந்து அம்சங்களினூடாகவும் தமிழ் பேசும் மக்கள் தமது பிரச்சனையின் தனித்துவத்தை அங்கீகரிக்கக் கோரி நிற்பது வெளிப்படையானது. இத்தனித்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் கொள்கை ரீதியான இணக்கம் ஏற்பட்டு அரசியல் யாப்பில் திருத்தம் ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே நடைமுறைத் தீர்விற்கான வழிமுறை எதையும் தேடிக் கொள்ள முடியும். □

# ஒரு தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை பிறப்புரிமையாகும்

## மாநாட்டில் மணியரசன் வலியுறுத்தல்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்றே அறியப்பட்டாலும் ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் என்பதே சரியானதாக இருக்கும். ஏனெனில், இலங்கையின் எதிர்க்கட்சியும் ஆதரிக்கவில்லை; ஆளுங்கட்சியில் பெரும்பகுதியும் ஆதரிக்கவில்லை; ஜெயவர்த்தனா அமைச்சரவையில் அன்றைக்கு பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவும் ஆதரிக்கவில்லை. இந்தியாவில் எதிர்க்கட்சிகளும் ஆதரிக்கவில்லை. இலங்கையில் ஜெயவர்த்தனா பதவி பறிபோனதும் இந்த ஒப்பந்தத்துக்கு என்ன கதிநேர்ந்ததோ அதே கதிதான் ராஜீவ் காந்தி பதவி பறிபோனதும் ஏற்படும்.

இந்த ஒபபந்தத்தில் முதல் சூழ்ச்சி அல்லது ஊனம் இந்தப் பிரச்சனையை ஒரு தேசிய இனப் பிரச்சனையாக அங்கீகரிக்க மறுத்ததாகும். இலங்கையினுடைய பிரச்சனை ஒரு தேசியஇனப் பிரச்சனை. இதில் பல முரண்பாடுகள் இருந்தாலும் முற்றியிருக்கும் முதல் முரண்பாடு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடு. சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையும் அந்த ஒடுக்குமுறைக்கு உள்ளான ஈழத் தமிழர்களின் ஆயுதமேந்திய சுய நிர்ணயவுரிமைப் போராட்டமும் தான் இன்றைக்கு இலங்கையில் பிரதானப் பிரச்சனையாக இருக்கின்றது. இன்றைக்கு இந்தியப்படை இலங்கையிலிருக்க வேண்டும் என்கிறார்கள் சிலர்; இல்லை வெளியேற வேண்டும் என்கிறார்கள் சிலர். ஆனால், இந்தியப்படை வெளியேறவேண்டும் என்று கோருபவர்கள் அனைவருமே தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் கருதிவிட முடியாது.

இந்த ஒப்பந்தம் மட்டும் ஏற்படாமல் இருந்திருந்தால், யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து ஒரு புரட்சி உண்டாகி, அதன் மூலம் ஒரு அரசே அமைந்திருக்கும். அது இந்த ஒப்பந்தத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஈழத்திலிருந்து இந்தியப்படை எந்தவித நிபந்தனையின்றி ஒட்டுமொத்தமாக வெளியேற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஒரு நாட்டின் உள்ளே ஒரு பொம்மை அரசாங்கமோ அல்லது மக்களுக்கு விரோதமான ஒரு சர்வாதிகாரியோ அந்நிய நாட்டுப் படையை அங்கு வரச்சொல்லி ஒரு போர் நடத்தினால், சர்வதேச சட்டம் அதை அனுமதிக்காது. அதற்கு வரலாறு இருக்கிறது.

விடுதலைப் புலிகள் இப்பொழுது தனி ஈழப் பிரச்சனையை கைவிட்டு விட்டார்கள் என்றார்கள் தமிழகத்திலே சில பத்திரிகையாளர்கள். அதற்கு என்ன ஆதாரம்? 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் விதிமுறைகள் கொண்டு வரப்பட்டது. (Government of India rules) அதுவரையிலே இந்தியாவிலே தேர்தலைப் புறக்கணித்து வந்த காங்கிரசு கட்சி அதன்பிறகு தேர்தலில் கூட பங்கு எடுத்தது. மாகாண அரசின் ஆட்சி செய்தது. அப்படியானல், அன்றைய நிலையில் காங்கிரசு சுதந்திரப் போராட்டத்தை கைவிட்டது என்று அர்த்தமா?

பழைய தலைமைகளின் மூளைகள் மலடு தட்டிப் போய்விட்டன. அவைகளிலே புதிய சிந்தனை பிறப்பதற்கான வாய்ப்பே இல்லை. எனவே, எங்கே இருந்தாலும் இன்றைய இளைஞர்களே புதிய சிந்தனைகளை பிரசுரியுங்கள் அதற்கு முன் வாருங்கள். □

படிப்பகம்

www.padippakam.com

# மலையகத் தமிழ் மக்களுக்கான மண்ணை மீட்கப் போராடுவோம்

*ஈழம் குடிபெயர்ந்தோர் அமைப்புச் சங்க*
*தேவதாஸ் உரிமைக் குரல்*

கோப்பி பழுத்திருச்சு
கொண்டு போக நாளாச்சு
சீமைத் துரைகளெல்லாம்
சிரிக்கிறாக சன்னலிலே.

எங்களுடைய கஷ்டங்களை, துன்ப உணர்வுகளை கோப்பிக் காட்டில் வேலை பார்க்கும் ஒரு பெண் எப்படி பாடுகிறாள் பார்த்தீர்களா?

நிலவுடைமைச் சமுதாயத்தில் இருக்கிற கொடுமையை,

"நாலு மணி நேரத்துல
நாத்து நடும் சின்னப் பொண்ணு
கோணி கொஞ்சம் நட்டியன்னா
கூலிதர மாட்டாம் புள்ள"

என்று ஒரு கணவன் பாடுகிறான்.

அப்படிப்பட்ட காலகட்டத்திலதான் இலங்கைக்கு நாங்கள் போய் இலங்கை நாட்டினுடைய 65 சதம் பொருளாதாரத்தை உண்டுபண்ணி உழைச்சோம். அதை ஒரு பெண் பாடுகிறாள்,

'அட்டை கடியும்
அரிய வழி நடையும்
கட்டை இடருவதும்
காணலாம் கண்டியிலேன்னு.'

அவ்வளவு கொடுமையான அந்தக் காடுகளை நாங்க வளப்படுத்தினோம்.

அந்தப் பாடலைக் கேட்ட இன்னொரு பெண்,

"கூனி அடிச்ச மலை
கோப்பிகன்னு போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தோ தெரியுதடி"ன்னு

பாடுவாள்.

காட்டை அழிச்சு கோப்பிகன்னு நட்டி, வளப்படுத்தி நாங்க இன்னைக்கு வச்சுருக்கோம். அதுல அட்டைப்பூச்சி கடிக்கிறதும், கட்டை இடருவதும்தான் பிரச்சினையின்னு நீ சொல்றே. ஆனா அன்னைக்கு பெரிய பெரிய மலைச்சரிவுகள் சரிந்து விழுந்து எங்கூடப் பிறந்த அண்ணனையே தோத்தோமடி என்று பாடுவாள். இப்படி எவ்வளவு இழந்திருக்கோம் தெரியுமா?

இப்படி பாரம்பரியமாகவே இலங்கைக்கு பொருளாதார வளத்தை ஏற்படுத்திக் கொடுத்த இந்த சமுதாயத்தை — இந்த மக்களை அலைக்கழிக்கலாமா? பிரிட்டானிய பெண்கள் குலம் மகிழ்ந்து தேநீர் அருந்துவதற்காக எம்மக்கள் படும் கஷ்டம் — பட்ட கஷ்டம் — கொஞ்சமா? அதே மாதிரி இந்த தேநீருக்கு சர்க்கரை சேர்ப்பதற்காக எம்மக்கள் பிஜித்தீவிலே கரும்புக் கொல்லையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களது வாழ்க்கையே இப்படி ஆகிவிட்டது.

இந்தியாவிலே சும்மா புறம்போக்கு நிலத்திலே ஒருவர் ஒரு வீட்டைக் கட்டுகிறார். கொஞ்ச நாளில் அந்த வீடு எனக்கே சொந்தம் என்று சொல்லி விடுகிறார். அதுக்கு எந்தத் தடையும்இல்லை. ஆனால், 164 வருஷகாலமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காகத் தானே இந்த மக்கள் உழைச்சாங்க. நீங்கள் அந்த மக்களோட பிரஜா உரிமையை ரத்து பண்ணினது மட்டுமல்லாம அதே மக்களை நாடு கடத்துறதுக்காக அந்த மக்கள் வாழுகிற மண்ணிலேயே வந்து ஒப்பந்தம் போட்டீர்களே, இது மனிதாபிமான செயலா? இதற்காக இந்த இடதுசாரிகள் இதைக் கண்டித்து ஒரு போராட்டமாவது நடத்தினார்களா? நடத்தவில்லை. கடைசியில் என்ன ஆனது? அங்கே இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. இங்கே பிழைப்பு தேடி வந்தவர்களுக்கும் நிம்மதி இல்லை.

எனவே தமிழக மக்களே, 164 ஆண்டுக் காலம் அந்த மண்ணிலேயே உழைத்துக் கிடக்கின்ற அந்த மக்களுக்கு அந்த மண்ணை மீட்டுத் தருகின்ற போராட்டத்தை இங்கே தமிழகத்திலே துவக்கியாக வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். □

படிப்பகம்

www.padippakam.com

*புத்தகக் கண்காட்சி □ ஓவியக் கண்காட்சி □ 'நந்தன்' நாடகம்*

□

## தமிழ்ச் சமுதாயத்தின் கலை மரபுகள் — வாழ்வியல் மரபுகள் பற்றிய

# கலை மாநாடு

□

ஈழத் தமிழ் மக்கள் நடத்தும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு தமது முழு அங்கீகாரத்தையும் ஆதரவையும் வழங்கும் ஈழ நண்பர் கழகம் 1985ஆம் ஆண்டு தோற்றம் எடுத்தது.

ஈழ நண்பர் கழகம் தொடர்ந்து போராளி அமைப்புகளின் ஒற்றுமையை வலியுறுத்துவதோடு ஈழத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டுமொத்த உள்ளக்கிடக்கைகளுக்கே முக்கியத்துவம் தருகிறது.

ஈழப் போராட்ட ஆதரவு என்ற அடிநாதத்தோடு, தமிழ் மக்களின் சமுதாயப் பிரச்சினைகள், கலை மரபுகள் பற்றியும் கவனம் செலுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில் ஈழ நண்பர் கழகம் தனது முதலாவது கலை மாநாட்டை மதுரையில் ஆகஸ்டு 19, 20 ஆகிய நாட்களில் நடத்தியது. அந் நிகழ்ச்சிகளின் தொகுப்புச் சுருக்கம் வருமாறு :

□

மாநாட்டுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசிய வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் பொன் இளங்கோவன், "இந்திய அரசு ஈழத் தமிழர் போராட்டத்தை தொலைக்காட்சி, வானொலி போன்ற பிரச்சார சாதனங்களைப் பயன்படுத்தி கொச்சைப் படுத்திக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் நாம் எடுக்கும் இம்மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்" என்றார்.

ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய பேராசிரியர் எஸ். பி. சீனிவாசன், கனவும் எதார்த்தமும் சேர்ந்ததுதான் கலை என்று குறிப்பிட்டு, ஈழத் தமிழருக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஒரு பாலமாக அமையும் வண்ணம் இந்த ஓவியங்களை, ஓவியர்கள் வடித்துத் தந்திருக்கிறார்கள் என்று கூறினார்.

புத்தகக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய பேராசிரியர் செ. போத்திரெட்டி, கலை இலக்கியப் பணிக்கு ஈழம் ஆற்றிய பங்கை நினைவு கூர்ந்து, ஆரோக்கியமான இலக்கியப் பாரம்பரியத்துக்கு அன்றும் இன்றும் ஈழம் தமிழகத்திற்கு வழிகாட்டியாகவே இருந்து வந்திருக்கிறது, இருந்து வருகிறது என்றார்.

விழா மேடையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய புலவர் ந. கௌதமன் அவர்கள், இந்தியத் தேசியக் காவலனாக அரும்பி, தமிழ்த் தேசியக் காவலனாக வளர்ந்தவர் பாரதிதாசன். தென் திசையைப் பார்க்கின்றேன் பூரிக்கிறது தோள்கள் அடடா! என்று சொன்னார். ஆனால் இன்று அங்கே அப்படி இல்லை. உரிமைக்காக இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த உரிமை எண்ணத்தை எவராலும் அழித்துவிட முடியுமா?

"காட்டை அழிப்பதும் கூடும்
கடலைத் தூர்ப்பதும் கூடும்
மேட்டை அகழ்வதும் கூடும்
விரிவானையும் அளப்பதும் கூடும்

படிப்பகம்

www.padippakam.com



ஏட்டையும் நூலையும் தடுப்பதும் கூடும்
உரிமை எண்ணத்தைத் தடுப்பது எங்ஙனம்
கூடும் ?"

என்று கேட்டார் பாரதிதாசன். அப்படிப்பட்ட பாரதிதாசனின் வரிகள் இன்றைக்கும் ஈழத்தில் உயிரோட்டமாக உள்ளன என்றார்.

மாநாட்டைத் தொடங்கி வைத்து தொடக்க உரையாற்றிய பேராசிரியர் இரா. இளவரசு அவர்கள், தமக்கும் ஈரோசிற்கும் இருந்துவரும் பல்லாண்டுகால இறுக்கமான உறவை நினைவு கூர்ந்து, ஈரோசின் செயல்பாடுகளை அறிவார்ந் தவர்களின் செயல்பாடு என்று வருணித்தார்.

ஈழத் தமிழருக்கே உரிய சொந்தக் கலை வடிவங்களின் மூலமாக தமது போராட்டக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவர்கள் ஈரோஸ் இயக்கத் தினர். உலகெங்கும் வாழும் நாடுகளில் தமிழர் களின் பங்கு அதிகமாக இருக்கும் ஒரு நாடு இருக்கிறது என்று சொன்னால் அது ஈழம் என்றே சொல்வேன் என்று கூறிய இளவரசு ஈழத் தமிழர்கள் அறிவார்ந்த தமிழர்களாக இருக்கிறார்கள் — என்று பல சான்றுகளைக் காட்டி மெய்ப்பிக்கலாம்; ஆனால், இன்றைய நிலையில் இலங்கையில் நடைபெறுவதை போராட்டம் என்று சொல்வதா அல்லது சூதாட்டம் என்று சொல்வதா? தெரியவில்லை என்று தமது கவலையை வெளியிட்டார்.

மாநாட்டின் இரண்டாம் அமர்வில் இடம் பெற்ற, தமிழர் வாழ்வியல் மரபு நல்லதும் கெட்டதும் மற்றும் பெண் : சமூக மதிப்பீடும் விடுதலையும் ஆகிய கருத்தரங்குகளுக்கு வர வேற்புரை ஆற்றிய தோழர் ச. மா. பன்னீர்ச் செல்வம், "பெண்களின் பிரச்னைக்கு தீர்வை பெண்களேதான் முன்வைக்க முடியும் என்றும் அத்தீர்வை அவர்களே அடைய வேண்டும் என்றும் குறிப்பிட்டுவிட்டு, தமிழர் வாழ்வியல் மரபில் 'தாராள மனப்பான்மை' நீக்கப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கிற்கு தலைமையேற்ற முனைவர் கு. திருமாறன் அவர்கள், தமிழர் வாழ்வியல் மரபு பற்றி தமிழ் இலக்கண இலக் கியங்களிலிருந்து மேற்கோள் காட்டினார். ஒரு கால கட்டத்தில் புதுமையாக இருப்பது, அந்தப் புதுமையே பிற்காலத்து மக்களால் பொதுவாக ஏற்றுக் கொண்ட வழக்கமாகி அதுவே அடுத்த தலைமுறைக்கு வருகின்ற பொழுது மரபாகி விடுகிறது. அதாவது, ஒரு காலப் புதுமை மறுகால மரபாகி விடுகின்றது என்று மரபின் வளர்ச்சியை விளக்கிப் பேசினார். அடுத்து, நல்லதும் கெட்டதும் என்ற இரண்டும் சார்புநிலைச் சொற்கள். எனவே இது தனி மனிதனுக்குரிய நல்லது என்றோ கெட்டது என்றோ பார்க்க முடியாது. இது இந்த தமிழ்ச் சமூகத்துக்கானது என்றார்.

கருத்தரங்கில் பேசிய அறிவுமதி, நம் முடைய தமிழர் வாழ்வியல் மரபு என்பது, கிராமிய இசைப் பாடலாய், தாலாட்டாய், ஒப்பாரிப் பாடலாய், கும்மிப் பாட்டாய் கோலோச்சுகின்றன என்று விரிவாய்ப் படம் பிடித்துக் காட்டினார். மாடர்ன் ஆர்ட் என்று கோடுகளைப் போட்டுக் கொண்டிருந்தவர்கள், அதையே எளிமைப்படுத்தி கலை வடிவத்தில் இன்றைக்கு வென்றிருக்கிறார்கள் என்றார். ஈழத்தில் களத்திலே போராளிகள்! நாம் இங்கே கலை மாநாடு நடத்திக் கொண்டிருக் கிறோமே! இது முரண்பாடா ? இல்லை. தமிழுக்கு மிக உன்னதமான இலக்கியங்களை தந்தது ஈழம்தான். தூரிகை ஏந்தி நின்ற வர்கள் துப்பாக்கி ஏந்தி அடுத்த கட்டத்துக்குப் போய் விட்டபிறகு, நாம் கலை இலக்கிய வடிவத்திலாவது நம்முடைய கடமையைத் தொடர வேண்டாமா? என்று கேட்டார்.

இளவேனில் தமது உரையில், மரபு என்பது ஒரு தொடர் நிகழ்வு. புதிய கருத்துக்கள் மலர மலர அது பழமையை உடைத்துக் கொண்டு புதி தாய் உருவாகி வருகிறது. பழமையில் உள்ள சிறப்பம்சங்களையெல்லாம் தன்னுள் கிரகித்துக் கொண்டு மீண்டும் புதிதாய் வளர்கிறது என்பது தான் மரபு. இதில் நல்லதும் கெட்டதும் விவாதத்துக்குரியது ஆனால் நாம் அனைவருக் கும் ஒரு தேசிய இனப் பிரச்சனையின் மீதான கருத்து மேலோங்கியிருக்கும் இந்நிலையில் கவிதையின் மரபாகவோ கலையின் மரபாகவோ கொண்டு வராமல் இதனை வாழ்வியல் மரபாகவே பார்க்கிறேன் என்று விளக்கிய அவர் ஈழப் பிரச்சனை நமக்குக் கற்றுத் தருவது ஒரு தேசிய இனத்தின் மீது இன்னொரு தேசிய இனத்தின் ஒடுக்குமுறையை—பாசிசத்தை அனு மதிக்க முடியாது என்பதைத்தான் என்று கூறினார்.

பெண்கள்: சமூக மதிப்பீடும் விடுதலையும் எனும் கருத்தரங்கிற்கு தலைமையேற்ற முனைவர் திருமாறன், இந்தச் சமூகம் அன்றிலிருந்து இன்று வரை ஆணாதிக்கச் சமூகமாகவே இருந்து வருகிறது. ஆனாலும் இந்தச் சமூகத்தில் பெண்களைப்பற்றிய சமூக மதிப்பீடு மட்டும் இன்னும் மாறாமல் இருந்து வருவது உண்மை. இது மாற வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் பேசிய செல்வி பொற்கொடி தமது உரையில், சமூக மதிப்பீடு என்பது

படிப்பகம்

www.padippakam.com



காலத்துக்குக் காலம் மாறக்கூடியது. பெண்களைப் பொருத்தவரை மேடையேறி தங்கள் கருத்துக்களை பேசுகிற அளவுக்கு அவர்கள் உயர்ந்திருக்கிறார்களே தவிர ஒட்டு மொத்தமாக வளர்ந்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஆணுக்கு பெண் அடிமை; ஆனால் பெண்ணுக்கு பெண்ணே அடிமை. இதுதான் இன்றைய உண்மை என்று கூறினார்.

செல்வி சுப்புலட்சுமி பேசுகையில், பெண் விடுதலை பற்றி இப்பொழுதெல்லாம் பேசுவது ஒரு நாகரிகம் போலவே ஆகி விட்டது. விடுதலை, விடுதலை என்றால் எங்கு விடுதலை, எப்படி விடுதலை? எனவே பிரச்சனைகளின் வேர் மூலத்தை முதலில் அறிய வேண்டும். பெண்கள் தாங்களாகவே புரிந்து கொண்டு எழுச்சி பெறுகின்ற போதுதான் பெண்களுக்கு விடுதலை என்பதே கிடைக்கும்; அதுவரை விமோசனமே இல்லை என்று வருத்தம் தெரிவித்தார்.

திரு நாகார்ஜுனன் தமது உரையில், பெண்களின் மீதான ஒடுக்குமுறை காலங்காலமாக இருந்து கொண்டேதான் இருக்கிறது. வருகின்ற வடிவம் வேண்டுமானால் வேறுபட்டிருக்கலாமே தவிர ஒடுக்குமுறை மட்டும் இன்னும் ஒழிந்த பாடில்லை. இந்தப் பிரச்சனைகளின் ஊற்றுக்கண் எங்கிருக்கிறது என்று சொன்னால் அது சமூக மதிப்பீட்டில் தான் தங்கி இருக்கிறது. ஆ , வரலாற்றுப் பிரச்சனையாக மட்டுமின்றி வர்க்க அடிநிலைக் கலைகளைக் கூடத் தாண்டிய பிரச்சனையாக பெண் அடக்குமுறை உள்ளது. ஜனநாயக உரிமைகள், சமூக அந்தஸ்துகள் எப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கில்லையோ அது மாதிரி பெண்களுக்கு இங்கே 'விடுதலை' என்பதே கிடையாது என்றார்.

பேராசிரியர் சரசுவதி இராசேந்திரன் உரையாற்றுகையில், பெண் விடுதலை பற்றி ஒரு 60 ஆண்டுகளாகப் பேசப்பட்டுத்தான் வருகிறதே யொழிய அதனால் எந்த வடிவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. உலகத்தின் மொத்த மக்கள் தொகையில் பாதி பெண்களாயிருப்பதாலும் உழைப்பில்70 சதவிகிதம் பேர் பெண்கள்தான். இந்தச் சமூகம் ஆணென்றும் பெண்ணென்றும் புறத்தோற்றத்தை வைத்துக் கொண்டுதானே பிரிக்கிறது. புறத் தோற்றத்தை வைத்துக் கொண்டா பெண்களை அடிமைப்படுத்துவது? அது ஒரு பெரிய மோசடி இல்லையா? என்று கவலை தெரிவித்த சரசுவதி இராசேந்திரன் அவர்கள் வேறு எந்த ரீதியில் பெண் ஆணுக்குக் குறைந்தவளாக இருக்கிறாள்? உழைப்பு ரீதியிலா? வலிமை ரீதியிலா? எந்த ரீதியில் என்று வினாத் தொடுத்தார்.

மாநாட்டின் முதல் நாளின் கடைசி நிகழ்ச்சியாக இரவு 9 மணிக்கு இந்திரா பார்த்தசாரதி எழுதி, பேராசிரியர் இரா. இராசு இயக்கிய 'நந்தன் கதை' நாடகம் நடத்தப் பட்டது. இஃது பார்வையாளர்கள் அனைவராலும் பாராட்டப்பட்டதற்குக் காரணம் நாடகத்தின் புதிய பார்வையும், இயக்குநரின் சீரான இயக்கமுமே என்றால் அது மிகையாகாது. இரவு 11 மணிக்கு நாடகமும் முதல் நாள் நிகழ்வுகளும் நிறைவு பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் தொடக்கமாக, பொதியவெற்பன், அறிவுமதி, பொற்கொடி, வண்ணமதி, கே.ஏ. குணசேகரன் ஆகியோர் பங்கு பற்றிய கவிதா நிகழ்வு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து மாநாட்டின் இரண்டாவது நாளின் முதல் அமர்வாக நாகார்ஜுனன் தலைமையில் கலைகள் : அறிமுகமும் விமர்சனமும் என்னும் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் உரையாற்றிய பிரபஞ்சன், கலைகள் மனித வாழ்க்கையில் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்து கொண்டது. எனவே, அந்தக் கலைகளில் ஆராக்கியத்தை பாய்ச்சிவிட வேண்டும். மனிதன் கற்பனைப் படைப்பிலே எத்தனை ஓவியங்களைப் படைத்தான். அவனுக்குப் போய் நவீனம் கிடைக்கவில்லை என்பதை நம்மால் நம்ப முடியவில்லை. ஆனால் இன்று மக்களின் மிகப் பெரிய கலை வடிவமாக இருக்கின்ற தமிழ் சினிமா என்கிற கலை வடிவம் இன்று மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இல்லை என்று கவலை தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் இந்திரன், சுலைமான், தி. சிகாமணி, மற்றும் கோணங்கி ஆகியோர் உரையாற்றினர். தோழர் மு. இராசேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இரண்டாம் நாளின் இரண்டாவது அமர்வாக மதிய உணவு இடைவேளைக்குப் பின் தோழர் இரா. திரவியத்தின் வரவேற்புரையுடன், பேராசிரியர் கு. வே. கி. ஆசான் தலைமையில் தமிழ்ச் சமுதாயத்தில் சாதியமும் சாதிய ஒழிப்பும் என்னும் கருத்தரங்கம் நடைபெற்றது. தோழர் திரவியம் தமது வரவேற்புரையில் சாதிய மேடைகளிலே ஏறுவது ஒரு தாழ்வான செயல் அல்லது பிற்போக்கானது என்று கருதிய காலம் போய், சாதிய ரீதியாக அணி திரட்டுகின்ற கால கட்டத்திலே — தமிழ்த் தேசியம் ஒன்றுபட வேண்டுமென்று சொன்னால்— முதலில் ஒழிக்கப்பட வேண்டியது சாதி தான்

படிப்பகம்

www.padippakam.com



எனச் சொன்னால் அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்றார்.

கு. வே. கி. ஆசான் தனது தலைமையுரையில், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் சாதியம் தோன்றியது எப்படி என்பதை வரலாற்றுப் பின்னணியோடும் காலப் பின்னணியோடும் வரிசைப்படுத்திக் காட்டினார். பிராமணன்—சூத்திரன் என்ற படிநிலையை ஏற்படுத்தி அதற்கு இடையில் இருக்கின்ற புலங்களெல்லாம் சாதியங்களாக மாறிவிட்டன என்பதுதான் இந்தச் சாதியத்தின் வரலாறு என்று அடுக்கிக் காட்டிய ஆசான், இதை ஒழித்துக்கட்ட அகில இந்திய அளவில் தமிழ்நாடு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இக்கருத்தரங்கில் பேசிய தமிழ்மாறன் தனது உரையில், ஒவ்வொரு தேசிய இனமும் சுய உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் என்றைக்குத் தன்னைத் தானே விடுவித்துக் கொண்டு சுதந்திரமாக வாழ முற்படுகிறதோ அன்றுதான் இந்தச் சாதியும் சாதியமும் ஒழித்துக் கட்டப்படும். இந்தச்சாதிகளை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டுமென்றால் முதலில் மக்கள் நூற்றுக்கு நூறு கல்வி பெற்றாக வேண்டும். அதுவரை நாம் சாதியத்திற்கு எதிரான எழுச்சிக்கு கலை வழியாகவும் செயற்பட வேண்டியுள்ளது என்றார்.

முனைவர் கோ. கேசவன் தமது உரையில் சாதியம் என்பது ஒரு சதி என்று வர்ணித்தார். சாதி என்பதை அந்தந்தக் கால அரசியல் நிலைமைகளோடு மட்டும் சம்பந்தப்படுத்திப் பார்க்கக்கூடாது. சாதி என்பதை அந்தந்தக்கால பொருளாதார நிலைமைகளோடு சம்பந்தப்படுத்திப் பார்க்கவேண்டும்; வாழ்க்கை நிலைகளோடு சம்பந்தப்படுத்திப் பார்த்திருக்க வேண்டும். காலங்காலமாய் சமய மாற்றம் கூட தமிழ் மண்ணில் அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த சாதி மாற்றம் மட்டும் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லையே என்று தமது வேதனையை வெளியிட்டார். மேலும் இவர் தமது உரையை தமிழகத்தை மையமாகக் கொண்டு வரலாற்று வழி நின்று ஆய்வு ரீதியில் பேசினார்.

மாநாட்டின் அடுத்த நிகழ்வாக ஈழ நண்பர் கழகத்தின் தீர்மானங்கள், தோழர்கள் பொன். இளங்கோவன், அ. தனசேகரன், மு. இராசேந்திரன், ச. மா. பன்னீர்செல்வம், க. இளம்பிறை, பி. பெரியசாமி, பெரியார்பேரன் என்ற பாலு, கருணானந்தன் ஆகியோரால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டின் இறுதி அமர்வாக இலங்கை-இந்திய ஒப்பந்தமும் இன்றையச் சூழலும் என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கைத் தலைமையேற்று நடத்திய தோழர் அறிவுறுவோன் தமது உரையில், அமைதிப்படை என்ற பெயரில் எந்த ஒரு நாட்டுப் படையும் இன்னொரு நாட்டுக்குள் புகுந்து அங்கு அமைதியை நிலை நாட்டியதாக வரலாறே கிடையாது. அதைத்தான் இந்தியப் படை இப்போது இலங்கையில் செய்து கொண்டிருக்கிறது. இந்தியப் படை இலங்கைக்குள் பிரவேசித்ததற்குப் பிறகு அங்கே தமிழ்ப் பகுதியிலும் அமைதியில்லை: சிங்களப் பகுதியிலும் அமைதியில்லை. இலங்கையே ஒரு பிணக்காடாக மாறிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தமாவது வென்றிருக்கிறதா? அதுவும் இல்லை என்றார்.

இக்கருத்தரங்கில் பத்திரிக்கையாளர் ஏ. எஸ். பன்னீர்செல்வன், தேவதாஸ், எஸ். வி. ராசதுரை, பெ. மணியரசன், பழ. நெடுமாறன், சின்னபாலா ஆகியோர் ஒப்பந்தம் பற்றி தமது பார்வையை வைத்தனர். மாநாடு இரவு 11.30 மணியளவில் தோழர் திரவியத்தின் நன்றியுரையுடன் நிறைவடைந்து தோழர்களுக்கு ஒரு நிறைவான மகிழ்வையும் பெருமிதத்தையும் கொடுத்தது.

□


# பாலம்

## இலக்கிய இதழ்

தனி இதழ் விலை ரூபாய் மூன்று □ ஆண்டுச் சந்தா ரூபாய் முப்பது

□

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. திரவியம்

□

அனைத்துத்தொடர்புக்கும்

நிர்வாகி, பாலம்,

12, முதல் பிரதான சாலை, நேரு நகர், அடையாறு, சென்னை-600 020.


படிப்பகம்

www.padippakam.com

# சோகத்தைச் சுமக்கும் தேசத்திலிருந்தொரு செய்தி

இளையவன்

எமது இனிய நண்பர்களே!
சோகத்தைச் சுமக்கும்
தேசத்திலிருந்தொரு செய்தி
சொல்ல வந்தேன்.
சென்னைத் தெருக்களில்
மெரீனாவின் முதுகில்
சினிமாக் கொட்டகைகளில்
அந்த நாட்களில்
கை கோர்த்த களிப்பு
நெஞ்சில் துள்ளும்.

ஆண்டுகள் இத்தனை
ஆன பின்னாலும்
மீண்டும் எம் சந்திப்பு
சாத்தியப்பட்டது
அதிசயம் தான்.

□

எங்கள் தேசத்தின்
சரிந்த உடல்களை எண்ணிக்காட்டி
ஒப்பாரி ஓலம் நாம்
எழுப்ப வேண்டியதில்லை

எமது மக்களைத் தின்று தீர்க்க
கங்கணம் கட்டும்
துப்பாக்கிக் குழல்களின்
கொடுமையைச் சொல்லி
அனுதாபம் தேடுதல்
நம் பணியல்ல.

காந்திய நாட்டிலிருந்து
வந்தவர்கள் கூட
காட்டுமிராண்டிகளாய்
மாறியது எப்படி?

பிரேத பரிசோதனை
வேண்டியதில்லை.
பூசை தொடங்கு முன்பே
சந்நதம் கொண்ட
பூசாரிகள்
பூக்களுக்குப் பதிலாய்
தலைகளைக் கொய்ய...

எங்கள் தேசம்
இருளில் மூழ்கும்
கறுத்த இருளில்
குருடர்கள் வழிகாட்டலில்
முடவர்கள் நடக்கலாம்.

வேதனை மட்டுமே
எங்களுக்கு எஞ்சலாம்.
பிரசவ வேதனையில்
ஈழம் இன்று.

வேதனை, வலி, இழப்பு
அனைத்தையும் மீறி,
பூமிப்பந்தில் எங்கள்
தேசப்படம் குறிக்கப்படும்...
நம்பிக்கையை விதைத்துச்
செல்கிறேன்

□

மானுடத்தை மீட்டெடுத்த
மக்களாக
கை குலுக்கிக் கொள்ளும்
காலம் வரும். □

படிப்பகம்

www.padippakam.com

# ஈழ நண்பர் கழக கலைமாநாடு

## ஆகஸ்டு 19, 20, 1989

## *மாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்*

### தீர்மானம்-1

### *நமது ஜனநாயகக் கடமை*

இந்தியா சுதந்திரம் பெற்றதையடுத்து இலங்கை சுதந்திரத்திற்கான போராட்டமும் வலுப்பெற்றது. இந்தியாவில் நடந்தது போலவே இலங்கையிலும் முதலாளி வர்க்கத் திடமே அதிகாரத்தை ஆங்கில ஏகாதிபத்திய அரசு மாற்றிக் கொடுத்தது. அதைத் தொடர்ந்து இலங்கையில் சிங்கள முதலாளிகள் பேரினவாதத்திற்குப் பலியானதோடு மக்களையும் அதே திசைவழியில் தள்ளிவிட்டனர். அதன் விளைவாக தமிழ் மக்களில் இந்திய மரபினரான மலையக மக்கள் மீது தாக்குதலைத் தொடுத்து அவர்களை நாடற்றவர்களாக்கினர். அதைத் தொடர்ந்து இலங்கையின் ஒரு தேசிய இனமான தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுத்தனர்.

தமிழ்மக்கள் மிகுதியாக வாழும் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களைச் சிறுபான்மையினராக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தமிழ் மொழிக்கு சிங்கள மொழிக்கு இணையான அந்தஸ்து வழங்க மறுத்தனர். தமிழ் மாணவர்களுக்கு மதிப்பெண் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தும், போலீஸ், இராணுவம் போன்ற துறைகளில் தமிழ் மக்களைப் புறக்கணித்தும் வேலை வாய்ப்புக்களை பறித்தெடுத்தனர். அனைத்துத் துறைகளிலும் சிங்களவரே ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டது.

இந்நிலை, சிங்கள தேசிய இனம் பச்சையாகத் தமிழ் தேசிய இனத்தை நாடாளுமன்ற வரம்பிற்குட்பட்டே நசுக்க முடியும் என்பதை நிரூபித்தது.

இலங்கையில் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் யாழ் நூலகம் எரிக்கப்பட்டதும் நாடாளுமன்ற மரபையும் மீறி, இனவெறி ஓர் அரச பயங்கரமாக அரங்கேற்றப்பட்டு விட்டதையே குறிக்கின்றன.

அடுத்து, பௌத்த மதத்தை அரச மதமாக அங்கீகாரம் செய்து கொண்டதன் பேரில் மதம் சார்ந்த பேரினவாதமாக உருமாறித் தமிழ் மக்களைக் காட்டுமிராண்டித்தனமாக வேட்டையாடும் வடிவத்தை எடுத்தது.

இந்த நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் தனி ஈழக் கோரிக்கையை வைத்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர். மதச் சார்பு பேரினவாதிகளுக்கு எதிரான இவ்வாயுதப் போராட்டத்தை மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள். இந்தப் பின்னணியிலேயே தமிழ் மக்களின் அரசியல் கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரை வரித்துக் கொண்டதும், தனிநாடு கோரிக்கையை முன்வைத்து தமிழ்ப் பகுதியில் பெரு வெற்றியை ஈட்டியதும் நடைபெற்றது. இது இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு ஒரு தார்மீக பலத்தை அளித்தது.

இந்த நிலையில்தான் சிங்கள இனவெறி அரசு பிரிவினை தடைச் சட்டத்தை இயற்றி, தமிழ்மக்களின் பிரதிநிதிகளைத் தகுதியிழக்கச் செய்ததும் நடந்தது. இதையடுத்து '1983 ஜூலைக் கலவரம்' என்று பெயர் பெற்ற இராணுவத் தாக்குதலும் அவசரநிலையும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவிற்கு வர நேர்ந்தது. இதைத் தொடர்ந்தே ஈழம் என்ற கருத்துருவமும் அதற்கான ஆயுதப் போராட்டமும் மக்களின் பாதுகாப்பிற்கான வடிவமாகப் பிரபல்யம் அடையத் தொடங்கின.

எனவே, இலங்கையில் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கான நிரந்தரமான சரியான தீர்வினை இந்திய-இலங்கை ஒப்பந்தமானாலும் சரி, இலங்கை அரசானாலும் சரி முன்வைக்காத வரை தமிழ்ப் பேசும் மக்களின் போராட்டப் பாதையை ஆதரிப்பது இந்திய மக்களாகிய நமது ஜனநாயகக் கடமை என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம்-2

### *தியாகிகளுக்கு இரங்கல்*

இலங்கையில் சிங்களப் பேரினவாதமும், மதச் சார்பும் அரச பயங்கரவாதமாக கோர வடிவெடுத்து ஜனநாயகத்தையும் அதன் நிறுவனங்களையும் தகர்த்து உருமாற்றி விட்டன. நாட்டின் எந்த மூலையிலும் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை தோன்றியுள்ளது. இந்த மோசமான நிலைமைக்கு முடிவு கட்டுவதென்றால் தமிழ் மக்களின் தேசிய இனச் சிக்கலுக்குத் தீர்வு காணாமல் முடியாது. இந்தச் சூட்சுமத்தை முன்கூட்டியே தீர்க்கதரிசனத்தோடு புரிந்து கொண்டு தமிழ்த் தேசிய இனக் கோரிக்கை

படிப்பகம்

www.padippakam.com



களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் வகையில் அரச பயங்கரவாதத்திற்கு எதிராகவும் சிங்கள பௌத்தப் பேரினவாதத்திற்கு எதிராகவும் ஆயுதப் போராட்டத்தையும் போராளிகள் அமைப்புகளையும் வடிவமைத்து நடத்த மூலமுதல்வனாக இருந்து களப்பலியான சிவகுமாரன் முதல் தன்னலங்கருதாது இன்னுயிர் ஈந்த போராளிகளைத் தியாகிகளாக அங்கீகரித்து அனைவருக்கும் இம்மாநாடு தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம்-3

## இந்திய-இலங்கை ஒப்பந்தம்

இலங்கை அரசின் பேரினவாதமும் அரச பயங்கரவாதமும் இந்திய அரசிடம் மண்டியிடுவது போல நடித்து தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டது. 1987 ஜூலை 29ம் நாள் கொழும்பில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதில்

1. வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைப்பது என்றும், அதற்குப் போராளி இயங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு மாகாண சபையை உருவாக்குவதென்றும் அதன் உள் நிர்வாகத்தை அதனிடம் ஒப்படைப்பது என்றும் அதன்பின் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பெறும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மாகாண இணைப்பை உறுதி செய்வது அல்லது கிழக்குப் பகுதி மக்கள் அங்கீகரிக்காவிட்டால் அதைக் கலைத்து விடுவது என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

2. மலையகத்திலிருந்து 2 லட்சம் இந்திய மரபுத் தமிழர்களை இந்தியாவிற்கு திருப்பி அழைத்துக்கொள்வது என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

இதன் மூலம் ஸ்ரீலங்காத் தரப்பினரின் இழுத்தடிப்பு நிலையினையும், தமிழ் பேசும் மக்களது தீர்வு குறித்து எவ்வித கரிசனையும் காட்டாத தன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய உலகில் இலங்கை, தேயிலை ராணியாகத் திகழ்வதற்கு மலையகத் தமிழர்களின் வியர்வைதான் காரணம் என்றாலும் அம் மக்கள் பெருவாரியாக வாழும் மலையகத்தையும் தமிழர் மாகாண இணைப்புக்குள் கொண்டு வராமல் விட்டுவிட்டது. இதுஇன்னும் இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பிரித்தாளும் சிங்கள மேலாண்மைப் போக்கையே காட்டுகின்றது. மேலும் பாரம்பரியத் தமிழர் என்றும் இந்திய மரபுத் தமிழர் என்றும் பிரிப்பதானது 1948க்குப் பிந்தைய காலத்தில் தோட்டத் தொழிலாளிகள் மத்தியிலிருந்து தமிழர் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கும் செல்ல முடியாதபடிச் செய்த பேரினவாத சூழ்ச்சிக்குச் சமமானதாகும்.

மலையகத் தமிழர்களில் 2 லட்சம் பேரை இந்தியா அழைத்துக் கொள்வதன் பேரிலேயே எஞ்சியவர்களுக்கு குடியுரிமை அளிக்க இலங்கை ஒப்புக் கொண்டுள்ளது. ஆயுதந் தாங்கிய போராளிகள் மீது மலையக மக்களுக்கு நம்பிக்கை, தோன்றாவண்ணம் இவ்வொப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு போராளி அமைப்புக்களை கலந்து கொள்ளாமலேயே இந்திய அரசும் இலங்கை அரசும் தங்கள் வர்க்க நலன்களுக்குச் சாதகமாகவும் போராளி இயக்கங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பாதகமாகவும் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதோடு இந்தியப் படையையும் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கொண்டுபோய் நிறுத்திக்கொண்டது. அதே நேரத்தில் தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை அதனால் தடுக்க முடியவில்லை. காரணம், சிங்களக் குடியேற்றத்தைப் பற்றி இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் பேசப்படாததே ஆகும்.

இத்துணை அவக்கேடான ஒப்பந்தத்தைப் பற்றி போராளி இயக்கங்கள் தங்கள் கருத்தைக் கூறி மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கோரிய போதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது.

அதே வேளையில் தமிழ்ப் போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதில் கவனமாக இந்தியப் படையும் இந்திய அரசும் இருந்தது. இலங்கைப் படையால் கைது செய்யப்பட்ட குமரப்பா உள்ளிட்ட விடுதலைப் புலிகளை கொழும்பு கொண்டு செல்வதில் காட்டிய தீவிரத்தின் மூலம் கைதிகளாயிருந்த புலிகள் தற்கொலை செய்து கொள்ளவும் விடுதலைப்புலி இயக்கம் ஆத்திரமூட்டப்படவும் இலங்கை அரசு சதி செய்தது. இந்தியப் படையும் விடுதலைப் புலிகள் இயக்கமும் மோதிக் கொண்டதும், பின்னர் இன்றுவரை போராக நீடித்துவருவதும் மேற்கண்ட சதியின் தொடர்ச்சியேயாகும்.

இதற்கிடையில் இலங்கை அரசின் உதவியோடு தமிழர் மாகாண இணைப்பும் அதற்கொரு மக்கள் பங்கேற்காத தேர்தலும் நடத்தி, இந்திய அரசு தனக்குப் பிடித்தமான அல்லது தனக்கு லாலிபாடும் போராளி அமைப்பை மாகாண சபைக்கு கொண்டு வந்தது. இது இந்திய அரசின் நோக்கத்தை

படிப்பகம்

www.padippakam.com



மட்டுமல்லாது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் சேர்த்தே அம்பலப்படுத்தியது. தமிழ் மக்களின் சகஜ வாழ்வையும் அமைதியையும் பேணும் நடவடிக்கை இதுவல்ல.

எனவே, இந்திய அரசு தனது மேலாண்மையை இலங்கையிலுள்ள தமிழ்ப் பிரதேசத்தில் உறுதிப்படுத்தும் நோக்கத்தை கைவிட்டு, போராளி இயக்கங்கள் கோரும் விதத்தில் ஒப்பந்தத்தை மாற்றி அமைக்க முன்வரவேண்டுமென இம்மாநாடு இந்திய அரசை வற்புறுத்திக் கோருகிறது.

## தீர்மானம்-4

### இந்தியப் படைகளை இலங்கையிலிருந்து திரும்பப்பெறக் கோரி

இலங்கை அரசு விரித்த வலையில் இந்தியப் படை விழுந்துவிட்ட விநாடியிலிருந்து இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர்மூண்டு நடந்து வருகிறது. இது ஆண்டுக்கணக்கில் நீளத் தொடங்கி விட்டது. இதனால் நமது படைக்கு சேதங்கள் பெரிய அளவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னொரு பக்கம் நமது படை நீண்டகாலமாக அந்நிய நாட்டில் நிலைகொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இதனால் ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்கத்திற்காக இந்தியா முன்னின்று உருவாக்கிய 'சார்க் நாடுகள் அமைப்பு பலவீனமடையவோ சிதைந்து போகவோ வாய்ப்பு உண்டாகிறது. மறுபக்கம் நமது இராணுவத்தின் உள்ளமைப்பில் விரும்பத்தகாத மாறுதல்கள் தோன்றி அவை இந்திய ஜனநாயகத்திற்கே கூட ஓர் அச்சுறுத்தலாக மாறும் அபாயக் கட்டமாகவும் வளர்ந்து விடலாம். எனவே விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்தம் செய்வதோடல்லாமல் இந்திய அரசு நமது படைகளை முழுமையாகவும் இலங்கையிலிருந்து திரும்பப் பெற வேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

## தீர்மானம்-5

### அணுஉலை ஆபத்து

ஹிரோஷிமா, நாகசாகி சம்பவங்கள் இன்னும் உருவாகாமல் தடுக்கவேண்டும் என்னும் குரல்கள் உலகில் மூலை முடுக்கெல்லாம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் நேரத்திலேயே புதிது புதிதாக அணு உலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அணுப் பிளவினால் உண்டாகும் கதிர்வீச்சு 25,000 ஆண்டுகள் வரை நீடிக்கிறது. இதை ஒத்துக்கொள்ளும் அரசுகள் விபத்துக்கள் ஏற்படாத அணு உலைகளை அமைக்கவிருப்பதாக டமாரம் அடிக்கின்றன. அதையும் மீறி விபத்தேற்படக்கூடாது என்பது இல்லை. விபத்து என்பதே எதிர்பாராமல் நடந்து விடுவதுதான். அப்படி நேர்ந்துவிட்டால் எடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் முழு அளவில் பலன்தரும் என்று உத்திரவாதம் கிடையாது. முடி முளைக்காது வறண்ட மேனியுடனும் புற்று நோயுடனும் மனிதன் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து மடிய வேண்டும். வேறு வழியில்லை.

அணு மின் நிலையங்களால் உருவாக்கப்படும் மின்சாரம் மலிவாகவும் இருக்கப் போவதில்லை. நீடித்த உற்பத்தியும் தரப்போவதில்லை, இதையும்விட செயலற்றுப் போன அணு உலைகளைப் பாதுகாக்கவேறு நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். அயனி மண்டலத்திலிருந்தோ கதிர்வீச்சற்ற அணு இணைப்பு முறை மூலமாகவோ மின்சாரத்தைப் பெறும் தொழில் நுட்பங்களை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டு வரும் வரை, உலகில் எந்த ஒரு பகுதியிலும் புதிதாக அணு உலை அமைக்கப்படுவதை மாநாடு கண்டிக்கிறது.

அவ்வாறு அமைக்கத் திட்டமிடப்படும் அணு உலைகளுக்கெதிராக மக்கள் குரல் கொடுப்பதோடு நில்லாமல் திரண்டெழுந்து தடுக்க வேண்டும் எனக் கோருகிறது.

தமிழ்நாட்டில் கூடங்குளத்தில் அமைக்கவிருக்கும் அணுமின்நிலையத் திட்டத்தை இந்திய அரசு உடனடியாகக் கைவிட்டு வேறு வழிகளில் மின்சாரம் தயாரிக்க முனைய வேண்டுமென மாநாடு கோருகிறது.

## தீர்மானம்-6

### சாதியம், மதக்கலவரம்

சாதியம் என்பது இந்திய நாட்டிற்கே உரித்தான ஒன்று. அது தோன்றியது முதல் இன்றுவரை சமூக வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அந்தந்த கட்டத்திற்கேற்றவாறு தகவமைக்கப்பட்டு விடுகிறது. வர்ணத்துள் சாதிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததற்குப் பதிலாகத் தற்போது முன்னேறிய வகுப்பு, பின்தங்கிய வகுப்பு, மிகவும் பின்தங்கிய வகுப்பு, தாழ்த்தப்பட்டோர், பழங்குடிகள் எனப் பிரிக்கப்பட்டு இவ்வகுப்புகளுக்குள் இன்று சாதிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இது முதலாளித்துவ சமூகத்தின் சாதியத் தகவமைப்பு என்பதில் துளியும் சந்தேகமில்லை. கிராமப்புறங்களில் பழைய பாணியிலான சாதிச் சண்டைகள் நடந்து கொண்டிருக்கும் போதே அலுவலகங்களில் புதிய பாணியிலான குரோதங்கள்

படிப்பகம்

www.padippakam.com



வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த நேரத்தில் உயர்சாதிக்கும் தாழ்த்தப்பட்ட சாதிக்குமான கலவரத்தில் மேல்சாதிகள் எல்லாம் ஒன்றுபட்டு நிற்பது போலவே வகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ள சாதிகளெல்லாம் மேல்சாதி, தாழ்ந்த சாதி என்ற கண்ணோட்டத்திலும் இணைகின்றன. விளைவு என்னவோ ஒன்றுதான். எனவே சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் தீண்டாமைக்கு எதிராகவும் இளைஞர்கள் போராட முன்வரவேண்டுமென மாநாடு அறைகூவி அழைக்கிறது. அதே போல் மதத்தின் பெயராலும் வெறிகொண்ட நிலையில் கொடூரமான முறையில் பகைத்து தாக்கிக்கொண்டு பிளவுபட்டு சுரண்டல் வர்க்கங்களுக்குப் பலியாக வேண்டாம் என மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. அதோடு வேலைசெய்யும் உரிமையை அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும் மத்திய அரசை இம்மாநாடு கோருகிறது.

## தீர்மானம் எண்-7

## *முற்போக்கு இயக்கங்களுக்கு வாழ்த்து*

பழைய ஏகாதிபத்திய அரசுகள் உலகைக் கூறுபோட்டு நாடுகளை அடிமைப்படுத்தி ஆண்டன. அதன் தொடர்ச்சியின் இறுதிக் கட்டமாக தென்னாப்பிரிக்காவில் சுதந்திரப் போர் நடந்து வருகிறது. நெல்சன் மண்டேலா அந்நாட்டின் சுதந்திர இயக்கத்தை வெள்ளை இனவெறி அரசின் சிறைச்சாலையில் இருந்தவாறே கடந்த 26 ஆண்டுகளாக வழிநடத்தி வருகிறார். கருப்பின மக்களின் உரிமைப் போருக்குப் பக்கபலமாக உலக மக்களின் குரல்கள் ஒருங்கிணைந்து ஒலிக்கின்றன. தென்னாப்பிரிக்க விடுதலை இயக்கமும் மக்களும் வெற்றி பெற்று விடுதலைக் காற்றை நுகரவேண்டுமென மாநாடு வாழ்த்துகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் இறக்குமதி செய்யப்பட்ட இஸ்ரேலிய அரசு 1948 முதல் பாலஸ்தினிய மக்களை நாடற்றவர்களாக்கி உலகெங்கும் தஞ்சம் புக விட்டிருக்கிறது. எனவே பாலஸ்தினிய மக்கள் தங்கள் தாயகத்தை மீட்டெடுப்பதற்கான போரில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள். அவர்களுடைய போர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் தத்துப்பிள்ளைகளான மத வெறி பிடித்த இஸ்ரேலிய அரசையும் எதிர்த்து நடை பெறுவதாகும். இப்போரைத் தலைமை தாங்கி நடத்திவரும் பாலஸ்தின மக்களின் ஸ்தாபனமான பாலஸ்தின விடுதலை இயக்கத்தையும் பாலஸ்தின மக்களையும் இம்மாநாடு வாழ்த்துகிறது.

## தீர்மானம் எண்-8

## *பெண்களுக்கு சொத்தில் சமபங்கு*

தனிச்சொத்து உருவானபிறகு ஆணாதிக்கம் பெண்களின்மீது வலுவடைந்தது. இன்றுவரை பெண்ணைக் கலாச்சாரத்தின் காவல் தெய்வமாகக் காட்டி ஆணாதிக்கக் கொடுமைகளை மூடிமறைத்து வருகின்றன. இது ஆண் பெண் சம்பந்தப்பட்ட பிரச்சனை மட்டுமல்ல. சொத்தும் சம்பந்தப்பட்டதாகும்.

சொத்துரிமையில் ஆணாதிக்கப்போக்கு நீடிப்பதால் பெண்களையே ஆண்களின் சொத்தாக்கிவிடுவது நீடிக்கிறது. இனிமேல் தான் பெண்களுக்கு ஆன்மா தோன்றவேண்டும்.

இந்தியாவில் பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உரிமை வழங்கப்படுமானால் இந்தியக் கூட்டுக்குடும்ப அமைப்பில் ஓரளவு உடைசலைக் கொண்டுவர உதவும். அப்படிச் செய்வது என்பது முதலாளித்துவ சமூக அமைப்பிற்குள்ளேயே பெண்களுக்கு ஓரளவு சுயபலமும் நிமிர்வும் ஏற்பட வழிபிறக்கும். மேலும் கலாச்சார வளர்ச்சியிலும் அது ஒரு தர்க்கத்தை ஏற்படுத்தும்.

எனவே தமிழ்நாடு அரசு இயற்றியுள்ள பெண்களுக்கும் சொத்தில் சமபங்கு உரிமை வழங்கும் சட்டத்தை குடியரசுத் தலைவர் அங்கீகரிக்க வேண்டும் என மாநாடு கோருகிறது.

## தீர்மானம் எண்-9

## *தாய்மொழிக் கல்வி*

அந்நிய மொழியில் சிந்திப்பதை விட, தொடர்பு கொள்வதை விட, கல்வி கற்பதை விடத் தாய்மொழியிலேயே சிந்திப்பதும் தொடர்பு கொள்வதும் கல்வி கற்பதும் எளிதாகும். இதனால் தாய்மொழியும் வளர்ச்சியடைய வாய்ப்பேற்படுகிறது.

மேலும் விடுதலையடைந்த ஒரு நாட்டின் மக்கள் அந்நிய மொழி மோகம் உடையவராக இருப்பது என்பது பழைய அடிமை வாழ்வின் எச்சமிச்சமாகவே இருக்க முடியும். இந்தப் போக்கு நீடிக்க அனுமதிக்கக்கூடாது. நம்முடைய கலாச்சார வளர்ச்சியில் அது பெரும் தேக்கத்தை உண்டுபண்ணிவிடும்.

அதேநேரத்தில் இந்தியா பல்வேறு தேசிய மொழிகளைக் கொண்ட, பல்வேறு தேசிய இனங்கள் வாழும் நாடு. இங்கே தமிழ் மொழிக்கு முதன்மையளிக்கப் படாவிட்டால் இதர மொழிகளுக்கு சமமாக அது வளர முடியாமல் போய்விடும்.

படிப்பகம்

www.padippakam.com



எனவே தமிழ்வழிக் கல்வியைத் தமிழக மக்களும் அரசும் மெய்யுணர்வோடு செயல் படுத்த முன்வரவேண்டும். மாணவர்கள் தமிழ் வழிக் கல்விப் பாடத்திட்டத்தை உணர்வு பூர்வ மாக ஏற்க முன்வரவேண்டும். இதற்கான ஊக்கத்தை அரசு மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். வெறும் பிரச்சார மட்டத்தோடு நிறுத்திக் கொள்ளக்கூடாது. அப்போதுதான் தமிழ்வழிக் கல்வி தமிழ்நாட்டில் நன்னிலை எய்த முடியும் என்பதை அரசு புரிந்துகொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இம் மாநாடு தமிழ்நாடு அரசை வற்புறுத்துகிறது.

### தீர்மானம் எண்-10

## *மழலையர் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி*

தமிழ்நாடெங்கும் மழலையர் பள்ளிகளைத் தனியார் தங்களின் பிழைப்புக் சாதனமாக நடத்தி வருகின்றனர். பிஞ்சுக் குழந்தைகளின் மனநிலை கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவ தில்லை. மழலைச் சொற்களால் மகிழ்விக்க வேண்டிய தருணத்தில் அந்நிய மொழிச் சொற் களுக்கு லாவகமாகக் குரல்வளையைப் பழக்கு வதற்காக உருவாக்கப்பட்டக் கொட்டடிப்போல் மழலையர் பள்ளிகள் காணக்கிடக்கின்றன.

இதனால் மழலைச் செல்வங்கள் மகிழ்ச்சி யையும் விடுதலை உணர்வையும் இழந்து குழந்தைக் கைதிகளாகி நிந்திக்கப்பட்டுப் போய் விடுகின்றனர்.

எனவே மழலைச் செல்வங்கள் பயிலும் மழலையர் பள்ளிகளிலும் தமிழ் மொழி வழியா கவே கற்பிக்க வகை செய்யும்படித் தமிழ்நாடு அரசு உடனடியாகச் சட்டம் இயற்றவேண்டும் என இம்மாநாடு கோருகின்றது.

### தீர்மானம் எண்-11

## *மழலையர் பள்ளிக்குத் தமிழ்ப் பாடத் திட்டம்*

மழலையர் பள்ளி அல்லது பாலர் பள்ளி களுக்கு இதுவரை பாடத்திட்டம் எதுவும் தமிழில் கிடையாது. இதனால் தமிழ்வழிக் கல்வியைப் பாலர் பள்ளியில் இருந்து கொண்டு வருவது இயலாது போகும். எனவே, மழ லையர் பள்ளிக்கு அரசே தகுந்த அறிஞர் களைக் கொண்டு பாடத்திட்டத்தை உருவாக்கி அறிவிக்க வேண்டும் எனத் தமிழ் நாட்டரசை இம்மாநாடு கோருகிறது.

### தீர்மானம் எண்-12

## *மழலையர் பள்ளி ஆசிரியை, ஆயா ஆகியவர்களை அரசு ஊழியர்களாக்குவது*

மழலையர் பள்ளிகள் ஸ்தல ஸ்தாபனங் களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இவற்றின் ஊழியர்களுக்குப் போதுமான ஊதியமோ, ஊக்குவிப்போ கிடையாது. இத னால் அவர்களும் தங்கள் பணியை செவ்வனே செய்ய முடியாதவர்களாகி விடுகின்றனர். மழலையர் பள்ளிகளில் குழந்தைகள் பராமரிக் கப்படுவதிலும் பயிற்றுவிக்கப்படுவதிலும் தான் நாட்டின் எதிர்காலமே தங்கியிருக்கிறது. அப்படியிருக்க மழலையர் பள்ளியின் ஆசிரியை மற்றும் ஆயாக்களை ஸ்தல ஸ்தாபனங்களின் பிடியில் விட்டுவைத்திருப்பது என்பது அரசு தன் பொறுப்பைத் தட்டிக்கழிப்பது என்ப தாகவே கொள்ளபெறும்.

எனவே மழலையர் பள்ளி ஆசிரியை ஆயா ஆகியவர்களை அரசு ஊழியர்களாக அங்கீ கரிக்க வேண்டும் என இம்மாநாடு கோரு கிறது.

### தீர்மானம் எண்-13

## *வர்ணாகுலர் மொழி, கீழ்த்திசைமொழி ஆகியன நீக்கப்பட*

வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியாவில் வெற்றிபெற்று நிலைகொண்ட பின்னால் இந்தியர்களை அடிமைகளாகவே கருதினர். அடிமை மொழிகள் எனும் பொருளிலேயே ''வர்ணாகுல மொழி'' என்றும் கல்விச்சாலை களில் இடம்பெற்ற மொழிகளைக் ''கீழ்த்திசை மொழி'' என்றும் சட்டத்திலேயே குறிப்பிட் டனர். விடுதலை பெற்ற இந்தியாவில் இன்னும் மேற்கண்ட சொல்லாட்சியே சட்ட ரீதியானதாகக் கையாளப்பட்டு வருகிறது. இது வேதனைக்குரிய செய்தியாகும்.

எனவே இந்திய-மத்திய அரசும் தமிழ் நாட்டரசும் உடனடியாக மேற்கண்ட சொற் களைச் சட்டத்தில் இருந்து எடுத்தெறிய வேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

### தீர்மானம் எண்-14

## *தூதுவரகங்களில் நியமனம்*

வெளிநாடுகளில் உள்ள நமது தூதுவர கங்கள் வெறும் ராஜிய உறவுக்காக மட்டும் இருக்கவில்லை. கலாச்சாரப் பரிவர்த்தனை

படிப்பகம்

www.padippakam.com



மற்றும் மேம்பாடு ஆகியவற்றைக் கவனிப்பதும் கூட அவைகளின் வேலை.

இந்தியாவோ பல்வேறு தேசிய மொழி களையும் பல்வேறு கலாச்சாரங்களையும் உள்ள டக்கிய ஒரு துணைக்கண்டமாகும். இங்குள்ள அனைத்துத் தேசிய மொழிகளையும் அறிந்தவ ராகவும் அனைத்துக் கலாச்சாரங்களையும் உள்வாங்கிக் கொண்டவராகவும் ஒருவரே இருக்கமுடியாது.

ஆதலால் எல்லா தேசிய இனங்களில் இருந்தும் மொழிப்புலமையும் கலை, இலக்கியத் தேர்ச்சிப் பெற்றவர்களை ஒவ்வொரு தூதுவ ரகத்திலும் நியமிக்கவேண்டும். இல்லையேல் கலாச்சாரப் பரிவர்த்தனை அயல்நாடுகளில் உயிரற்ற முறையிலேயே நடைபெற முடியும் என்பதை உணரவேண்டும்.

எனவே, எல்லா தேசிய இனத்திலிருந்தும் மொழிப்புலமையும் கலை இலக்கியத் தேர்ச்சி யும் வாய்ந்தவர்களை பொறுக்கி எடுத்து அனைத்துத் தூதுவரகங்களிலும் நியமிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநாடு வலியுறுத்திக் கோருகிறது.

### தீர்மானம் எண்-15

### *"தமிழ்க் கல்விக் கழகம்"*

இந்தியாவிற்கு அப்பால் தொலைதூர நாடுகளில் சிதறிச் சிந்திக் கிடக்கும் தமிழ் மக்கள் தமது கலாச்சாரத்தைத் தொடர்ந்து தமிழ்க்கல்வி மறந்து வாழ்ந்து வருகின்றனர். அதே நேரத்தில் அவர்கள் வாழும் நாட்டு மக்களோடும் கலாச்சாரத்தோடும் முழு அளவில் ஒன்ற முடியாதவர்களாக உள்ளனர். இதே நிலை நீடித்தால் காலப்போக்கில் நம்மோடு கூட ஒன்றிப் போக முடியாத அபாய நிலை உருவாகும். இப்படிப்பட்ட மோசமான நிலை உருவாகாமல் தடுக்கத் தமிழகத்தில் "தமிழ்க் கல்விக் கழகம்" ஒன்றை நிறுவி அதன்மூலம் வெளிநாடுகளில் பரவிக்கிடக்கும் தமிழ் மக் களுக்குத் தமிழ்க் கல்வி மற்றும் கலாச்சாரத் தொடர்பை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழ்நாடு அரசை இம்மாநாடு வற்புறுத்திக் கோருகிறது.

### தீர்மானம் எண்-16

### *கலைகளின் தன்மையைப் பாதுகாக்க*

தமிழகக் கோவில்கள் சிற்பக்கலையின் உறைவிடமாக உள்ளன. அவை இன்று பல இடங்களில் தவறாகப் பயன்படுத்தப் படு கின்றன. வேறு சில இடங்களில் சரியான முறையில் பராமரிப்பு இன்றி சிதிலமடைந்து வருகின்றன. இன்னும் சில இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிட்டங்கியாகச் செயல்பட்டுவருகின்றன. இதை யெல்லாம் மதவெறி ஸ்தாபனங்கள் தங்கள் வளர்ச்சிக்குத் சாதகமாக மக்களிடம் கொண்டு செல்கின்றன. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பண்டையக் கலைகளைப் பராமரித்துப் பாதுகாக்கும் வகையிலும் கோவில்களையே கல்விச் சாலைகளாக மாற்றிவிடத் தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

### தீர்மானம் எண்-17

### *அரசு ஊழியர்*

அரசு ஊழியர்கள் தங்களின் கோரிக்கை களுக்காகப் போராடுவது போலவே லஞ்ச லாவண்யங்களில் இருந்து ஒதுங்கி இருந்து மக்கள் பிரச்சனைகளை தங்கள் வரம்புகளுக் குள்ளேயே நின்று தீர்ப்பதற்கு முன்வரவேண்டு மென்று இம்மாநாடு விரும்புகிறது. அப்போது தான் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கு மிடையேயான இடைவெளி மக்களால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். இவ்வாறாக அரசு ஊழியர்கள் கலாச்சாரப் படுத்தப்பட வேண்டும் என இம்மாநாடு அரசு ஊழியர் களையும் அரசு ஊழியர் ஸ்தாபனங்களையும் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறாக அரசு ஊழியர், மக்கள் ஒற்றுமை உருவாக அரசு ஊழியர் முன்கை எடுத்துச் செயல்படவேண்டு மென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

### தீர்மானம் எண்-18

### *காவிரிப் பிரச்சனை*

காவிரியில் தமிழ்நாட்டுக்குள்ள பாசன உரிமை தொடர்ந்து கர்நாடக அரசால் மறுக்கப் பட்டு வருகின்றது. 1924 ஒப்பந்தம் காலாவதி யாகி விட்டதாக கர்நாடக அரசு விவாதிப்பதை மாநாடு கண்டிக்கிறது. அதேபோல இந்திய அரசு காவிரி நீர்ப்பிரச்சனையில் தலையிட்டு உருப்படியான நடவடிக்கை எடுக்காமல் மத்திய ஆளுங்கட்சியின் அரசியல் லாபம் கருதி காவிரிப் பிரச்சனையைக் கையாண்டு வருவதையும் வன்மையாக இம்மாநாடு கண்டிக்கிறது.

இனியும் பேச்சுவார்த்தை என்று இழுத் தடிக்காமல் நடுவர் மன்றம் அமைக்க மைய அரசு முன்வரவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



## வரவிருக்கும் உலகத்திற்காக

ஆ. வ. தமிழில்: தி. இளங்கோவன்

வங்கக் கவிதை □ சுனில் கங்கோபாத்யாய்

நமக்குத் தெரியாது
இந்த உலகம் இன்னுமொரு நூற்றாண்டு
ஜீவித்திருக்குமாவென

நமக்குத் தெரியாது
வாழ்க்கையின் கடைசி எச்சங்கள்
ஒரு பிரளயத்தில் தொலைந்து விடுமா என

நமக்குத் தெரியாது
ஹிரோஷிமா மீண்டும் எங்கும்
நிகழ்த்தப்படுமா என

நமக்குத் தெரியாது
மீண்டும் இமயமலை கடலில்
மூழ்குமா என

நமக்குத் தெரியாது
நமது நகங்கள் மீண்டும் கிழிப்பதற்கான
ஆயுதமாகுமா என

நமக்குத் தெரியாது
மக்கள் 'அன்பு' என்ற வார்த்தையுடன்
மாறுபாடு கொள்வார்களா என

நமக்குத் தெரியாது
'விடுதலை' என்ற வார்த்தை சரித்திரத்தின்
பக்கங்களில் மிஞ்சுமா என

நமக்குத் தெரியாது
குறிப்புகள் எழுத வரலாற்று ஆசிரியன்
எவனாவது எஞ்சி இருப்பானா என

நமக்குத் தெரியாது
நமது கேள்விகள் அனைத்திற்கும் விடை
இல்லாமலே போய் விடுமாவென

இருப்பினும் ஒரு அழகான உலகத்தை
மனதில் கொண்டு முன் செல்வோம்

வரவிருக்கும் உலகத்திற்காக நாம் விட்டுச்
செல்வோம் நமது வியர்வையையும்
கண்ணீர்த்துளிகளையும்

அத்துடன் வரவிருக்கும் மனிதர்களுக்காக
முன்னதாக ஒரு பிரகாசமான கனவையும். □

---

தீர்மானம் எண்-19

### மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைக் கிழக்குநோக்கித் திருப்பி விடுவது

மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி மேற்குநோக்கிப் பாய்ந்து கடலில் வீணாகக் கலக்கும் நீரைக் கிழக்கு நோக்கித் திருப்பி விட்டு தமிழகத்தில் விவசாய வளர்ச்சியைத் துரிதப்படுத்த தமிழ்நாடு அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். கேரள அரசுடன் தமிழ்நாட்டரசு காலந்தாழ்த்தாமல் பேச்சு வார்த்தை தொடங்கவேண்டும் என மாநாடு வலியுறுத்துகிறது.

தீர்மானம் எண்-20

### பெரியாறு அணையை வலுப்படுத்த

பெரியாறு அணையால் தமிழகம் பாசன வசதி பெறுகிறது. தற்போது அவ்வணை வலு விழந்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதனால் கேரள அரசு அவ்வணையின் கொள்ளளவில் 5 அடியைக் குறைத்துத் தேக்குவதுதான் நல்லது என்று கருதுகிறது. ஆனால் 5 அடி நீர் என்பது ஏறத்தாழ 15 நாள் தேவையைச் சுருக்கிவிடுகிறது என்பதைக் கருதவேண்டும்.

அணையை வலுப்படுத்தினால் மேலும் 5 அடி நீரைத் தேக்கிக் கொள்ளமுடியும். ஆதலால் தமிழ்நாட்டரசு அதற்கான பண உதவி அளித்தும் கேரள அரசு பெரியாறு அணையை வலுப்படுத்த ஆவன செய்யவேண்டும் என இம்மாநாடு கோருகிறது.

தீர்மானம் எண்-21

### தமிழறிஞர்கள் மறைவுக்கு இரங்கல்

தமிழக அறிஞர்கள் என மக்களால் நன்கு அறியப்பட்ட முனைவர் வ. சுப. மாணிக்கம், முனைவர் ந. சஞ்சீவி, க.த. திருநாவுக்கரசு, க. நா. சு. எனகிற க. நா. சுப்ரமணியம் ஆகியோர் மறைவுக்கு இம்மாநாடு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. □

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ப் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம்

## ஈழ நண்பர் கழகம் பிரகடனம்

ஈழ நண்பர் கழக கலை மாநாட்டின் இறுதியில் 'இந்திய - இலங்கை ஒப்பந்தமும் இன்றையச் சூழ்நிலையும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. ஈழத் தமிழர் போராட்டம் பற்றி ஈழ நண்பர் கழகம் ஒரு பிரகடனத்தை மாநாட்டின் முன் வைத்தது. அதன் முழு வடிவம் வருமாறு :

1987 ஜூலை 29இல் ராஜீவுக்கும் ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் ஈழத்தில் தமிழ்ப் பேசும் மக்களது பிரச்சனைகள் அனைத்தையும் தீர்த்து வைத்து அமைதியை மீட்டு விட்டது என்றும் அது நோபல் பரிசுக்குரிய சாதனையென்றும் டமாரம் அடித்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

ஆனால் ஒப்பந்தம் ஏற்பட்டு 24 மாதங்களாகிவிட்ட பின்னாலும் என்ன நடந்து வருகிறது? படுகொலைகளும் கைதுகளும் மாத்திரமேயல்லாது ஒரு நீண்ட யுத்தமே அங்கே நடந்து வருகிறது. ஈழம் இந்துமாக்கடலில் ஒரு லெபனானாக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன? ஒப்பந்தத்தை உருவாக்கிய போதும் அதற்குப் பின்னும் இந்திய அரசும் இலங்கை அரசும் இலங்கையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களது பிரச்சனைகளுக்குத் தீர்வாகத் தங்கள் நலன் சார்ந்த அணுகுமுறைகளைத் தீர்வாகத் தமிழ் மக்கள் மீது நிர்ப்பந்தித்ததே ஆகும்.

### வரலாற்றுச் சம்பவங்கள்

எனவே, நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் வரலாற்றில் நெடுகவே நடந்த சம்பவங்களைத் தொகுத்து விஞ்ஞான பூர்வமான கண்ணோட்டத்துடனே சில முடிவுகளை எடுக்க வேண்டிய தருணத்தில் இருக்கிறோம். 1948 பிப்ரவரி 4இல் இலங்கை வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. அது முதல் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சதித் திட்டத்துடன் கூடிய துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். 1948இல் இலங்கையில் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தினால் மலையகத் தமிழ் மக்கள் நாடற்றவர்களானார்கள். பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் முளை இப்படித் தான் முகிழ்த்தது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் நாடற்றவர்களாக்கப்பட்ட மலையக மக்களை நாட்டைவிட்டு வெளியேற நிர்பந்தித்தது. தமிழ்-முஸ்லீம் விவசாயிகளின் நிலங்களைப் பறித்தெடுக்கக் குடியேற்றத் திட்டங்களை இலங்கை அரசு வகுத்தது.

நடுத்தர வகுப்பாரை நிலைகுலையச் செய்த தனிச் சிங்கள மொழிச் சட்டமும் இனவாரி தரப்படுத்தலும் இலங்கையிலுள்ள தமிழினம் முழுமையையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியது. பயங்கரவாதத் தடைச் சட்டமும் பௌத்த சிங்களப் பேரினவாதப் போக்கினைத் துரித கதியில் வளர்ச்சியடைய உதவின. இவ்வகைப் பேரினவாதப் போக்கினால் சிதைவுற்ற பொருளாதார வீழ்ச்சியினைக் கண்ணுற்ற விழிப்படைந்த பெரும்பான்மைச் சமூகத்தவரான சிங்கள மக்களின் கிளர்ச்சியினைத் திசை திருப்ப அவ்வப்போது திட்டமிட்டு இனக் கலவரங்கள் உருவாக்கப்பட்டன.

பெரும்பான்மைச் சமூகத்தவரான சிங்கள மக்களையும் சிறுபான்மைச் சமூகத்தவரான தமிழ்ப் பேசும் மக்களையும் இரு கூறுகளாக ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்க வைத்தது, அரசு மட்டத்திலிருந்து கீழிறக்கம் செய்யப்பட்ட பேரினவாதமே. இதற்குச் சான்றாக 1958,

படிப்பகம்

www.padippakam.com



1977, 1983 ஆகிய காலக் கட்டங்களில் நாடு தழுவிய முறையில் பேரினவாதம் மக்கள் மயப் படுத்தப்பட்டு நடத்தப்பட்டக் கொடூரங்களால் அறிய முடியும்.

1948லிருந்து படிமுறையாக பாதிப் படைந்த தமிழ்ப் பேசும் மக்கள் தங்களது இருப்பினை உறுதிப்படுத்தும் போக்கின் மீது அதிக நாட்டம் காட்டத் தொடங்கினர். 70களில் தமிழ் பேசும் மக்களது பிரதிநிதிகள் முன் வைத்த கோரிக்கைகள் சமரசம் என்ற போர்வையில் பேரினவாதச் சக்திகளால் காற்றில் பறக்க விடப்பட்ட நிலையில் தமிழ்த் தலைமைகளின் கையாலாகாத்தனமே பெரிதும் வெளிப்பட்டிருந்தது. இதன் தாக்கம் தமிழ் பேசும் இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியுடன் சிந்திக்கத் தூண்டியதில் வியப்பு இல்லை.

1977 பொதுத் தேர்தலில் தமிழ்ப் பேசும் மக்களுக்கான தீர்வென தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து தமது பிரதிநிதிகளை தமிழர் விடுதலைக் கூட்டணி நிறுத்தியது. இத் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய பிரதிநிதிகள் மூலம் தமிழீழக் கோரிகை ஜனநாயக ரீதியாக மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது.

ஜனநாயக ரீதியில் செயல்படுவதாக பெரிதும் பிரச்சாரம் இடும் இலங்கை - இந்திய அரசுகள் தமிழ் பேசும் மக்களின் உள்ளார்ந்த வெளிப்பாட்டை கடந்த பன்னிரண்டு வருடங்களின்பின் — இன்றும் கூட அங்கீகரிக்க மறுப்பதானது அல்லது புறக்கணிப்பதானது தொடரும் அனர்த்தங்களுக்கு முக்கியமான காரணம் எனலாம். ஆனால் இலங்கை அரசோ ஒருபடி மேலே போய் 1983ல் கொண்டுவந்த ஆறாவது திருத்தச் சட்டத்தின் மூலம் இக் கோரிக்கை போன்ற ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

## இந்தியாவின் சீற்றம்

அதே நேரத்தில் இலங்கை அரசு தனது பேரினவாதத்தை நிறுவிக் கொள்வதற்கான தேவையை ஒட்டி உலகின் பிற்போக்கான அரசுகளோடு ஒட்டி உறவாடி இஸ்ரேலிய மொசாத், பிரிட்டனின் எஸ். ஏ. எஸ், கினிமனி மற்றும் பாகிஸ்தான் இராணுவ ஆலோசகர்கள் என வெளிநாட்டுச் சக்திகள் இலங்கைத் தீவில் காலூன்றிக் கொள்ள களம் அமைத்துக் கொடுத்தது. இந்தியா இதனால் சீற்றம் கொண்டது. இந்தச் சீற்றத்தை இந்திய அரசு ஈழத் தமிழ் மக்கள் பிரச்சனையில் தனது சொந்த நலன் சார்ந்த வகையிலே தீர்த்துக் கொள்ள முயல்வதைத்தான் ஆட்சேபிக்கின்றோம்; சீற்றத்தையல்ல என்பதை நம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

1983இல் ஏற்பட்ட நாடு தழுவிய இனக் கலவரத்தைச் சாதகமாக்கித் தனது பிராந்தியப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடத் தொடங்கியது.

1977இல் மக்களால் வெளிப்படுத்தப்பட்ட தமிழீழக் கோரிக்கையை உதாசீனப்படுத்தியதோடு நில்லாமல் இலங்கை அரசு அடக்குமுறைகளையெல்லாம் விஞ்சத்தக்கதான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. 1979இல் கொண்டு வரப்பட்ட இப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமே இராணுவ வன்முறைக்கு அடிகோலியது. இதன் காரணமாக இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்கள் அடக்குமுறைகளுக்கெதிராக வீறுமிக்க போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்படத் தொடங்கியது. இந்நிலையில் இலங்கை அரசின் மீது சீற்றமடைந்திருந்த இந்திய அரசு ஈழ மக்களின் ஆயுதப் போராட்டத்தைத் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்தத் தொடங்கியது. இவ்வாறு தான் ஈழ மக்கள் மீதான இந்திய அரசின் கரிசனை வெளிப்படத் தொடங்கியது. இந்திய அரசு ஈழப் பிரச்சனையைத் தனது பாதுகாப்புப் பற்றிய பிரச்சனை என்றே பார்க்கிறது. இலங்கை அரசோ ஈழப் பிரச்சனையை வெறும் மொழிப் பிரச்சனை என்றே நாடகமாடுகிறது. ஆக, இவ்விரு அரசுகளும் ஈழப் பிரச்சனையின் உண்மைகளைக் காலில் போட்டு மிதிக்கின்றன என்பதே உண்மை ஆகும்.

## திம்பு மாநாடு : ஒன்றுபட்ட போராளி இயக்கங்கள்

திம்புவில் தமிழ்ப் போராளி இயக்கங்கள் ஒன்றுபட்டு நான்கு அம்சத் திட்டத்தை வைத்த போது இலங்கை அரசு குழப்பியடித்துப் பின் வாங்கிக் கொண்டு போனதும் இந்திய அரசு திகைத்துப் போனது. போராளி இயக்கங்களிடையே உருவான ஒற்றுமை என்பது தத்தமது நோக்கை நிறைவேற்ற முயலும் நடவடிக்கைகளுக்கு சிக்கலைத் தருகின்றது என்பதை இரு அரசுகளும் உணர்ந்தன. விளைவு- இயக்கங்களிடையே மோதல் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது.

## இந்திய அரசின் மறைமுக அழுத்தம் மற்றும் நேரடி தலையீடு

இலங்கை அரசுக்கு இயக்கங்கள் மூலம் இந்திய அரசு மறைமுக அழுத்தத்தைக்

படிப்பகம்

www.padippakam.com



கொடுத்தது. 1987 நடுப் பகுதியில் இலங்கை அரசு வடக்கில் ஆபரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை விரிவு படுத்தியது. இந்த இராணுவ நடவடிக்கை தான் கொடுத்த மறைமுக அழுத்தத்தையும் மீறிய நிலை என்பதை உணர்ந்த இந்தியா தன் பிடி நழுவிப் போவதைக் கண்டது. ஆபரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை சர்வ தேச மட்டத்தில் மனித உரிமை மீறலாக மாபெரும் பிரச்சாரத்திற்குள்ளானது. இதன் அடுத்த 'செய்தி'யாக 'உணவுப் பொட்டலம்' போடப் பட்டதன் வாயிலாக தனது நேரடித் தலை யீட்டினை இலங்கை அரசு மீது இந்தியா வெளிப்படுத்தியது. இதன்விளைவுதான் ஜூலை 29 ராஜீவ்- ஜே ஆர் ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் இந்தியத் துணைக்கண்ட பிராந்திய பாதுகாப்பு விடயங்களையும், இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களது தீர்வு விடயங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. இதில் தமிழ்ப் பேசும் மக்களது தீர்வுத் தொடர்பான கரிசனை யின் பேரில் இந்தியத் துணைக்கண்ட பிராந்தி யப் பாதுகாப்பு விடயங்களிலேயே இந்தியா அதிக நாட்டம் கொண்டிருந்ததை நன்குணர்ந் திருந்த அப்போதைய சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். மிகத் தெளிவாக மதிப்பிட்டிருந்தார். இதன் வழியே தனது அரசின் பேரினவாதப் போக்கை தொடர தந்திரோபாயங்களைக் கையாளத் திட்டமிட்டார்.

இது ஒருபுறமிருக்க இவ்வொப்பந்தம் மூலம் இலங்கைத் தீவின் தமிழ்ப் பேசும் மக் களின் பாதுகாப்பாளனாகத் தன்னைத்தானே இந்தியா பிரகடனப்படுத்திக் கொண்டது. மட்டந்தட்டப்பட்ட இலங்கை அரசு தனது கடற் படை வீரனின் மூலமாக ராஜீவுக்கு வழங்கிய அடி மூலம் தனது உள்ளக்கிடக்கையை வெளிப் படுத்தியது.

ஒப்பந்த அமலாக்கல் மணிநேரக் கணக்கில் நிறைவேற்றப்படுமென பறைசாற்றப்பட்டன.

## ஒப்பந்தத்தை மீறிய இலங்கை அரசு

இலங்கை அரசோ ஒப்பந்த மீறலைத் தொடர்ந்து இயக்கங்களைச் சீண்டும் நட வடிக்கையில் ஈடுபட்டது. இதனை இந்திய அமைதிப் படையினர் கவனத்தில் கொண்டி ருக்கவில்லை. அக்டோபரில் திருகோணமலை யில் இலங்கை கடற்படை முகாமை விட்டு வெளியில் வந்து சுட்டது. இதனால் கலவரம் தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்ட போது பாது காப்புக் குழுக் கூட்டம் கூடிய ஜே. ஆர். அப் போதைய இந்தியப் படைத் தளபதி திபேந்தர் சிங்கைப் பார்த்து 'இந்தியப் படையின் செயற் பாடுகள் தமக்குத் திருப்தி தருபவையாக இல்லை' என்றும் இது தொடரும் பட்சத்தில் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிவரும் எனவும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தி னார். இதனால் டெல்லி தர்மசங்கடத்தினுள் தத்தளித்தது. இந்த குழப்ப நிலை அணுகு முறையிலேயே அக்டோபர் 10ஆம் தேதி புலிகள்-இந்தியப் படை மோதல் ஏற்பட்டது. இதன் மூலம் தமிழ்ப் பேசும் மக்கள் புதிய வடிவில் அடக்கு முறைகளைத் தரிசிக்க தொடங்கினர்; சிறிலங்கா அரசு வேடிக்கை பார்க்கத் தொடங் கியது. ஒப்பந்தம் வந்த போது இலங்கை இராணுவத்திற்கு வலுச்சேர்க்கும் இராணுவ மாகவே இந்தியப் படையை வரவழைத்ததாகக் கூறிய ஜே. ஆர். கூற்று அர்த்தமுள்ளதாகியது.

இலங்கையின் முன்னாள் அதிபர் ஜெய வர்த்தனா மதிப்பிட்டிருந்தது போலவே இந்திய அமைதிப் படையும் இலங்கை அரசின் படைகளுக்கு வலு சேர்க்கும் படையாகவே நடந்து கொள்வதை இப்போதும் நாம் பார்க் கிறோம். தொடரும் யுத்த சூழ்நிலையிலேயே உருவாக்கப்பட்ட மாகாண அரசானது அமைதி மற்றும் ஒற்றுமை வழியை முன்வைப்பதில் நாட்டங்கொள்ளாது பழி வாங்கும் நடவடிக்கை யில் முழுமையாக ஈடுபட்டு வருகிறது. இந்த நிலை தமிழ் பேசும் மக்களை மேலும் பரிதாப மான நிலைக்கே கொண்டு சென்றுள்ளது. இவ்வகைத் தாக்கங்களில் சிக்கிய தமிழ்ப் பேசும் மக்கள் தெளிவாக பிப்ரவரியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமது உள்ளக்கிடக்கையை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்தினர்.

## தமிழ் பேசும் மக்களின் எண்ண வெளிப்பாடு

* ஈழ மக்கள் கோருவதெல்லாம் அமைதி யான அரசியல் தீர்வையே.

* மாகாண சபை மூலம் அதிகாரத்துக்கு வந்தவர்கள் தமக்கு அச்சுறுத்தலாகச் செயல் படுவதை வெறுப்பதாகக் காட்டி யுள்ளனர்.

* இலங்கையின் இனப் பிரச்சனை மீது இந்தியா அணுகு முறையில் முக்கிய மாற்ற மொன்றை அதாவது உள் விவகாரங்களில் தலையிடாத நண்பனாகச் செயல்படவேண்டு மெனக் காட்டியுள்ளனர்.

* என்றாலும் இந்திய அரசோ இலங்கை அரசோ ஈழத் தமிழ் மக்களின் இந்தக் கருத் தொருமையை பற்றிக் கவலைப்படாமல் பழைய பாதையிலேயே செயல்பட்டு வருகின்றனர் என பதை வேதனையுடன் நினைவுறுத்த வேண்டி யுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# ஈழ நண்பர் கழக நோக்கங்கள்

தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் என்பது மொழி, கலை, இலக்கியம், பண்பாட்டு வாழ்க்கைமுறை ஆகியவற்றில் தங்கி நிற்கிறது.

தமிழர்களின் கலை, இலக்கியம், பண்பாடு, வாழ்க்கைமுறை சார்ந்த கலாச்சார மரபுகளைப் பேணுதல், வளர்த்தல் மற்றும் பழையவற்றைப் பதிவு செய்து பாதுகாத்தல்...

தமிழ்ச் சமூகத்தின் செழுமைமிக்க பழம் மரபுகளின் தொடர்ச்சியாளரான நாம், பழமையின் சிறந்த அம்சங்களை சுவீகரித்துக் கொள்ளும்போதே சனாதனமிக்க பழமையையும் சாதியத்தையும் துடைத்தெறியும் முயற்சியில் ஈடுபடல், அறிவியல் வழிப்பட்டப் பார்வையையும் மனப்பக்குவத்தையும் வளர்த்தல்...

தமிழ்ச் சமூகத்தின் மனோபாவத்தை இடதுசாரி திசைவழிப்படுத்த கருத்துப் பண்படுத்தும் முயற்சியாய் கலை, இலக்கிய அரங்குகளில் செயற்படுதல்...

தமிழ் மண் சார்ந்து, தமிழ் மண் மீது நின்று உலகளாவிய பார்வையை உள்வாங்குதல், இடதுசாரி திசைவழியைக் கற்றல்...

கலை முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம், கருத்துரிமைக்கு எதிராக வரும் அரசின் அனைத்து அடக்குமுறைகளையும் எதிர்த்தல்...

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் மொழி மற்றும் கலாச்சார தேவைகளைப் புரிந்து கொண்டு உதவி செய்தலோடு, உலக நாடுகளில் நடைபெறும் முற்போக்குப் போராட்டங்களை ஆதரித்தல்...

பிரதானமாக, ஈழத் தமிழர்களின் தனித்துவத்திற்கு அபாயம் நேர்ந்துள்ள இக்காலக் கட்டத்தில், இதற்கு முன்னும் பின்னுமான பிரச்சனைகளை வரலாற்று வழி நின்று ஆய்வு செய்து, தொடரும் ஈழவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு அளித்தல் என்பதன் அடிப்படையில் ஈழ நண்பர் கழகம் என்னும் பெயரில் தொடர்ந்து இயங்குதல். □

---

இந்த நிலையில் ஈழத்தில் இந்தியப் படை தொடர்ந்து நீடித்தால் அது எதிர்மறை விளைவுகளையே தோற்றுவிக்கும். எனவேதான் இந்தியப் படை ஈழ மண்ணைவிட்டு உடனே திரும்ப வேண்டும் என வலியுறுத்துகிறோம். அதேநேரத்தில் தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் பாதுகாப்புக்காக தாங்களாகவே தமது தேசிய நலனைப் பேணும் நடவடிக்கை வடிவங்களை அமைத்துக் கொள்ள உரிமை உள்ளவர்கள் என்பதையும் அங்கீகரிப்பதென்பதும் வரலாற்றுக் கடமையாகும்.

மேலும் தத்தமது நலனை மட்டும் கருத்தில் கொண்டு இரு அரசுகளும் இலங்கை தமிழ்ப் பேசும் மக்கள் மீது—அவர்களது மண்ணின் மீது இம்மக்களை பகடைக் காயாக நகர்த்தும் அரசியல் போக்கை முழுமையாகக் கைவிட வேண்டும். காலங்காலமாக பல்வேறு வடிவங்களாக ஒடுக்கப்படும் இம்மக்களது உள்ளார்ந்த உணர்வினை மதிக்கும் அணுகுமுறை முன்வைக்கப்பட வேண்டும் என அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்துகிறோம்.

அதேநேரத்தில் நமது அண்டை நாடான இலங்கைத் தீவில் உருவாகி பூதாகரமாக வளர்ந்துவிட்ட இனப் பிரச்சனையில் மனித நேயத்தோடு நடந்து கொள்ளும் நமக்குள்ள உரிமையை நாம் விட்டுக் கொடுக்க முடியாது. எனவே கீழ்க்காணும் கோரிக்கைகளை இப்பிரகடனத்தில் இணைக்கிறோம்.

## *கோரிக்கைகளை அங்கீகரிப்போம்*

1. இலங்கை தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்

   1.1. வடக்குக் கிழக்குப் பகுதி மற்றும் மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் பாரம்பரியப் பிரதேசத்தை உடையவர்கள்.

   1.2. வடக்கு கிழக்கு மலையகம் ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள்.

2. இலங்கைத் தீவில் நிரந்தரப் போர் நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டு பயங்கர வாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு, அனைத்து அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டு, அவசர காலச் சட்டம் போன்றவற்றை நீக்கி ஜனநாயக எல்லைகளை விரிவுபடுத்துதல் வேண்டும்.

3. தமிழ் பேசும் மக்களது தேசிய சுய கௌரவத்தைப் பாதுகாக்கும் நடைமுறையில் இலங்கையில் பிரச்சனைகளைத் தீர்க்கும் புதிய அணுகுமுறை கையாளப்பட வேண்டும். □

படிப்பகம்

www.padippakam.com

# இருவேறு நரகங்கள்

சாருமதி

இப்படி இவனிடம் வந்து மாட்டிக் கொள்வேன் என்று நான் நினைக்கவில்லை. இவனோ ரொம்பவும் மாறிப் போயிருந்தான். கல்லூரி தேர்வில் கடைசி முறையாகவும் தோற்றுப் போய்விட்டு, அப்பாவின் ஜுவல்லரி மார்ட் கல்லாவில் அமர்ந்து விட்டிருந்தான். கிராம்களும், பைசாவும், சேதாரமும் அவனது வாழ்க்கையாகிப் போயிருந்தன. இத்தனை ஆண்டுகள் கழித்தும் இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

நானோ கல்யாணம் ஆகி, குழந்தைகள் பெற்றுவிட்டேன். ஆபிசில் பிழைக்கத் தெரியாதவன் பட்டம் வாங்கியவன். கண்ட இடங்களில் கைநீட்ட முடிவதில்லை; அதனால் தான் கெட்ட பெயர். மேலதிகாரிகள் கோபம். கீழிருப்பவர்களுக்கு எரிச்சல். இவனை விட்டு வைக்கக் கூடாது என்று முடிவு செய்து, தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றச் சொல்லி ஆர்டர் வந்து, சென்னை வந்துவிட்டேன்.

நான் படித்து முடிப்பதற்கு வெகுமுன்பே அப்பா இறந்து போனார். மாஸ்டர் டிகிரி வாங்குவதற்குள் நிலத்தை ஒத்திக்கு வைத்து விட வேண்டி வந்தது. அதை மீட்க வேண்டும். தங்கை ஸ்கூலுக்குப் பிறகு வீட்டிலேயே இருக்கிறாள். எனக்குக் கல்யாணம் ஆன பிறகும் கூட வீட்டில் இருக்கிறாள். ஊரார் வாய் வேறு சும்மா இருப்பதில்லை. கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும். பைசா பைசா வாகச் சேர்க்க வேண்டி இருக்கிறது. ஒரு சிகரெட் வாங்குவதற்கு ஓராயிரம் முறை யோசிக்க வேண்டி இருக்கிறது. நகரம் பயமுறுத்தியது. திரும்பிய இடமெல்லாம் காசு காசு என்று கேட்டு பயமுறுத்தியது. சில நாட் களாவது இவனோடு ஒண்டிக் கொள்ளலாம் என்று வந்தது தப்பாகிப் போனது.

பகலில் நகையை உரசி சம்பாதித்ததை இரவில் தண்ணியாக செலவு செய்து கொண்டி ருக்கிறான் ரமேஷ். முதல் நாளே சொல்லி விட்டான் என்னோடு நீ தங்கலாம். மாடி ரூமில் பொட்டியைப் போட்டுக்கோ; ஆனா, நா முன்ன மாதிரி இல்ல. சினிமா வெல்லாம் பார்க்கப் போறதில்ல. தண்ணி... அப்புறம்... நீதான் பாரேன்.''

எனக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. இரண்டு நாட்களில் அனைத்தும் புரிந்து போனது. அநாவசியமான காசும், கட்டுப் பாடற்ற வாழ்க்கையும் என்ன செய்ய முடியும் என்பது புரிந்தது. எப்போது தனியாக ரூம் பார்த்துக்கொண்டு போவோம் என்று அவஸ் தையாக இருந்தது. காலை நீட்டிப் படுக்க முடியாத கட்டில், எட்டி இரண்டடி எடுத்து வைத்தால் சுவரில் மோதிக் கொள்ள வேண்டிய அறையை காட்டி ரூ. 350 கேட்டார்கள். வாடகை கட்டுப்படியாகிற இடம் கிடைத்தால் உப்புத் தண்ணீரில் குளிக்க வேண்டிய அவஸ்த்தை. அதுவும் சரி என்று பார்த்தால் எருமை மாடுகள் சூழ்ந்த கொசு சாம்ராஜ்யத்தில் அறை கிடைத்தது. இப்படி நான் திண்டாடிக் கொண்டிருந்த போதுதான் ரமேஷ் வேறு என்னை நெருக்க ஆரம்பித்தான்.

''ஊருக்கு எப்ப போவ''

''ஒரு மாதம் கழிச்சு'' என்றேன் யோசனையுடன். நான் இருப்பது இவனுக்குப் பிடிக்க வில்லையோ.

''டே தப்பா எடுத்துக்காத... எதுக்குக் கேட்டேன்னா... ராத்திரியானா கதவ அடைச்சி கிட்டு உள்ள படுத்துற... வெளியில நா என்ன செய்யறேன்னு தெரியாதா?

''தெரியும்''

படிப்பகம்

www.padippakam.com



''அதாங் கேட்டேன். பொண்டாட்டிய பிரிஞ்சு எத்தனை நாளு இருப்ப... இன்னிக்கு ஜாலியா இருக்கலாம் என்ன?''

என் மர மண்டைக்கு அவன் சொன்னது புரிய கொஞ்சம் நேரமானது.

அதற்குள் அவன் செண்ட் வாசனையை என்னோடு விட்டுவிட்டு போயிருந்தான்— விளைவு?

இதோ நான் இப்போது அவனுடன் நகரத்தில் சந்து பொந்துக்குள் புகுந்து புறப்படும் ஆட்டோவில். ஆட்டோ டிரைவர் படு எக்ஸ்பர்ட் போல. சாலையின் அத்தனை இன்ச்சுக்களையும் தெரிந்து வைத்திருந்தான். கலைந்து போன தலையும், வியர்வை உப்பு படிந்து போன காக்கிச் சட்டையுமாக இருந்தான். ரமேஷ் இவனை வடபழனி அருகில் உள்ள ஸ்டாண்டில் பிடித்தான். இவனைப் பார்த்தவுடன் டிரைவர் 'வா சார், இன்னா சார் ஆளே பார்க்க முடியல' என்றான்.

''ஒன்றுமில்ல கோல்டன் பீச் பக்கம் ஒரு செம பிகர் மாட்டிச்சு'' என்றான் ரமேஷ்.

''ஒனக்கு இன்னா சார்... நீயே கமல் மாறி'க்கிற, சரி இன்னா அண்ணா நகர் போவமா?'' என்றான். அவர்களுடைய சம்பாஷணையில் நிறைய குழூஉ குறிகள் இருந்தன. எனக்கு — அதுவும் மதுரைக் காரனான எனக்கு — இந்த மெட்ராஸ் பாஷை நிறைய உதைத்தது. அப்புறம்தான் என்னையும் ஆட்டோவில் திணித்துக்கொண்டு இப்படி பறக்க ஆரம்பித்தான் டிரைவர்.

வண்டி ஆடிய ஒவ்வொரு கணமும் சீட்டுக்குப் பின்னாலிருந்து பாட்டில் கடகடத்தது. தி. நகரிலிருந்து இங்கு வருவதற்குள் ஒரு பாட்டில் பீரை வண்டியிலேயே காலி பண்ணிவிட்டான் ரமேஷ். அந்த பாட்டில் தான் இன்னும் காலியாக பிராண்டியோடு சல்லாலித்துக் கொண்டு இருந்தது.

ரமேஷ் பீர் குடித்த லேசான போதையில் கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்திருந்தான். அவ்வப்போது வயிற்றைத் தட்டி தாளம்போட்டுக்கொண்டான். இந்த வயசுக்கு இந்தத் தொப்பை அதிகம்தான். 'இது பீர்தொப்பை' என்று பெருமைப்பட்டுக் கொள்வான் ரமேஷ்.

நான் எனக்கு சத்தியமான ஒரே ஒரு கெட்ட பழக்கத்தை — புகைதான் — செய்து கொண்டிருந்தேன். வண்டிக்கு வெளியே இரவு நேர மெட்ராஸ் சோடியம் விளக்கில் உறங்கிக் கொண்டிருந்தது. காற்றுப் புக வழி இல்லாமல் பிணைந்தபடி ஒரு ஆணும், பெண்ணும் ஹீரோ கோண்டாவில் பறந்து கொண்டிருந்தார்கள்.

இருட்டுக்கும் இச்சைக்கும் ரொம்பவும்தான் நெருக்கம்போல. பகலில் பளபளக்கும் மனிதர்கள் கூட இரவில் வெறும் சதைகளாய் சுருங்கிப் போகிறார்கள். ரமேஷ் தன் கடைக்கு வரும் பெண்களை வரவேற்றும் பணிவு என்ன? அந்தப் புன்னகைக்கு பின்னால் இரண்டு காமக் கண்கள உறங்குவதை எந்தப் பெண்ணாவது புரிந்திருப்பாளா? கல்லூரி நாட்களில் கூட இவன் இவ்வளவு மோசம் இல்லை. எல்லாப் பெண்களைப் பற்றியும் ஒருவர்ணனை வைத்திருப்பான். பஸ் ஸ்டாண்டுகளில் தவம் கிடப்பான். ஆனாலும் தண்ணி கிடையாது. இந்த மாதிரி சதை தேடி அலைந்தது கிடையாது. எனக்கும் இவனுக்கும் நட்பு ஏற்பட்டதே மிகவும் வினோதமானது. நான் படிப்பில் படு சுட்டி. வினாடி வினா என்றால்கூட நான்தான் — நான் இருக்கும் அணிதான் ஜெயிக்கும். கிரிக்கெட் டீமுக்குக் கூட நான்தான் கேப்டன். அந்த விளையாட்டில்தான் எங்களுக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. அவனுடைய வினோதமான பெண்பிள்ளைத் தனமான கவர்ச்சி எனக்குப் பிடித்திருந்ததோ என்னவோ? ஆனால் எனது நட்பு அவனுக்குத் தேவையாயிருந்தது. ஒரு படிக்கும் மாணவனுடைய நண்பனாக இருப்பது அவனுக்குத் தேவையாயிருந்தது. பரீட்சை நேரங்களில் 'டிப்ஸ்' தர நான் தேவையாயிருந்தது. அது நட்பாக மாறியது. அந்தப் பழைய ரமேஷை நினைத்துக் கொண்டு ஐந்து வருஷம் கழித்து ஆளைத்தேடிப் பிடித்தால் ரொம்பவும் வளர்ந்திருக்கிறான் இப்படி; இரவில் இச்சை கொண்டு அலையும் அளவுக்கு.

ஆட்டோ ரொம்பவும் பயணித்து அண்ணா நகரின் பிரதான சாலைகளில் புகுந்து அப்புறம் இருட்டுக்குள் இரண்டறக் கலந்து எங்கோ நின்றது. 'இரு சார் வரேன்' என்று வண்டியில் எங்களை விட்டுவிட்டு நகர்ந்தான் டிரைவர்.

ரமேஷ் பிராந்தி பாட்டிலின் கழுத்தைத் 'க்ருக்' என்ற திருகித் திறந்தான். மூடியைக் கழற்றி மூக்கில் பிடித்து வாசம் பார்த்தான். திருப்தியடைந்தவனாக பாட்டிலை கொஞ்சம் போல வாயில் கவிழ்த்துக் கொண்டான். பிராந்தியின் மணம் காற்றில் பரவி எனது வயிற்றைத் தொந்தரவு படுத்தியது. ரமேஷின் முகம் கோணி, தொண்டையில் சிக்கல் ஏற்படுவது மெல்லிய வெளிச்சத்தில் தெரிந்தது. முன்பே வாங்கி வைத்திருந்த கடலைப் பயிரை வாயில் கொட்டிக்கொண்டான். பிறகு சாய்ந்து கொண்டான்.

படிப்பகம்

www.padippakam.com



'டேய்' என்று என்னை அழைத்தான். அந்த 'டேய், கொஞ்சம் 'மேய்'’யை நெருங்கி இருந்தது.

'நீயும் கொஞ்சம் குடிடா இவ்வளோவ் தூரம் வந்துட்ட. பாட்டலு என்ன செய்யும் குடி'

நல்ல வேளையாக அதற்குள் டிரைவர் வந்துவிட்டதால் நான் தப்பித்தேன்.

''இன்னா சார் ஆளு இல்ல சார். அது செம பிகர் சார்'' அதற்குள் ரமேஷ் பொறுமை யிழந்தான். ''அவ இல்லாட்டா என்ன வேற யாரும் இல்லயா?''

'அதா சார் சொல்ல வந்தேன். கவர்னரு ஆட்சியாமுல்ல அதான் எல்லாரையும் தூக்கிட் டாங்களாம். யாரும் தொழில் செய்ய முடியல யாம். இங்க அண்ணா நகர்ல மூணு பங்களா இருந்துச்சு இப்ப எதுவும் இல்ல.''

'அதான் பெரிய இடம் வரைக்கும் மாமூல் கொடுக்கிறாங்கல்ல.'

'அதவாங்கிட்டுத்தான் முந்தா நாள் வந்து புடிச்சுகிட்டு போயிட்டாங்களாம் சார்' டிரைவர் தனது இருக்கையில் அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டான்.

இவனிடமிருந்து உரிமையோடு வில்ஸ் பில்டர் பாக்கெட்டை எடுத்து சிகரெட்டை உருவி பற்ற வைத்துக் கொணடான். இந்த மாதிரி இடங்களில்தான் சமத்துவத்தைப் பார்க்க முடிகிறது.

''சொல்லு சார் வடபழனிக்கா போயிரு வோமா?''

''அங்க மட்டும் கிடைச்சுடுமா?'' என்றான் ரமேஷ்.

''அது கோட்டை சார். கவர்னரு இல்ல இன்னாது அது ராஜீவ் ஆட்சி வந்தாக்கூட அந்த இடத்துல கை வைக்கமுடியாது ஆமா...''

அப்புறம் என்ன? மறுபடியும் இருளில் பயணப்பட்டு ஒளிமயமான சாலைகளைக் கடந்து மறுபடியும் இருளுக்கு வந்தது...

அப்படி இப்படி என்று இரண்டு மணி நேரம் ஆனபிறகு டிரைவர் சொன்னான் 'முடிச் சிட்டன் சார்' ரமேசுக்கு இருப்புக்கொள்ள வில்லை. ''பின்னால சைக்கிள்ள வருது சார். கொஞ்சம் பொறு.''

ரமேசும், அவனும் பிசினிஸ் பேச ஆரம்பித் தார்கள். ஆட்டோ சார்ஜ், கமிஷன் அது இது, அவனுக்கு இவனுக்கு என்று 100 ரூபாய் நாட்டுக்கள் கைமாறின.

நானோ இருளையே வெறித்துக் கொண் ருந்தேன். தூக்கம் வேறு கண்களில் இறங்கி யிருந்தது. தாங்க முடியாத சாக்கடை நாற்றம் வேறு. கொசுக்கள் தொந்தரவு செய்து கொண் டிருந்தன. எப்போது இவனிடம் இருந்து தப்பிப்போம் என்று கவலை வேறு. இவனிடம் சொல்லி பார்த்துவிட்டேன். காமம் வேறு, காதல் வேறு. காதல் இல்லா காமத்தை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அது போன்ற உணர்வு மனிதனுக்கும் இருந் தால் அவன் மிருகம்தான். ரமேஷ் ஒரு வரியில் என்னை மறுத்தான். 'தா தத்துவம் எல்லாம் இங்க கிடையாது...' அப்பறம் அவன் பேசின விசயங்களை எழுதினால் பேனா கூசும். வேண்டாம். அப்புறம் என்னை அடிக்காத குறையாக இப்படி இழுத்து வந்திருக்கிறான். நாளை பார்க்க வேண்டிய பைல்கள் வேறு மனதில் பூச்சி பூச்சியாய் ஓடிக்கொண்டிருந்தன.

படால் என்று என் தொடையில் ரமேஷ் அடிபோட நினைவிற்கு வந்தேன். அந்த இருட் டிலும் ரமேஷின் பற்கள் வெள்ளையாய் தெரிந் தன. 'வந்துருச்சிடா'.

சர்ரென்று ஒரு சைக்கிள் பிரேக் போட்டு நிற்க கேரியரிலிருந்து ஒரு பெண் உருவம் குதித்தது. காலில் கொலுசு சலசலக்க நடந்து வந்து ஆட்டோவில் ஏறிக் கொண்டாள். சைக்கிளில் வந்தவன் 'காலேல அனுப்பிரு சார்' என்று குழைந்தபடி அருகே வந்தான். மறுபடியும் கொஞ்சம் பணம் கைமாறியது. நிமிடத்தில் ஆட்டோ புறப்பட்டு மேடு பள்ளங் களில் குதித்து ஓடத் துவங்கியது. ரமேஷ் பிராந்தி பாட்டிலை காலி செய்து, வெளியே எறிந்தான். சாலையில் 'கிளாங்' என்று விழுந்து சிதறியது. நாளை காலை யாருடைய காலிலோ ரத்தம் சிந்துவது என் கண்முன் வந்து போனது. தண்ணீரைப் போல பிராண்டியை குடிக்கக்கூடிய ஒருவனுக்கு வெற்றுக்கால் ஜீவன்கள் ஞாபகத்துக்கு வருவது சாத்திய மில்லைதான்.

இருளைக் கடந்து ஆட்டோ சோடியம் விளககுகளின் கீழ் பயணம் செய்தது. நான் அவளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே இந்தப் பக்கம் பார்த்துக் கொண்டு வந்து கொண்டிருந்தேன்.

''சே சரியான பொணம் வந்து மாட்டிக் கிச்சு. டே முருகா என்னடா இது... கை காலு இருக்கிறதுல்லாம் பொம்பளையாடா...'' ரமேஷின் வாயிலிருந்து சாராய வாடையை விடவும் கடுமையான சொற்களைக் கேட்டு திரும்பினேன் அவள் ரமேஷின் பக்கத்தில் உட்காந்திருந்தாள். சேலையைச் சுற்றிக்

படிப்பகம்

www.padippakam.com



கட்டியிருந்த விதமே அவள் கிராமத்துப்பெண் என்று சொல்லியது. கருப்பாய் இருந்தாள்.

'டே சொள சொளையா ரூபா வெட்டியிருக்கண்டா, இந்தப் பொணம்... டேய் நமக்குச் சொக்கத் தங்கமாட்டம்... அதது...''

இதற்கு மேலும் நடந்த உரையாடலை நான் எழுத முடியாது. ஒரு பெண்ணை நீ அழகி இல்லை என்று சொல்வதே அவளைத் தீயினால் சுடுவதற்குச் சமம். இவனோ அவளை காளவாய் தீயினுள் போட்டுக்கொண்டிருந்தான். காசுக்கு ஏற்ற பண்டம் இல்லை என்று கோபித்துக் கொண்டான். டிரைவர் ஏது ஏதோ சமாதானம் சொன்னான். நாளைக்கு இன்னமும் 'நல்ல சரக்கா' அனுப்புவதாய் சொன்னான். கவர்னரை இடை இடையே திட்டிக் கொண்டான்.

ரமேஷின் பேச்சைக் கேட்கும்போது இவன் இந்தப் பெண்ணைத் திரும்ப அனுப்பிவிடுவான் என்று தான் நான் நினைத்தேன். அதுதான் நடக்கவில்லை. ஆட்டோ நேராக ரமேஷின் வீட்டில் வந்து நின்றது. அவளை அணைத்தபடியே ரமேஷ் முன்னால் சென்றான். இவனை அங்கேயே வெட்டவேண்டும் போல வெறுப்பு என்னுள்.

'எறங்கு சார்'...சும்மா ஜாலி பண்ணாம... வந்ததுலேர்ந்து பாக்குறேன் கோழியாட்டம் தூங்கிக்குனுக்கீறியே...எறங்கு சார்...''

இந்த ஆட்டோக்காரனை எந்த லிஸ்டில் சேர்ப்பது? ஒடிந்த உடம்பும் உப்பு படிந்த சட்டையும்...காசுக்காக பாவம் செய்து பின்னர் பாவமே வாழக்கையாகிவிடும்போல. மௌனமாய் இறங்கி நகர்ந்தேன். மாடிப்படி ஏறும் போது முட்டுக்களில் வலித்தது. தூங்கவேண்டும் என்று உடம்பு கெஞ்சியது. இந்நேரம் ரமேஷ் அந்தப் பெண்ணோடு ரூமுக்குள் அடைந்திருப்பான். எனது அறையை தாழிட்டுக் கொண்டு நான் தூங்கிவிட வேண்டியதுதான் என்று நினைத்தவன் ஏமாந்துபோனன். அந்தப் பெண்ணைக் காணோம். ரமேஷின் அறைக்குள் இருக்க வேண்டும். இவன் எனது அறை வாசலில்.

வாடா இன்னிக்கு ஒரு காந்திய நான் கெடுக்கப் போறேன். என்ன?

ரூமுக்குள்ள படுத்து பூட்டிக்கலாம்னு நெனக்காத. ரூம பூட்டவே முடியாது பார்'' அவன் கைகளில் ரூம் சாவி ஆடியது. கதவைத் திறந்துவிட்டு லாக்கைப் போட்டிருந்தான், நான் கதவைச் சாத்தவே முடியாது.

'எப்படி நம்ம திட்டம். டேய் காலேஜ் கிரிக்கெட்ல நீ ஒப்பனர். இப்ப நான் ஒப்பனர். நீ ரெண்டாவது என்ன...'' தனது அறைக்குள் புகுந்து கதவை சாத்தினான்.

வேறு வழியில்லை படுக்கவேண்டியதுதான், இவ்வளவு குடித்திருக்கிற ரமேஷ் அப்படியே தூங்கிப்போனான். தொல்லை விட்டது. கட்டிலில் விழுந்தேன். இன்று இரவு நான் செய்தது சரியா? ஒரு குடிக்காரனுடன், ஒரு பொம்பளைப் பொறுக்கியுடன் சுற்றியது சரி தானா? என் கஷ்டகாலம் தான் இப்படி ஆனது. வீட்டில் கல்யாணம் ஆக வேண்டிய தங்கை. மனைவி, குழந்தை, தாய்...சம்பளத்தை அப்படியே அனுப்பினால் கூட போதாது. அதற்காக இந்த நரகத்தில் எத்தனை நாள். பேசாமல் மூட்டைப்பூச்சியும், உப்புத்தண்ணீரும் உள்ள லாட்ஜே பரவாயில்லையோ? அப்படியே தூங்கிப்போனேன். குளத்து அலை போல நரம்பு அனைத்திலும் களைப்பு அதிர தூங்கிப் போனேன்.

இருள் இன்னமும் விலகாமல் இருந்தது. யாரோ என்னை காலரைப் பிடித்து தூக்கினார்கள். தலைக்கு மேல் தூக்கி அப்படியே எறிந்தார்கள். நான் ஒரு அமில ஆற்றில் விழப்போகின்றேன். மஞ்சள் புகை பரப்பும், சாக்கடைபோல நாறும் அமில ஆற்றில் விழப் போகிறேன். திரும்பிப் பார்க்கிறேன். ரமேஷ் வேண்டாம் வேண்டாம் என்று கதறுகிறேன். பட்டென்று கன்னத்தில் அடிப்பட்டது. கண்ணைவிழித்தால் ரமேஷ்...

''எழுந்திருடா காந்தித்தாத்தா போ...ரதி காத்துக்கிட்டிருக்கிறா...''

என்னைத் தூக்கிக் காலரைப் பிடித்து இழுத்தபடியே தனது அறைக்குச் சென்றான். தூக்கம் கலையாத கோழிக்குஞ்சைப்போல அவன் கைகளில் இருந்தேன். என்னை எதிர் அறையில் தள்ளிவிட்டு ஹாலில் நின்றபடியே ஒரு சிரிப்பு சிரித்தான். சட்டை போடாத அவன் உடம்பில் முடிகள் புழுக்களைப் போல நெளிந்தன.

என்னுள் ஆத்திரம் மேலிட்டது. எனது பூஞ்சையான உடம்பில் கூட பலம் வந்து விட்டது போலிருந்தது. இந்த மனிதப் புழுவை அப்படியே நசுக்கிவிட வேண்டும்.

அப்போதுதான் அந்த முனகல் காதில் விழுந்தது. வேதனையை எல்லாம் விழுங்கி விட்ட பிறகு இறுகிய உதடுகளின் இடையே தப்பிவிட்ட முனகல் அது.

மனித ஜீவனாய் பிறந்ததை எண்ணி வெந்து குமுறும் முனகல் அது.

அவனின் குரல் எனது அறைக்குள்ளிலிருந்து ஒலித்தது. 'அது மரக்கட்டைடா ஆனாலும் இன்னா?...விடாத...''

படிப்பகம்

www.padippakam.com



நான் இவளின் பக்கம் திரும்பினேன். ஒரு நோயாளிப் புறாவைப் போல சுருண்டு படுத்திருந்தாள். புடவை கட்டிலுக்குக்கீழே கிடந்தது மதுபாட்டில் ஒன்று அவள் புடவையை நனைத்திருந்தது. அனைத்து விளக்குகளும் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தன. ஃபேன் பேய் போல சுழன்று கொண்டிருந்தது. சுவற்றில் ரமேஷின் இறந்துபோன தாய் பிணம் போல் விரைத்துக் கொண்டு போட்டோவாகத் தொங்கினாள். அவளிடமிருந்து அந்த முனகல்மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது.

தொடர்பில்லாமல் எனக்கு என் மனைவியின் ஞாபகம் வந்தது. அவளும் இப்படித்தான். மாதவிலக்குக்கு முந்தைய நாட்களில் சுருண்டு கிடப்பாள். 'அடி வயித்தை வலிக்குதுங்க' என்பாள்.

எனக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை. என்ன ஆயிருக்கும் இவளுக்கு? என்ன செய்திருப்பான் அவன்? எனது சிந்தனை எனக்கே அபத்தமாகப் பட்டது. உடலுக்கு முடியவில்லையோ! அவளை நெருங்கி நெற்றியில் கைவைத்துப் பார்த்தேன். சட்டென்று கண் திறந்தாள். வேதனை முகத்தில் தெரிய கால்களை நீட்டி மல்லாந்து படுத்திருந்தாள். அடிவயிற்றில் அவள் சுருட்டி வைத்திருந்த உள்பாவாடை கீழே சரிந்தது...ரத்தமாக.

ஓராயிரம் பேய்கள் என் முகத்தில் அறைந்ததாக உணர்ந்தேன். 'கடவுளே...கடவுளே' என்று கதற வேண்டும் போல...நான்கு சுவர்களிலும் ஓடி ஓடி முட்டிக் கொள்ள வேண்டும் போல...அத்தனை ஆண்களையும் அறைந்தே கொல்லவேண்டும் போல...

அப்படியே சரிந்து அவள் கால் மாட்டில் அமர்ந்தேன். எத்தனை நேரம் அப்படியே இருந்தேன் என்று தெரியாது. அவளின் கால் ஒன்று என் தொடையில் உராசியது. நிமிர்ந்து பார்த்தேன். அவள் கண்கள் கெஞ்சின... சீக்கிரம். 'அடப்பாவி மகளே' என நான் குமைந்தேன்.

என்ன சொல்ல இவளிடம்? ஐயோ ஐயோ என்று நான் முகத்தில் அறைந்து கொண்டால் இவளுக்குப் புரியுமா? பெண்ணே நான் மனிதன் என்று சொன்னால் இவளுக்குப் புரியுமா?

அவள் புடவையை எடுத்து அவள் மேல் போட்டேன். மெல்ல எழுந்து அமர்ந்தாள். ''ல்ல...சீக்கிரம் அனுப்பிட்டீங்ன்னா...முடிச்சி.'' கண்கள் சிவந்தன எனக்கு. தலைக்கு ரத்தம் ஏறியது. கைகள் நடுங்கின. கத்தினேன். ''போயி உடம்ப கழுவு''. எனது குரல் நடுக்கம் அவளைப் பாதித்திருக்க வேண்டும். புடவையைச் சுருட்டிக் கொண்டு பாத்ரூமுக்குள் நகர்ந்தாள். ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போது கால்கள் பின்ன வேதனையில் முனகினாள்.

விர்ரென்று எனது அறைக்குத் திரும்பினேன். அவன் ஒரு கரடியைப் போல கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தான். விகாரமான பற்கள் தெரிய வாயைப் பிளந்து தூங்கிக் கொண்டிருந்தான். கொடியில தொங்கிய சட்டைகளை உருவிப்பெட்டியில் திணித்தேன். கைக்குக் கிடைத்த புத்தகங்களை பொறுக்கி எடுத்துக் கொண்டேன். அறை வாசலுக்கு வந்து அவனைத் திரும்பிப் பார்த்தேன். மானசீகமாக அவன் முகத்தில் காறி உமிழ்ந்தேன்.

அதற்குள் இவள் புடவையைக் கட்டியிருந்தாள். மருண்டபடி இன்னமும் கட்டிலுக்கு அருகில் நின்று கொண்டிருந்தாள். 'வா என்னோடு' என்றேன். ஆட்டுக் குட்டிபோல உடன் வந்தாள். மாடி இறங்கி அவளுக்காகக் காத்திருந்தேன். ''ஏங்க அவருகிட்ட சொல்ல வேணாமா?''

''வேண்டாம் வா''

''என்ன நீங்க அனுப்பி வைச்சிருவீங்களா?''

எங்கே அனுப்பி வைக்க வேண்டும்? அந்த நரகத்துக்கா? ''சரி வா என்னோட''

இருளில் இறங்கி நடந்தோம். டீ கடைகள் திறக்க ஆரம்பித்திருந்தன. பத்திரிக்கைகளைப் பரப்பி வைத்து கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் பையன்கள். பால்காரன் ஒருவன் மாட்டைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். மாடு அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தது. நாங்கள் மௌனமாய் நடந்தோம். அவளுக்காக நான் மெதுவாக நடக்க வேண்டியிருந்தது.

''உன் பேரென்ன''? என்றேன்.

''சீதா''

''உண்மையான பேரே அதானா?''

''ஆமா சார்''

இந்தக் காலத்தில் சீதையாக நடிப்பவளும் விபச்சாரம் செய்ய வேண்டியிருக்கிறது. சீதையாக பெயர் கொண்டவளும் விபச்சாரம் செய்ய வேண்டியிருக்கிறது. உடலைக் காட்டும் விபச்சாரமோ...உடலை விற்கும் விபச்சாரமோ, ஏதோ ஒன்று.

படிப்பகம்

www.padippakam.com



"என்ன அனுப்பி வைச்சிருவீங்களா சார்?"

"எங்க போவணும் நீ"

"நூறு அடி ரோடு...சார். வழி எனக்குத் தெரியாது. போலீஸ் ஸ்டேசன்ல கொண்டு போய் உட்டுட்டா அவங்க அழைச்சிட்டுப்போயி எடத்தில சேர்த்திடு வாங்க..."

எனக்கு அந்தச் சூழலிலும் சிரிப்பு வந்தது. கவர்னரு ஆட்சி சார்...ரொம்ப ஸ்ட்ரிக்டு, என்றாள். ஆட்டோ டிரைவர் மனசுக்குள் வந்தான்.

"நீ திரும்ப போவணுமா?"

"ஆமா சார் இல்லாட்டி புடிச்சாங்கன்னா அடி உசுரு போடும்..."

"உன்ன ஒங்க ஊருக்கு அனுப்பி வைச் சுட்டா..."

அவள் பார்வையில் மிரட்சி தெரிந்தது. என்னை நம்பாதவளாகப் பார்த்தாள்.

"சரி ராத்திரி சாப்பிட்டியா?"

"இல்ல சார்...வேறு பார்ட்டி ஒன்ன முடிக் கிறதுக்குள்ளாற இவங்க வந்துட்டாங்க"

திறந்திருந்த ஒரு பிளாட்பார கடைக்கு வந்தோம். அவளையும் என்னையும் பார்த்து விட்டு கடைக்காரன் ஒரு நமட்டுச் சிரிப்பு சிரித் தான்.

இவளுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுத் தேன். அதிகாலை பசி என்னுள் குடைந்தது. நான் சாப்பிடும் நிலையில் இல்லை. அவளோ புரோட்டாக்களை இலைதின்னும் ஆடுபோல விழுங்கிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பற்றி விசாரித்தேன். சொன் னாள்.

சொந்த ஊர் திருவிடைமருதூர்.

ஹரிஜனக் குடும்பம். அப்பா செத்துப் போனார். அண்ணன் பஞ்சம் பிழைக்க எங்கோ ஓடிப் போனான். இப்படி எல்லோரையும் போல அவளுக்கு ஒரு சோகக் கதை.

நான் மீண்டும் கேட்டேன். "டிக்கெட் எடுத்துத்தாரேன். ஊருக்குப் போயிடுறியா?

அவள் டம்ளர் தண்ணீரை உறிஞ்சி குடித்து முடித்தாள். வாயை துடைத்துக் கொண்டாள்.

"என்ன பதிலைக் காணோம். இந்த நரகம் ஒனக்குப் புடிச்சு போச்சா?"

அவள் இன்னமும் மௌனமாய் இருந் தாள்.

"என்ன சொல்லு..."

அவள் குனிந்த தலை நிமிரவில்லை.

"என்னைக் கொண்டு போயி ஸ்டேசன்ல விட்டிருங்க சார்"

எனக்குப் புரியவில்லை. இந்தச் சுகம் இவளுக்குத் தேவைப்படுகிறதோ?

சுகமா என்ன சுகம் இது...மலத்தைச் சுவைக்கும் சுகம்...கேட்டே விட்டேன். "ஏன் தொழிலு உனக்குப் புடிச்சுப் போச்சு?"

அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

கண்களில் கண்ணீர் திரண்டது.

கையெடுத்துக் கும்பிட்டாள்.

"சார் நீங்க தெய்வம். ஆனா உங்களுக் குக் பசிக் கொடுமையை தெரியுமா? சாகிற வரைக்கும் பசிக்காம இருந்தா அதுதான் சுகம்னு தெரியுமா?"

நான் நிர்ச்சலனமாய் அமர்ந்திருந்தேன்.

"வாங்க சார். நான் மெட்ராஸ்ல வந்து, இந்த ஆளுங்க கைக்குமாட்டி ரெண்டு நாள் தான் ஆகுது. தேடுவாங்க. நேரத்தோட போவாட்டி பெல்ட்டால அடிப்பாங்க...என்ன ஸ்டேசன்ல வுட்டுடுங்க சார்..."

பெட்டியை எடுத்து கொண்டு எழுந்தேன். கிடைத்த ஆட்டோவில் அவளை ஏற்றி விட் டேன். போக வேண்டிய இடத்தைச் சொன்னேன்.

"ல்ல, ஸ்டேசனுக்குக் கொஞ்சம் முன்னா டியே இறக்கிவிட்டா போதும்" என அவசர மாகக் குறுக்கிட்டாள். டிரைவரிடம் பேரம் பேசி பணத்தைக் கொடுத்தேன். தட்தட் என்று முகத்தில் அறைந்தபடி அது ஒலி எழுப்பிச் செல்ல, பார்த்துக்கொண்டே நின்றிருந்தேன். சற்று தூரம் சென்ற பிறகு அவள் எட்டிப்பார்ப் பது தெரிந்தது. அவள் கண்கள் கலங்கினவோ? ஆட்டோ நிற்கவில்லை. அதிகாலை பல்லவன் களிடையே புகுந்து மறைந்தது. அவள் தனக்குச் சாத்தியமான நரகத்தைத் தேர்ந் தெடுத்து விட்டாள்.

சிகரெட் பற்ற வைத்துக் கொண்டேன். அதிகாலை சில்லிபுக்கு அது இதமாக இருந்தது. நானும் நடந்தேன். கையில் பெட்டியோடும், கக்கத்தில் இடுக்கிய புத்தகங்களோடும்... எனக்குச் சாத்தியமான நரகத்தைத் தேர்ந் தெடுக்க வேண்டுமல்லவா?

□

படிப்பகம்

www.padippakam.com

# சரஸ்வதி

# கனவு

ரோகாந்த்

சரஸ்வதி தெய்வப் பெண் அல்ல.

கையில் வீணையும், ஓலைச்சுவடியும், காலண்டர் புன்னகையுமாய் வெள்ளைத் தாமரையில் உட்கார்ந்திருக்கிற தனது சித்திரம் பொய் என்று சொன்னாள். சொன்னாள் என்பதை விட உணர்த்தினாள் என்பது தான் மெய்.

மறுபடியும் சொல்கிறேன் சரஸ்வதி வெறும் தெய்வப் பெண் அல்ல, சரஸ்வதி நதி. எதனுள்ளும் அடங்காத நதி. மலைகள், காடுகள், நீர் வீழ்ச்சிகள் என்று புரண்டு வந்தவள். அவள் தனக்குள் ஏகமாய் விஷயங்களோடேயே புரண்டு கொண்டிருக்கிறாள். ஆனால் அவள் முகத்தில் எப்பொழுதும் புறாக்களின் சிறகசைப்பு. செயலிலும், நடையிலும் அடக்கம். அடக்கம் என்றால் மார்பை இழுத்து மூடி தலைகுனிகிற வெற்றடக்கமில்லை; அவளது அடக்கம் ஆழமானது. ஒரு நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைப் போல்; ஹோய்... என்று இரைகிற நீர்வீழ்ச்சி பக்கத்தில் அமைதியாய் பாறையோடு ஒட்டிக் கொண்டிருக்கிற தேன் கூட்டின் அடக்கம்.

—இந்த அடக்கம் தான், சரஸ்வதி நதி என்பதை முதலில் நான் உணர முடியாமல் போனதற்குக் காரணம் அப்பொழுதெல்லாம் அவள் சாதாரண காலண்டர் தெய்வப் பெண் என்று ரசித்துவிட்டு என் வழியில் நான்...

—நடந்து வருகிற வழியில் ஒரு நாள் பேயாய் மழை இறங்கியது. ஒதுங்கிய போது சரஸ்வதி அருவியாய் என் தலையில் கொட்டினாள்.

ஒதுங்கிய இடத்தில் சரஸ்வதி ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டிருந்தாள். என் பார்வையில் முதலில் அவள் கண்கள் மட்டும்-அடியின் கூழாங்கற்கள் தெரிய ஓடும் நதியின் ஆழம் தெரிவதில்லை. கண்களின் ஊடுருவலில் சரஸ்வதி இதழ் விரிப்பு. இதழ் விரிப்பில் பூமி சயணிக்கும்.

அந்த நொடியில்தான் நான் முதன் முதலில் அவளிடம் பேசினேன். சரஸ்வதி பேசப் பேச அவள் கையில் இருந்த வீணை மறைந்தது. ஓலைச்சுவடி எகிறியது. ஆபரணங்கள் கழன்று விழுந்தன, அவள் அமர்ந்திருந்த தாமரை, பூமி உருண்டையாய் மாறியது.

என்னுள் பிரமிப்பு மின்னல்கள்.

என் ஞான உலகம் வெடித்துச் சிதறும் இடி முழக்கம்.

சுவாசப் பையில் மூச்சுக் காற்றுக்காய் பேரிரைச்சல்.

படிப்பகம்

www.padippakam.com



சரஸ்வதி நிதான நதியாய் பேசினாள். ஆனால் என் தலைக்கு அது நீர்வீழ்ச்சி...

பேச்சினூடே அவள் வெளியில் கை நீட்டி உள்ளங்கையில் தேங்கும் மழை நீரை பிடித்துக் குடித்தாள்.

மழை நீரில் நனைந்து போயிருந்த என் பேண்டையும், ஷூவையும் துடைத்தபடியே அவளோடு நான் மிகுந்த தயாரிப்பினூடே பேசிக் கொண்டிருந்தேன்.

ஒரு நிலைக்குமேல் அவள் பேச்சு என் காதுகளுக்கு எட்டவில்லை. தம்புரா மீட்டலின் ஸ்ருதி மட்டும் மிஞ்சி நின்றது. ஆனாலும் எங்கள் பேச்சு நிற்கவில்லை. என் நாவின் ஒலிக்கு என் காதுமடல் வரை பயணம் செய்யக் கூட சக்தியில்லை. என் குரல் ஒலி கூடிக் கொண்டே இருந்தது...என்ன பயன்...? என் காதுகளுக்குள் கண்ணாடி சவ்வு...

மழை சோர்ந்த பின்தான் கவனித்தேன். சரஸ்வதி என் முன்னால் நிர்வாணமாய் நதியாய் ஓடிக் கொண்டிருந்தாள். நீந்த முடியாமல் நான். எனைப் பார்க்க என் கண்கள் வெட்கப்பட்டன. அணிந்திருக்கிற ஆடை போதாதென்று சுட்டுவிரலின் நுனி கூட தெரியாமல் அழுக்கடைந்த துர்வாடை வீசுகின்ற துணியால் எனைச் சுற்றிக் கொண்டு நான்.

மழை தன் பேயாட்டத்தை நிறுத்திக் கொண்டுவிட்டாலும், இத்தனை நேரம் ஆடிய ஆட்டத்தில் அதற்கு வியர்த்த வேர்வைத் துளிகள் மட்டும் நிற்கவே இல்லை. பாதை முழுக்க அதன் வியர்வைத் துளிகள் விழுந்து கொண்டே தான் இருந்தது.

நாங்கள் நடந்தோம்.

வரும் வழியெல்லாம் சரஸ்வதி மிகவும் ஆழ்ந்து சுவாசித்துக் கொண்டு வந்தாள்.

மழைக்குப் பின்னே வீசுகிற காற்றுக்கு மட்டுமே உயிர் இருக்கிறது. மண்வாசனை தான் உலக வாசனைகளுக்கும், நாற்றங்களுக்கும் மூலாதாரம். எனவே நான் அதை நேசிக்கிறேன். என் தந்தையை நேசிப்பதைப்போல...

சரஸ்வதியின் இந்த வார்த்தை...

நான் அவளுள் கொஞ்சம் கொஞ்சமாய் மூழ்கிக் கொண்டிருக்கிறேன் என்பதை என்னால் உணர முடிந்தது. என் மூழ்கலை நான் விரும்பவில்லை. இருப்பினும் நான் மூழ்கிக் கொண்டு தான் இருந்தேன். அந்த மூழ்கலில் தான் நான் முதன் முதலில் சுத்தமான பிராண வாயுவை சுவாசித்தேன்.

நடந்து கொண்டிருந்தது என்னவோ இருவரும் தான் என்றாலும் வெளியில் நடந்து வந்தது சரஸ்வதி மட்டுமே...நான் எனது கூட்டில்...

பயந்து பயந்து செத்துக் கொண்டிருந்தேன். சரஸ்வதி நிர்வாணமாய் என்னுடன் வரும் பொழுது நான் என் சுட்டு விரலில் நுனியைக் கூட' வெளிக்காட்டாமல் அழுக்கடைந்து துர் நாற்றத் துணியால் என்னை மறைத்துக் கொண்டு...ஒரு வேளை இந்த துர்வாடையை சரஸ்வதி நுகர்ந்திருப்பாளோ.

உனக்கு ஜேசுதாஸ் பிடிக்குமா?

திடுமென்று கேட்ட சரஸ்வதியின் இந்தக் கேள்வி உண்மையில் என்னை சந்தோஷப் படுத்தியது.

> ஜேசுதாஸ் மடியில் நான் தலைவைத்து படுத்திருக்க, ஜேசுதாஸ் எனக்காக மட்டும் பாடவேண்டும்.

சரஸ்வதி உனக்கு இப்படியொரு பேராசையா—

என் கேள்விக்கு சரஸ்வதி சிரித்தாள். உற்றுக் கொப்பளிப்புச் சிரிப்பு திறந்த மடையின் திணறல். முடிவில் பரந்த வெளி நதியின் துள்ளல்.

> இது ஆசையல்ல...கற்பனை. ஆசைகளுக்கு உருவம் உண்டு. கற்பனைக்கு நடக்க கால்கள் தேவையில்லை, பறக்க சிறகு தேவையில்லை. கற்பனை போதும் நடக்கலாம்; பறக்கலாம் சிலவேளை முகம் மட்டும் தெரிந்து பிடித்த ஆணோடு கை கோர்த்து நடக்கிறேன். ரோமம் நிறைந்த ஆண் மார்பில் தலை சாய்ந்து கொள்கிறேன்...இது ஆசையா...? கற்பனையா? ஆசை கொடிய சுகம்; கற்பனை சுலப சுகம்.

பளீரென்று ஈசான முலையில் ஒரு மின்னல். உருமிய மேகங்களின் குழாவல். ஆயுதம் ஏந்தி கவசம் தரித்த பூமி; இதில் நிர்வாணம் சுத்தமாய் சரஸ்வதி. என்னிடம் ஆயுதம் இல்லை; கவசம் உண்டு. கவசம் சுமப்பது சுகம் அல்ல; பாரம். கவசபாரம் சுமந்து நடந்து நடந்து என் கால்கள் தேய்ந்து போய் இருந்தன.

வழியெல்லாம் சரஸ்வதி தனக்கு பிடித்த பாடல்களின் ஒவ்வொரு வரியாய் சொல்லிக் கொண்டு வந்தாள். அவள் பாடிக் கொண்டும், பேசிக் கொண்டும் வரும் பொழுது நான் என் கவசபாரம் தாங்க மாட்டாமல் தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்தேன். திடுமென்று

படிப்பகம்

www.padippakam.com



சரஸ்வதி சத்தமாய் பாடத் தொடங்கி விட்டாள் :

வீணையடி நீயெனக்கு
மேவும் விரல் நானுனக்கு

நான் இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. பதறினேன். சுற்றும் முற்றும் பார்த்தேன் பூமியே சுருண்டு நின்று சரஸ்வதியை வேடிக்கை பார்த்தது. சரஸ்வதி பாடிக் கொண்டேதான் வந்தாள். இப்படி ரோட்டில் பாடிக்கொண்டு வருகிற பெண்ணை இதற்கு முன்னும் பின்னும் நான் பார்த்ததே இல்லை.

அன்று சரஸ்வதி என் வீட்டிற்கு வந்தாள். அவளுக்கு உண்ண பாயாசமும் வடையும் கொடுத்தேன். சரஸ்வதி அதைத் தொடாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். என் துர்வாடை, கவசபாரம் தாங்காமல் பிதுங்கும் என் விழிகள் எல்லாவற்றையும் இனங்கண்டு கொண்டுவிட்ட பார்வை. நான் தலை குனிந்தேன். சரஸ்வதி மெதுவாய் என் தலைகோதி மோவாய் தாங்கினாள். என் கரு விழிகள் நீரினுள் மூழ்கி தத்தளித்தன. ஜிவுஜிவு என்று உடம்பெங்கும் ஒரு தகிப்பு; கற்பூரத் தகிப்பு. சரஸ்வதி கண்களை ஊடுறுவ ஊடுறுவ நான் இத்தனை நாட்கள் வாழத்தான் செய்தேனா என்கிற அதிர்ச்சி...

சரஸ்வதி சிரித்தாள். அதே பூமி சயனிக்கும் சிரிப்பு. மெதுவாய் என் அழுக்கடைந்த துர்வாடை வீசுகின்ற துணி விலக்கி என் சுட்டு விரலின் நுனியை ஸ்பரிசித்தாள். என் கற்பூர தகிப்பு ஜுவாலை விட்டது. அந்தக் கற்பூர ஜுவாலையில் என் அழுக்கடைந்த துர்வாடை வீசுகின்ற ஆடைகள் பொசுங்கி சாம்பலாகி, சாம்பலாகி கண்ணுக்குத் தெரியாமல் சரஸ்வதி நதியில் கரைந்து போனது. நான் பரிசுத்த நிர்வாணமானேன்.

சரஸ்வதி விரல்களில் கொஞ்சம் பாயாசம் எடுத்து என் நாவில் தடவி விட்டாள். ஞான ஸ்தானம் பெற்று வாயில் அப்பம் வாங்கிக் கொள்ளும் ஒரு கிருஸ்த்துவனைப் போல் அதை பெற்றுக் கொண்டேன். பிறகு என் புறங்கையில் தன் பூமி சயனிக்கும் இதழ்களால் முத்தம் கொடுத்தாள். நான் உருகினேன். எனக்கு நினைவு தெரிந்த பிறகு இத்தனை நெருக்கமாய் யாரும் என்னிடம் நெருங்கியதில்லை. விரல் நுனியில் அன்பை வைத்து ஊட்டி விட்டதில்லை. என் தாயிடம் பெற முடியாமல் போன ஏதோ ஒன்றை இந்த கொஞ்ச நேரத்தில் சரஸ்வதியிடம் பெற்றேன்.

அம்மா...

நான் சரஸ்வதியிடம் பேச வார்த்தைகளுக்காய் அலைபாய்ந்தேன். கிட்டிய வார்த்தைகள் எல்லாம் 'அம்மா' என்கிறதைத் தவிர வேறு பொருள் தரவில்லை.

அம்மா...அம்மா...

நான் கதறினேன். சரஸ்வதியின் உள்ளங்கைகளுக்குள் முகம் புதைத்துக் கொண்டு அழுதேன். என் தாயின் பனிக்குடம் உடைத்து பூமி ஸ்பரிஷித்த என் முதல் ஜனன அழுகை...

சரஸ்வதி என்னை கைகளில் தாங்கி நின்றாள்.

உன்னில் நிறைந்த நான்; உனக்கு
யாதுமாகி நிற்பேன். தாயாய், தந்தை
யாய், சிசுவாய் சகியாய்...எது உன்
என் தேவையோ ... அதுவாகி...மெய்
யுணர்வின் மொத்த வடிவாய் உருப்
பெற்று நிற்பேன்.

நின்றோம்.

அதன் பிறகு சரஸ்வதி இல்லாமல் என் நாசி சுவாசித்ததில்லை. அன்று அழுத அழுகைக்குப் பிறகு நான் வாழ்க்கையில் இன்று வரை அழுததில்லை. இடையில் சரஸ்வதி என்னிடம் இருந்து விடைபெற்றுக் கொண்ட போது கூட நான் அழவில்லை.

ஆனால் சரஸ்வதி திடுமென்று ஒரு நாள் ஓடிவந்து என் தோள்களில் சாய்ந்து கொண்டு மூச்சு கூட விட முடியாமல் திணறித்திணறி அழுதாள். நான் முதன் முதலாய் சரஸ்வதி அழுது பார்த்தது அப்பொழுதுதான். காரண காரியம் சொல்லாமல் என் மார்பில் விழுந்து புரண்டு புரண்டு அழுதாள். பூமி சயனிக்கும் அந்த இதழ்கள் கோண, ஒரு சிறு குழந்தையைப் போல கண்கசக்கி அழுதாள். சரஸ்வதியின் அந்த முகம் எனக்கு முற்றிலும் புதிது. மலைகள், காடுகள், மேடு பள்ளம், நீர்வீழ்ச்சி என்று புரண்டு வந்த சரஸ்வதி அப்பொழுது என் உள்ளங்கைகளில் தேங்கிய நீர்.

நான் சரஸ்வதிக்கு சமாதானம் கூற முற்படவில்லை. அவள் என் மார்பில் புரண்டு அழுததும் அவள் விழி நீர் என் மார்பில் உருண்டு ஓடியதும் என் கபாலத்துள் எந்த அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை. ஒரு புறாவை அணைப்பது போல மிகவும் மென்மையாக அவளை அணைத்திருந்தேன்.

சரஸ்வதி எத்தனை நேரம் அழுதாள் என்று தெரியாது; ஆனால் தாராளமாகவே அழுது தீர்த்தாள். அதன் பிறகு என்னைப் பிரிகிற வரை அவள் அழவே இல்லை. பின்னால் அழுதாளா என்பதும் எனக்குத் தெரியாது.

படிப்பகம்

www.padippakam.com



சரஸ்வதியை அணைகட்டி தேக்க பேச்சு நடந்தது. நல்ல விஸ்தாரமான திட்டம். சரஸ்வதி நடுவில் தேங்கிக் கிடந்தால் போதும் அவளுக்கு சகல கௌரவங்களும் கிடைக்கும். அணைகட்டி பாதுகாப்பவர்கள் சரஸ்வதியில் தோணி விட்டு மகிழலாம். சரஸ்வதி அவர் களை தன் முதுகில் ஏற்றி;

நான் உரமாய் இருந்து வளர்த்த
இயற்கை வளங்களைப் பாருங்கள்

என்று தன்னையும் தன் சுற்றுச் சூழலையும் காட்டி நல்ல பெயர் வாங்கிக் கொள்ள பாடு படலாம். இத்தனை அடி உயர புத்தியை நீ வெளியே செலவழி என்று அணைகட்டின் வாய் திறக்கும் பொழுது முண்டியடித்துக் கொண்டு ஓடி ஆவேசமாய் பூமியின் ஒவ்வொரு துகளை யும் வெறியோடு தழுவி மகிழும் போது உச்சந் தலையில் அணைக்கதவு இறங்கும். எத்தனை முரண்டி துவம்சம் பண்ணிணாலும் அணைக் கதவுக்குள்தான் நதியின் வாழ்க்கை பயன் மிக்கது என்று போதிக்கப்படும்.

அணைகட்டுக்குள் சரஸ்வதியா...
முடியாது...சாத்தியமில்லாதது...

பரந்து விரிந்து கிடக்கிற சரஸ்வதியை அணைக்குள் தேக்கி அழகு பார்ப்பதா... சரஸ்வதி ஒரு போதும் ஒத்துக் கொள்ள மாட் டாள். அவள் காடுகளையும், மலைகளையும் தாண்டி வந்தவள். குட்டைகளின் நாற்றத் திற்கும் அணைக்கட்டின் சிருங்காரத்திற்கும் பேதம் இல்லை என்பது அவளுக்கு தெரிந்த ஒன்று. அவளையும் என்னையும் நெருங்க வைத்ததே அணைக்கட்டுகளின் அஸ்திவாரங் களை தகர்தெறிய வேண்டும் என்கிற வெறி தான். சரஸ்வதியே அணைக்கட்டுக்குள் கொலு வீற்றிருக்க எப்படி சகிக்க முடியும்...?

சரஸ்வதி நீ பரந்துபட்ட தோள் களுக்கு சொந்தமானவள். உன் நீள மான கைகள் அணைக்கட்டுக்குள் கை கட்டி தியாணித்திருக்க படைக்கப் பட்டதல்ல; பிரபஞ்சத்தை உன் மார் போடு சேர்த்து அணைத்துக்கொள்ள படைக்கப்பட்ட கைகள். பூமி சயணிக் கும் உன் இதழ்கள் இனி மோக பற் களின் நொறுவலுக்கு மட்டும் என்பது மிகப் பெரிய சோகம் அல்லவா...உன் வேகம் யாரும் தாங்க முடியாத வேகம். அடித்து நொறுக்கிவிடு; அடங்காதே...நீ நதியாய் அவதரித்தது உள்ளங்கைக்குள் தேங்குவதற்கு அல்ல...புதிது புதிதாய் பாதைகளில் பயணம் செய்யவே நீ படைக்கப் பட்டவள். எதிரில் இருப்பது குன்று என்றால் முட்டிமோதி கரைத்து சம வெளியாக்கி பாதை அமைத்துக் கொண்டு போய்...எவர் கைக்கும் அடங்காதே...சரஸ்வதி நீ நதி...

எனக்கு மூச்சு வாங்கியது

சரஸ்வதி அமைதியாய் ஓடிக் கொண்டிருந் தாள். சரஸ்வதியில் சுலபமாய் ஒரு பாம்பு எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு போனது.

அப்புறம் சரஸ்வதி அணைக்கட்டுக்குள் அடக்கும். சரஸ்வதி அதை விரும்பி ஏற்க வில்லை என்றாலும் அவளின் அணைக்கட்டுச் சடங்கில் நானும் செங்கல் சுமந்தேன்.

அணைக்கட்டு விழாவில் ஒரு முரட்டு ஆண் குரலாய்

நான் பேச நினைப்பதெல்லாம்
நீ பேச வேண்டும்

என்று ஸ்பீக்கர் செட் அலறியது.

அதன் பிறகு சரஸ்வதி என் கனவுகளில் மட்டும் வர ஆரம்பித்தாள். சோகமுலாம் பூசிய ஒரு திடப்பொருளாய் அவள் என் முன்னால் நிற்கையில், அம்மா...என் உடம்பெங்கும் ஒரு கோடி கடி எறும்புகளின் பிடுங்கல். சட்டத் திற்குள் அடைபட்ட கேன்வாஸ் ஓவியமாய் வந்தாள். கம்பிகளுக்குப் பின்னால் அவள் கண்கள் மட்டும் கண்களில் கருவிழிக்குப் பதில் நீளநீளமாய் முட்கம்பிகள். நான் ஓடிப்போய் அவள் கண்களில் இருந்து முட்கம்பிகளை பிடுங்கி எடுக்க முற்பட்டேன். என் கால்கள் சூப்பிக்கிடந்தன. என் ஓட்டம் மூளைக்குள் மட்டும். அடுத்த தடவை புகைப்படமாய் வந் தாள். ஐந்து வயது சரஸ்வதி வெள்ளை நிற பெர்ட்டிகோர்ட் அணிந்து மார்போடு சிலேட்டை அணைத்துக் கொண்டு இரட்டை சடை பின்ன லில் தலை சாய்த்து சிரித்தபடி வந்தாள். அதே பூமி சயணிக்கும் இதழ்கள்.

ஓ! அந்தப் புகைப்படம்... நான் சரஸ்வதியை பிரிகிற அன்று எனக்கு வேண்டும் என்று கேட்ட சரஸ்வதியின் புகைப்படம். ஆனால் சரஸ்வதியால் அதை எனக்கு கொடுக்க முடிய வில்லை. சரஸ்வதியின் அணைகட்டில் வருகிற போகிறவர்களுக்கு அவளைப் பற்றிய வரலாற்று குறிப்பு காட்டும் கோப்பில் அந்தப் புகைப்படம் முக்கிய இடம் பெற்றிருந்தது.

சரஸ்வதி அந்த புகைப்படமாய் வந்த பொழுது தான் நீண்ட நாட்களுக்குப் பிறகு என்னால் அவளிடம் பேச முடிந்தது. ஐந்து வயது சரஸ்வதியின் கால்களை கட்டிக்கொண்டு கதறினேன். ஒரு முறை அவள் கனவில் வந்த போது அவளின் இரண்டு கன்னங்களிலும்

படிப்பகம்

www.padippakam.com

## எமது புதிய நூல்கள்

□

**கானல் வரி**

சேரன் கவிதைகள்

விலை : ரூ. 6.00

□

**காணி உறுதி**

இளையவன் சிறுகதைத் தொகுப்பு

விலை : ரூ. 12.00

□

**ரீதி**

பூமணி சிறுகதைத் தொகுப்பு

விலை : ரூ. 13.00

□

**பொன்னி**

12, முதல் பிரதான சாலை
நேரு நகர், அடையாறு
சென்னை-600 020

---

முரட்டுத்தனமாய் ஐந்து விரல்கள் பதிந்திருந்தன—நினைவுக்கு வந்ததும் அவள் கன்னங்களைத் தடவித் தடவி முத்தம் கொடுத்தேன்.

இப்பொழுது சரஸ்வதியின் பாதையில் கொஞ்சம் கூட ஈரமில்லை. அவள் புரண்டு வந்த பாதை எங்கும் வரண்டு போன மணற் பரப்புக்கள். தாகமெடுத்த நாயைப் போல வரண்ட மணலை தோண்டினேன். நகக்கணுக்களில் இரத்தம் பீறிட்டதே அன்றி நீருக்கான மூலக் கூறுகளே அந்த மணற்பரப்பில் இல்லை.

தோண்டாதே...இந்த மணற்பரப்பில் சரஸ்வதி இல்லை. ஒரு நாள் அவள் நதியாய் ஓடிக்கொண்டிருந்தாள் என் பதற்கான அடையாளச் சின்னம் மட்டுமே அது...நதிகள் கண்களுக்கு புலப்படாமல் போகலாம். ஆனால் நதிகள் எப்பொழுதுமே இறப்பதில்லை. நதிகள் எப்பொழுதுமே அணைக்கட்டுக்குள் அடங்குவதில்லை. அணைகட்டியது இதுவரை நான் நடந்து வந்த பாதையில். நான் நதியாய் ஓடுவது உன்னுள்...

நான் திணறினேன்.

சரஸ்வதி... சரஸ்வதி...!

உன்னைத் தோண்டிப்பார் உன்னுள் நதி ஓடுவது புரியும்...

ஐந்து வயது சரஸ்வதி சொல்லிக் கொண்டே என் உச்சந்தலையில் கை வைத்தாள்.

என் கபாலம் வெடித்துச் சிதறியது.

சரஸ்வதியும் நானும் கலந்து நுரைபொங்க பரந்த வெளியில் ஆவேசமாய் பயணப் பட்டோம்.

நான் நதியானேன். □

படிப்பகம்

www.padippakam.com

# ☐ ஒரு பிரஜையின் விதி

☐

**ஸ்லவோமிர் ம்ரோஸெக்**

**போலந்துக் கதை**
**தமிழில் : மனசு** ☐

நமக்குள் எதுக்கு ஒளிவு மறைவு. நாட்டின் தலை நகரமானாலும் மூலை முடுக்கானாலும் காலநிலை ஒன்று தானே. நகரத்தைப் போலவே மூலையிலும் வெவ்வேறு பருவம் மாறுகிறது, மழை பெய்கிறது, காற்றடிக்கிறது, பொழுது காய்கிறது. அந்த மட்டில் இரண்டுக்கும் வித்தியாசம் பார்க்க முடியுமா.

நம் அதிகாரிகளும் லேசுப்பட்டவர்களில்லை. அவர்கள் எடுத்துக் கொண்ட முன் முயற்சி இருக்கிறதே அதை இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாக ஏன் பயமாகக்கூட இருக்கிறது. அவர்கள் நாட்டின் கடகோடி மூலைக்குப் போனார்கள். அங்குள்ள நிலைமைகளை அலசிப் பார்த்து ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையம் அமைக்க முடிவு செய்தார்கள். அது அப்படியொன்றும் பெரிய காரியமில்லை. நீண்ட சதுரத்தில் கொஞ்ச நிலம். சுற்றிலும் வெள்ளை நிறத்துக்கு வேலி. நடுவில் உயரமாக குச்சுக் கால்களுடன் ஒரு கருவிப் பெட்டி அவ்வளவுதான்.

நிலையத்துக்கு அடுத்தாற்போல் மேனேஜரின் வீடு. கருவிகளைக் கவனித்துக் கொள்வதும் அறிக்கைகள் எழுதுவதும் அவருக்கு வேலை. அதிகாரிகளிடம் யாராவது கேள்வி கேட்டால் முழிக்காமல் டக்கென்று பதில் சொல்லணுமில்லையா அதுக்குத் தோதாக அறிக்கைகளை துல்லியமாக எழுதினார்.

அவர் ரெம்பவும் நேர்மையான இளைஞர். அவருடைய அறிக்கைகள் அட்சர சுத்தமாகவும் எப்போதும் எதார்த்தமாகவும் இருக்கும். மழை பெய்தால் எப்போது, எவ்வளவு கனம், எவ்வளவு நேரம் பெய்தது என்று ஒவ்வொரு கோணத்திலிருந்தும் வர்ணிக்கும் வரை ஓய மாட்டார். பொழுது காய்கிறதா அதைப் பற்றி கச்சிதமாக வர்ணிப்பதில் சிரமமே இருக்காது. கொஞ்சங்கூட பாரபட்சமற்றவர். அவருடைய சம்பளப் பணத்துக்காக அரசாங்கம் கஷ்டப்பட்டு உழைப்பது அவருக்குத் தெரியும். அந்த மாதிரி தம்முடைய தொழிலிலும் நடந்துகொள்ளனுமென்று உணர்ந்திருந்தார். அவருக்கு வேலைப் பஞ்சமே கிடையாது. ஏனென்றால் அந்த ஜில்லாவில் ஏதாவதொரு கால நிலை இருந்து கொண்டிருக்கும்.

கோடை முடிகிற சமயம். அடிக்கடி புயல் கிளம்பி மழை பெய்தது. அதைப்பற்றி அவர் உள்ளது உள்ளபடி விவரமாக அறிக்கை எழுதி மேலிடத்துக்கு அனுப்பினார். புயல் ஓயவில்லை.

ஒருநாள் அவருடைய நண்பர் வந்திருந்தார். நண்பரென்றால் சக ஊழியர். வயசான மனுசன்; அனுபவசாலி. நடக்கிற வேலைகளைக் கவனித்து விட்டு போகிற போக்கில் சொன்னார்.

www.padippakam.com



''ஒங்க அறிக்கையெல்லாம் எறங்கு திசையிலேயே இருக்கு சுவாமீ; அதத் தாண்டி கொஞ்சம் வித்தியாசமா இருந்தாலே ஆச்சரியந் தான்.''

மேனேஜர் திகைத்துப் போனார்.

''என்ன சொல்றீங்க, மழ கொட்டுறத கண்ணால பாக்கத்தான செய்றீங்க.''

''ஆமாமா, அத எல்லாருந்தான் பாக்கலாம். ஆனா ஒண்ணு ஒங்களுக்குத் தெரியுமா தெரியாதா. எந்தப் பிரச்சனையவும் நாம் பிரக்ஞையோட விஞ்ஞான பூர்வமா அணுகனும். எனக்கெதுக்கு வம்பு. ஏதோ நண்பராச்சேன்னு சொன்னேன்.''

வயசானவர் செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டார். அவருடைய தலை இன்னும் ஆடிக்கொண்டிருந்தது.

மேனேஜர் தனிமையில் அறிக்கைகளை எழுத ஆரம்பித்தார். கண்கள் விசாரத்துடன் வானத்தை மேய்ந்தாலும் எழுத்தை நிறுத்த வில்லை.

அந்தச் சமயத்தில் பெரிய அதிகாரி யிடமிருந்து உத்தரவு வந்தது புறப்பட்டு வரச் சொல்லி. அவர் இதை எதிர் பார்க்கவில்லை. பெரிய அதிகாரியென்றால் உச்சியில் இருப்ப வரில்லை. இன்னுமொரு குட்டி அதிகாரி.

மேனேஜர் குடையை எடுத்துக் கொண்டு நகரத்துக்குக் கிளம்பினார். அதிகாரி அவரை நல்ல முறையில் வரவேற்றார். அருமையான வீடு. மழை கூரையில் தாளமிட்டுக் கொண் டிருந்தது. அதிகாரி பிரஸ்தாபித்தார்.

''ஒங்கள வரச் சொன்னது எதுக்கு தெரியுமா. ஒங்க அறிக்கையத்தனையும் ஒரு தலப்பட்சமா இருக்கிறதப் பாத்து அசந்து போயிட்டொம். கொஞ்ச நாளாவே நம்பிக்க வறட்சி தூக்கலாத் தொனிக்குது. இப்ப அறு வடநடக்குது. நீங்க என்னன்னா மழையப் பத்தி பேசிக்கிட்ருக்கீங்க. பொறுப்ப ஒணந்து நடந்துக்கிற வேணாமா.''

மேனேஜர் சொன்னார்.

''ஆனா மழ பெய்துட்ருக்குதே.''

அதிகாரி கோபத்துடன் பார்த்தார். அவருடைய முஷ்டி மேஜை மீதிருந்த தாள் கற்றையில் ஒரு குத்து விட்டது.

''நழுவுற வெவகாரம் மட்டும் நம்மகிட்ட வேணாம். ஒங்களோட சமீபத்திய அறிக்கை யெல்லாம் கைவசமிருக்குது. தப்பிக்க முடி யாது. நீங்க நல்ல ஊழியர்தான். ஒத்துக் கிறென். ஆனா முதுகெலும்பு கெடையாது. ஒண்ணு தெரிஞ்சுக்கங்க. தோல்வி மனப் பான்மையிருக்கே அது எங்களுக்கு கொஞ்சங் கூட பிடிக்காது.''

பேட்டி முடிந்தது. மேனேஜர் குடையை கக்கத்தில் இடுக்கியபடி நிலையத்துக்குத் திரும் பினார்.

நடந்ததென்னமோ நல்லதுக்குத்தான். இருந்தாலும் அவருக்கு உடம்பெல்லாம் மழை யில் நனைந்து ஜலதோஷம் பிடித்துக் கொண் டது. படுத்த படுக்கையாகி விட்டார். இதுக்கு மழைதான் காரணம் என்பதை மனசு ஒத்துக் கொள்ள மறுத்தது.

மறுநாள் காலநிலை கொஞ்சம் சீராகியது. அவருக்கு சந்தோசம் தாங்கவில்லை. உடனே அறிக்கை எழுதினார்:

''மழை சுத்தமாக வெறித்துவிட்டது. கொஞ்ச நேரம் கூட கனமாகப் பெய்ய வில்லை. இதை ஒத்துக் கொண்டாகணும். விட்டு விட்டு தூறல் முணு முணுப்புடன் சரி. இப்போது சூரியன் என்னமாய் பிரகாசிக் கிறான்.''

உண்மைதான், மேகங்களை உடைத்துக் கொண்டு பொழுது முகங்காட்டியிருந்தது. அதன் கதகதப்பில் பூமி குளிர்காய்ந்து கொண் டிருந்தது.

அவர் பாட்டு முனக்கத்தில் உற்சாகமாக வேலைகளைக் கவனித்தார்.

சாயங்காலம் குளிர் காற்றின் விரட்டலில் மேகங்கள் மறுபடியும் கூடத் தொடங்கியிருந் தன. அவருக்கு உதறலெடுத்தது. காய்ச்சல் வந்துவிடும் பயத்தில் வீட்டுக்குள் போய் விட்டார்.

அடுத்த அறிக்கை அனுப்ப வேண்டிய நேரம் வந்தது. எழுத உட்கார்ந்தார்.

''சூரியன் வழக்கம் போலவே இருக் கிறான். அஸ்தமனம் என்பது ஒரு தோற்றந் தான். இதை ஏற்கனவே கோபர்நிகஸ் நிரூ பித்து விட்டார். உண்மையில் சூரியன் எந் நேரமும் பிரகாசித்துக் கொண்டுதானிருக் கிறான். ஆனால்...''

இந்த இடத்தில் கொஞ்சம் சிக்கல். மன சுக்குள் சஞ்சலம். எழுதுவதை நிறுத்தினார்.

மின்னல் பளிச்சென வெட்டியது. அவர் சந்தர்ப்பவாதத்தை உதறிவிட்டு ''17-00 மணி. இடியுடன் கூடிய புயல்'' என்று மட்டும் எழு தினார்.

படிப்பகம்

www.padippakam.com



# தட்டப்பட்ட ஒரு கதவு

ஆ. வ. தமிழில்: தி. இளங்கோவன்

ரஷ்யக் கவிதை □ யெவ்கனி யெவ்டுஷெங்கோ

'யார் அங்கே ?
'நான்தான் முதுமை,
உனக்காக வந்திருக்கிறேன்'

'பிறகு வா !
நான் வேலையாக இருக்கிறேன்
செய்யவேண்டியவை நிறைய உண்டு!"

'நல்லது, சிறுவனே,
ஆனால் மனதில் வைத்துக்கொள்
நான் காத்திருக்கிறேன் உனக்காக
கதவின் பின்னால்'

நான் எழுதினேன்
தொலைபேசியில் பேசினேன்
பொரித்த முட்டையை விழுங்கினேன்
பின் கதவைத் திறந்தேன்,
ஆனால் வெளியே எவரும் இல்லை
ஒருவேளை நண்பர்கள்
என்னிடம் விளையாடுகிறார்களா ?

அல்லது
நான் பெயரை சரியாகக் கேட்கவில்லையா
ஆம் அழைத்தது முதுமையல்ல
மனமுதிர்ச்சிதான்.

அது காத்திருக்க முடியாமல்
பெருமூச்செறிந்தபடி
திரும்பிச் சென்றுவிட்டது. □

---

அடுத்தநாள் இன்னுமொரு புயல் வீசியது. அதைப்பற்றி தகவல் கொடுத்தார். அதுக் கடுத்த நாள் புயலில்லை. கல்மழை கொட்டி யது, அதையும் தெரிவித்தார்.

அவருக்குள் புதுசாக ஒரு அமைதி. ஒரு நிம்மதி கூட நிலவியது. அதுவும் தபால்காரர் அடுத்த உத்தரவைக் கொண்டு வரும்வரை தான். இந்தத் தடவை உத்தரவு மத்திய அதிகாரியிடமிருந்து.

அவர் தலைநகரத்துக்குப் போய்த் திரும் பும் போது மனசில் எந்த சந்தேகமும் இல்லை. அப்புறம் அனேக நாட்களாக பொழுது காயும் பிரகாசமான காலநிலை பற்றியே எழுதினார். தப்பித் தவறி அறிக்கைகள் இயங்கியல் தொனியை அமுக்கி விடுவதுமுண்டு. உதா ரணத்துக்கு :

''ஏகதேசம் பெய்த மழையால் சில இடங் களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் ராணுவ வீரர்களின் போராட்ட சக்தியை யாரால்தான் தடுக்க முடியும். ராணு வப் பகுதிகளை எவரால்தான் மீட்க முடியும்."

நல்ல காலநிலை பற்றியே அறிக்கைகள் போய்க் கொண்டிருந்தன. அவற்றில் சில கவிதை நடையிலும் இருந்தன. இரண்டு மாசம் கழித்து அவர் அறிக்கையொன்று அனுப்பினார். அது அதிகாரியைக் கலக்கி யிருக்க வேண்டும். அறிக்கை இப்படி இருந் தது :

'பெருங்காற்றில் மேகச் சிதறல்.'

அதுக்குக் கீழே பென்சில் கிறுக்கல்.

''ஆனால் இந்த கிராமத்திலுள்ள விதவை பெற்ற ஆண் குழந்தை சுகமாக இருக்கிறது. அது இவ்வளவு நாள் பிழைத்துக் கிடக்கு மென்று யாராவது நினைத்துப் பார்த்திருப் பார்களா"

அவர்மீது விசாரணை நடந்தது. வானிலை ஆராய்ச்சிக் கருவிகளை விற்ற பணத்தில் சாராயம் வாங்கிக் குடித்து விட்டு போதையில் இருக்கும்போது அவர் இந்த அறிக்கையை எழுதியதாக விசாரணையில் புலனாகியது.

அதுக்குப் பிறகு அந்த ஜில்லாவில் எந்தத் தொந்தரவுமில்லாமல் பொழுது காய்ந்து கொண்டிருந்தது. மேகங்களை விரட்டும் முயற்சி யில் அவர் கையில் அதிசய மணியுடன் வயல் களைச் சுற்றித் திரியும்போது மின்னல் தாக்கி செத்துப்போனார். அடிப்படையில் யோக்கிய னாக இருந்த மனுசன் போய்விட்டார். □

படிப்பகம்

www.padippakam.com

# நகைச்சுவை

யெவ்கனி யெவ்டுஷெங்கோ

ருஷ்யக் கவிதை ஆங்கிலம் வழித் தமிழில் : தி. இளங்கோவன்

அரசர்கள்,
சக்கரவர்த்திகள், ஜார்கள்
உலகத்தின் முடிமன்னர்கள் அனைவரும்
அதிகாரம் செலுத்தியிருக்கின்றனர்
எண்ணற்ற அணிவகுப்புகளை,
ஆனால் அவர்களால் அதிகாரம் செலுத்த
முடியவில்லை நகைச்சுவையின் மீது.

ஈசாப், அந்த நாடோடி, வருகை புரிந்தான்
நாள் முழுதும்
ஆடம்பரங்களில் மூழ்கியிருந்த
அந்த புகழ் பெற்ற மனிதர்களின்
அரண்மனைகளுக்கு,
பிச்சைக்காரர்களுக்கும்
மேலானவர்களாக
அவர்களை அவன் கருதவில்லை.

எந்த வீடுகளில்,
வேடதாரிகள் தங்கள்
காலடித்தடங்களை
விட்டுச் சென்றார்களோ,
அங்கே
ஹோட்ஜா நஜ்ருத்தீன்,
தன் நகைச்சுவையால்
தலைகீழாக்கினான்
கீழான மனங்களை
சதுரங்க காய்களைப் போல
அவர்கள் முயன்றார்கள்
நகைச்சுவையை
வேலைக்கு அமர்த்த.

ஆனால் நகைச்சுவையை
விலைக்கு வாங்க முடியாது
அவர்கள் முயன்றார்கள்
நகைச்சுவையைக் கொலை செய்ய,
ஆனால் நகைச்சுவை
மூக்கின் மீது விரலை ஆட்டி
அவர்களை எள்ளி நகையாடிச் சென்றது!

அது கடினமானது
நகைச்சுவையுடன் போரிடுவது
அவர்கள் இடையிடையே அவனைக்
கொலை செய்தார்கள்
அவனது துண்டிக்கப்பட்ட தலை
ஆடியது ஒரு குத்தீட்டியின் முனையில்.
ஆனால் ஊமை நடிகர்கள் குழலூதியபடி
தங்கள் கோமாளிக் கதையைத்
தொடங்கியபோது
நகைச்சுவை அகம்பாவத்துடன்
'நான் திரும்பி விட்டேன்'
'நான் இங்கிருக்கிறேன்!'
என கத்தியபடி
நடனமாடத் தொடங்கியது,
ஒரு பழைய கந்தலான மேல் கோட்டுடன்
கீழ்நோக்கிய முகத்துடன்,
வருத்தம் தோய்ந்த முகமூடியுடன்
ஒரு அரசியல் கைதியாக,
அவன்
இப்பொழுது கைது செய்யப்பட்டு,
தனது மரணத்தை நோக்கி
நடந்து கொண்டிருந்தான்.

அவன் எல்லாவற்றிலிருந்தும் நீங்கி
வாழ்க்கையின் அப்பால் உள்ளவற்றை
ஏற்பது போல் தோற்றம் காட்டினான்,
ஆனால் திடீரென்று
அவன் நழுவி வந்தான்
தன் மேல் கோட்டிலிருந்து
தனது கரங்களை அசைத்து
ஒரு அதிர்வை உண்டாக்கினான்.

நகைச்சுவை
தள்ளப்பட்டது
சிறைகளில்
நகைச்சுவை நேராக நுழைந்து சென்றது
சிறைக் கம்பிகளிடையேயும்
கற்சுவர்களின் ஊடேயும்.
இருமியபடி,
சிப்பாய்களில் ஒருவனைப் போல்
கையில் துப்பாக்கியை ஏந்தி
ஒரு பாடலைப் பாடியவாறே
அணிவகுத்துச் சென்றது
மாரிக்கால அரண்மனையின் மீது
அவன் முகச்சுழிப்புகளுக்கு
பழக்கப்பட்டவன்
ஆனால் அவை அவனுக்கு
துன்பம் தருவதில்லை
சில நேரங்களில்
நகைச்சுவை
தன்னையே நகைச்சுவையுடன்
பார்த்துக் கொள்வதுண்டு
அவன் அழிவற்றவன்
விரைவு, சுறுசுறுப்பு கொண்டவன்.

அவன் கடந்து செல்வான்
எதன் வழியாகவும்
எவரின் ஊடாகவும்
எனவே
நகைச்சுவைக்கு வெற்றி உண்டாகட்டும்
அவன்
ஒரு வீரமான மனிதன். □

படிப்பகம்

www.padippakam.com

# தடைகளை உடைத்துக் கரங்களைப் பிணைப்போம்

□

*13வது சர்வதேச மாணவர் இளைஞர் விழாவின் உரத்தக் குரல்*

□

ஜூலை 1ம் தேதி வடகொரியாவின் தலைநகரான பியாங்யங்கில் 180 நாடுகளிலிருந்து பதினையாயிரத்துக்குமதிகமான மாணவர், இளைஞர் அமைப்புப் பிரதிநிதிகள் ஒன்று கூடினர். பல்வேறு அரசியல் சமூகப் பின்னணிகள், தத்துவார்த்த நடைமுறைகளைக் கொண்ட அவர்கள், ''ஏகாதிபத்தியத்துக்கெதிரான ஒருமைப்பாடு, அமைதி, நட்புறவு'' என்ற அடிப்படையில் ஒளிமயமானதோர் எதிர்காலத்திற்கான மனித வேட்கையைப் பிரதிபலித்தார்கள்.

பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளிலிருந்து முற்போக்கான மாணவர் இளைஞர் அமைப்புகள் இவ்விழாவில் பங்கு பற்றுதலைத் தடுக்குமுகமாக அந்த நாடுகளிலுள்ள மக்கள் விரோத அரசுகள் பலத்த நடவடிக்கைகளிலீடுபட்டன. இவ்வகையில் தென்கொரிய அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கது. தென்கொரியாவில் இவ்விழாவிற்கு ஆதரவு தெரிவித்த சொண்டயப் (Chondaechyop) எனப்படும் மாணவரமைப்பு பலத்த தாக்குதலுக்குள்ளானது. தென்கொரிய மாணவர்களின் விழா ஏற்பாட்டுக் கமிட்டி சட்டவிரோதமாக்கப்பட்டது. இத்தனை தடைகளையும் தாண்டி இம்சு கியொங் எனும் மாணவி இவ்விழாவில் பங்குபற்றினார்.

எட்டு நாட்கள் நடைபெற்ற இவ்விழா கலந்துரையாடல்கள் விவாதங்கள் கலாச்சார நிகழ்ச்சிகள் பொருட்காட்சிகள் போன்ற பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை உள்ளடக்கியது. அத்துடன், பாலஸ்தினம், நமீபியா, தென் ஆபிரிக்கா, நிக்கரகுவா, எல்சல்வடோர் போன்ற நாடுகளில் போராடும் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கு முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பொதுக் கூட்டங்கள் ஒருமைப்பாட்டு அணிவகுப்புகள் என்பன பெரும் வரவேற்பைப் பெற்றன. (சில ஐரோப்பியர்கள் சீன மாணவர்களின் ''ஜனநாயகத்துக்கான'' போராட்டத்தை ஆதரித்துப் பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்) இதுதவிர இதற்கென ஒதுக்கப்பட்ட மைதானங்களில் பாரம்பரிய நடனங்கள், விளையாட்டுக்கள் என்பவற்றிலும் பலர் பங்குபற்றினர். எனினும் கடந்த வருடம் தென்கொரியத் தலைநகர் சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி போன்று இங்கு யாருமே பொன் பொருளுக்காக ஒருவரையொருவர் முட்டிமோதவில்லை. மாறாக தத்தமது நாட்டு மக்களின் நம்பிக்கைகள், அபிலாசைகளைப் புலப்படுத்தும் பல்வகை வடிவங்களாகவே பெரும்பாலான நிகழ்ச்சிகள் அமைந்தன.

தென்கொரியா, வடகொரியாவுடன் மீள இணைக்கப்பட வேண்டும் எனக் கோரி தென்கொரிய மாணவர்கள் நடாத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெற்ற அணிவகுப்பு மனதைத் தொட்ட ஒன்று. இதில் இலட்சக்கணக்கில் வடகொரிய மக்களும் ஆயிரக்கணக்கில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர். இவ்வணிவகுப்பின் முடிவில் இடம்பெற்ற இம்சு கியொங்கின் உரை, ஏகாதிபத்தியத்தின் நலனுக்காகப் பிரித்துவிடப்பட்டுள்ள ஒரே கலாச்சார பாரம்பரியங்களைக் கொண்ட தேசிய இனமான கொரிய மக்களின் உள்ளக்கிடக்கையாக வெளிப்பட்டது.

பயங்கரவாத ஆட்சி நிலவும் நாடு எனத் தென்கொரிய அரசினால் செய்யப்படும் பொய்ப் பிரச்சாரங்களைதையும் பொருட்படுத்தாமல் சட்டவிரோதமாகத் தன்னந்தனியே வடகொரியாவுக்கு வந்துவிட்ட இம்சு கியொங், தான் மீண்டும் எல்லையைக் கடந்த தனது சொந்தக் கிராமத்துக்குச் சென்று வடகொரியா பற்றிய அவதூறுகளுக்கெல்லாம் எதிர்ப்பிரச்சாரம் செய்யப் போவதாக உறுதியளித்தார்.

விழா நிறைவுற்றதும் வடகொரிய எல்லைக்குச் சென்ற போது தென்கொரிய எல்லைக் காவற்படையினரால் இம்சு கியொங் தடுத்து நிறுத்தப்பட்டார். தன்னைத் தனது கிராமத்துக்குச் செல்ல அனுமதி மறுக்கப்

படிப்பகம்

www.padippakam.com


சாளரம்

□

முதல் வெளியீடு

சுந்தரையா எழுதிய

## வீரத் தெலங்கானா

ஆயுதப் போராட்டமும் அதன் படிப்பினைகளும்

தமிழ்ப் பதிப்பாசிரியர்: தியாகு

□

நவம்பர் 7இல் நூல் வெளிவருகிறது

□

விபரங்களுக்கு

சாளரம், 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், அடையாறு, சென்னை-20.

□


பட்டமையை எதிர்த்து சாகும்வரை உண்ணா விரதமிருந்தார். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவப் பிரதிநிதிகள் உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

ஆறுநாட்கள் தொடர்ந்து உண்ணாவிரத மிருந்த இம்சு கியொங் உடல் மோசமான நிலையையடைந்த போது அவரை இராணுவ ஆஸ்பத்தரியில் அனுமதித்தபின்னர் தென் கொரிய அரசு அவரைக் கைது செய்தது. மாணவர் ஒருவர் கைது செய்யப்படுவதும் தொடர்ந்து சித்திரவதை செய்யப்படுவதும் கொலை செய்யப்படுவதும் தென்கொரியாவில் ஒன்றும் அசாரதாரணவிடயமல்ல. ஆனால் இன்று இச்சம்பவங்கள் தென்கொரியாவிற் குள்ளேயே அடங்கிவிடும் சமாச்சாரங்களல்ல. அமெரிக்காவின் இராணுவ ஆலோசனை நுட்பங்களையும் சூப்பர் கம்யூட்டர்களின் தொலைத் தொடர்பு தகவல் தணிக்கைகளையும் மீறிக்கொண்டு கொரிய மக்களின் கரங்கள் இணைகின்றன. உண்மைகளைத் திரிபு படுத்துபவர்களினதும், அடக்குமுறைச் சமுதாயத்தை நியாயப்படுத்துபவர்களினதும் ஆதிக்கத்திலிருக்கும் இக்கருவிகள் அவர்களையே அடையாளங்காட்டப் பயன்படுத்தப்படும் காலம் வெகு தொலைவில்லை என்பதையே இது தெளிவுபடுத்துகிறது.

தடைகள் அடையாளப்படுத்தப்படும்போது, அவை தகர்க்கப்படுவதற்குக் கரங்கள் இணையும், மொத்தத்தில் பார்த்தால் அடக்குமுறைகளுக்கெதிரான ஒருமைப்பாட்டிற்கு உருவங் கொடுத்தது 13வது சர்வதேச மாணவர் இளைஞர் விழா. □

படிப்பகம்

www.padippakam.com

ஈழத்துச் சிறுகதை

# முத்திரையிடப்பட்ட உறவுகள்

இளையவன்

'PAR AVION' என முத்திரையிட்ட வெள்ளை நிற 'என்வலப்பை' தபால்காரனிடமிருந்து வாங்கிய கனகம்மாவிற்கு முகம் மலர்ந்தது. ''அமெல்டா மூக்குக் கண்ணாடிக் கூட்டை எடுத்து வா'' என குசினிக்குள் இருந்த மருமகளை நோக்கிக் குரல் கொடுத்தபடி முன் விறாந்தையிலிருந்த ஈஸிசேரில் இருந்து கொண்டார் கனகம்மா. சுமார் எட்டாயிரம் மைல் தொலைவில் ஜெர்மனியிலிருக்கும் மகள் பரணியுடன் ஏதோ நேரடியாகப பேசப் போகிறோம் என்ற உணர்வில் 'என்வலப்' கூட்டைத் திறந்தாள். நன்கு மடிக்கப்பட்ட காபன் பேப்பர் துண்டு முதலில் எட்டிப் பார்த்தது. அதனைப் பிரித்த போது 10 டொச் மார்க் (ஜெர்மன் பணம்) நோட்டொன்று சிரித்துக் கொண்டிருந்தது.

'அத்தை, ஆர் போட்ட கடிதம் இது' எனக் கேட்டுக் கொண்டு வந்த அமெல்டாவை நோக்கி ''பரணி தான் காசு அனுப்பியிருக்கிறாள். என்னத்தைச் செய்தாலும் தாய், தகப்பன் எண்ட பாசம் பெம்பிளைப் பிள்ளைகளுக்குத்தான்'' எனக் கூறிய போது அமெல்டாவின் மனம் சுருக்கென்றது. அவள் அவ்விடத்தை விட்டு நகர்ந்து குசினிக்குள் புகுந்து கொண்டாள்.

'குமணன், இப்பவும் வெளி நாட்டிலை இருந்திருந்தால் எப்படியெல்லாம் காசு அனுப்பியிருப்பான்... எத்தனை ஆயிரத்தை செலவழிச்சு இந்தச் சனியனை அனுப்பி விட, இவன் ஏதோ இயக்கம் எண்டு திரும்பி வந்ததும் இல்லாமல் தன்ர எண்ணத்துக்கு ஒரு கலியாணம்!...' என மனதில் எழுந்த எண்ண அலைகளை மூடிவிட்டு கடிதத்தை படிக்கலானாள் கனகம்மா...

★ ★ ★

வெங்கடேசுவரன் வித்தியாசமான எண்ணங்களைச் சுமந்து கொண்டிருக்கும் ஒரு மனிதர். ஒரு இலக்கியவாதி என அழைக்கப்படலாமோ தெரியாது. ஆனால் இலக்கிய வட்டங்களைச் சார்ந்த பிரமுகர்களிடையே பிரபலமானவர். யாருக்கும் பாடம் நடத்தி போதனை செய்தவரில்லை. எனினும் பலரும் 'ஆசிரியர் ஐயர்' என்றே அவரை அழைக்கின்றனர். அறுபது வயதைக் கடந்து விட்ட போதிலும் இப்போதும் இளவட்டங்கள் பெரும்பாலும் அவரை மொய்த்துக் கொண்டிருக்கும். அவரை வீட்டில் முகாமிட்டிருக்கும் இந்த இளைஞர் கூட்டத்தைச் சமாளிப்பதில் திண்டாடிப் போபவர் பெரும்பாலும் கனகம்மா தான்.

வெங்கடேசுவரன் கனகம்மா தம்பதிகள் தங்கள் வாரிசுகளாக பெற்றுள்ளவை நான்கு ஆண் மக்களும், இரண்டு பெண்களும். முத்திரைச் சந்தியிலிருந்து கச்சேரி நோக்கிச் செல்லும் தார்றோட்டின் அருகாமையிலுள்ள மூத்த விநாயகர் கோயிலின் எதிர்ப்புறமுள்ள இந்த வீடும், ஒரு சைக்கிளும் சுமார் ஒரு லட்சருபா கடனும் தவிர வேறு சொத்து எதுவும் வெங்கடேசுவரனுக்கு கிடையாது.

★ ★ ★

குமணன், படலையைத் திறந்து சைக்கிளை தள்ளிக் கொண்டு உள்ளே போகும் போது வெங்கடேசுவரன் சாமிப் படங்களின் முன்பு நாராயணனை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருக்கிறார். அதாவது மாலை நேரம் ஆறு மணியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

உடை மாற்றி, முகம், கை, கால் அலம்பி முன் விறாந்தைக் கதிரைக்கு வந்துவிட்ட குமணன்

'அமெல்டா, என்னப்பா செய்யிறீர்' என்றான் செல்லமான அதட்டல் தொனியில்.

'இந்தாங்கோ, உங்களுக்குத் தேத்தண்ணி' என்றபடி தேநீர்க் கோப்பையுடன் வந்தாள் அமெல்டா.

''இதுக்குத்தானோ குசினிக்குள்ளை இவ்வளவு நேரம்'' — குமணன்.

''இல்லையில்லை, இரவுச் சாப்பாடு செய்யிறன்'' — அமெல்டா.

'ஏன், அம்மா இல்லையா'

படிப்பகம்

www.padippakam.com



''இல்லை. பரணி மச்சாளின்ர கடிதம் வந்தது. அதை எடுத்துக் கொண்டு பவானி மச்சாள் வீட்டை போட்டா, பொழுதுபட முன்னம் வந்திடுவன் எண்டு சொன்னவ''

'என்னவாம் பரணி, என்ன எழுதி யிருக்கிறா'

'நான் கடிதம் பார்க்கேல்லை. ஆனால் காசு அனுப்பியிருக்கிறா'

'அப்பிடியெண்டா, ஏதும் சாமானுகளும் வாங்கி அனுப்பச் சொல்லி எழுதியிருப்பாளே' எனக் குமணன் ஐயம் தெரிவிக்கவும், வெங்கடேசுவரன் தன் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வெளியே வரவும் சரியாக இருந்தது.

''அவள் என்ன எழுதியிருக்கிறாளோ எனக்குத் தெரியாது. நானும் இன்னும் கடிதம் பார்க்கேல்லை. ஆனால் அவளைப் பற்றித் தேவையில்லாமல் கதைக்கத் தேவையில்லை விளங்குதோ.''

தனக்கும், கணவருக்கும் இடையிலான உரையாடலில் மாமன் வெங்கடேசுவரன் தலை யிட்டதும், அவ் இடத்திலிருந்து விலகிக் கொண்டாள் அமெல்டா. குமணன் மௌன மானான்.

★ ★ ★

''பத்து டொச் மார்க்கை அனுப்பிப் போட்டு பத்தாயிரம் ரூபாய்க்கு சாமான் வாங்கி அனுப்பச் சொல்லி அவள் எழுதுவாள். இவர்களும் அதுதான் முக்கிய வேலையெண்டு திரிவார்கள். இதுக்கு நானென்ன செய்யிறது'' எனத் தனிமையில் அமெல்டாவிடம் முணுமுணுத் தான் குமணன்.

'உங்கட தம்பி, உத்தமன் இண்டைக்கு வந்தவர். பரணி மச்சாளின்ரை சாமானுகளை வாங்கி அனுப்புறதுக்கு எண்டு ஐநூறு ரூபா அத்தையிடம் கொடுத்தவர். பவானி மச்சாளும் இருநூறுரூபா குடுத்தவளாம். மிச்சக் காசைத் தான் உங்களிட்டைக் கேட்டவா' என்றாள் அமெல்டா.

அந்த மெல்லிய ஒளியிலும் கூட அவனது முகபாவ மாற்றங்களை துல்லியமாகத் தெரிந்து கொண்டாள் அமெல்டா.

'அவனுக்கென்ன. அவன் என்ன செய் கிறான் எண்டு ஒருத்தருக்கும் தெரியாது. எப்பவாலும் இருந்து போட்டு ஒரு ஐநூறு அல்லது ஆயிரத்தை விட்டெறிஞ்சு போட்டுப் போனா அவன் நல்ல பிள்ளை — உழைக் கிறவனை எண்டுபேர் போட்டிடுவினம். அவனை மாதிரிக் கள்ளத்தொழில் செய்யிற தெண்டா நான் இப்ப கோட்டீஸ்வரன். இவர் களுக்கு லட்சமென்ன, கோடிரூபா குடுத் தாலும் பரவாயில்லை. ஆனால் நான் அப்பிடி யில்லை. ஏதோ லட்சியத்தோட சீவிக்கத் தெண்டிக்கிறன். அதை இவர்கள் விளங்க மாட்டன் எண்டா நான் என்ன செய்ய''

''நீங்க சொல்லுறது சரிதானப்பா. ஆனா என்ன செய்யிறது. பரணி மச்சாளின்ர குழந் தைக்கும் ஏதோ சுகமில்லையாம். அதுக்குத் தானே ஆயுள் வேத மருந்துச் சாமான்களும், மற்றக் கொஞ்சம் சில்லறைச் சாமானும், ஒரு வெள்ளி அருணாக் கொடியும் (அரை நாண் கொடி) தானே வாங்கி அனுப்பச் சொன்னவை. கையில் கிடக்கிற காசு போக மிச்சம் ஒரு ஐநூறு ரூபாதான் தேவையாம். இதை குடுக்கிறதை விட்டுட்டு நீங்கள் சுத்தப் போனால் ஒண்டு மில்லாமை வந்தவளாலை தான் தங்களுக்கு கஷ்டம் எண்டு என்னோட தானே கோபிப் பினம்!'' என அமெல்டா தன் நியாயத்தை எடுத்துக் கூறினாள்.

''அப்பிடியில்லை அமெல்டா, பரணிக்கு தேவையெண்டா அங்கேயே ''இண்டியன் சொப்''பிலை வாங்கலாம். அப்படியில்லை யெண்டா அவளுக்கே காசு காணாது எண்டு எழுதலாம். இல்லாட்டி 'பரீசிலை' இருக்கிற தம்பி பரதனுக்கு எழுதி வாங்க வேண்டியது தானே. அதையெல்லாம் விட்டுட்டு என்னை ஏன் கஷ்டப்படுத்துவான். நான் இவர்களைத் தவிக்க விடக்கூடாது எண்டு தானே வைச்சுப் பாக்கிறன். மாதம் ஒன்றுக்கு இங்கை எவ் வளவு செலவாகுது. இதுகளை எல்லாம் நான் கணக்குப் பாத்துக் கேட்டனானே. இல்லைத் தானே. பிறகு ஏன் உம்மோடை கோவிக்க வேணும்!'' என்றான் குமணன்.

''உதெல்லாம் கதைக்கப் போன உங் களுக்குத்தான் கரைச்சல். உங்களை வெளியிலே அனுப்புறதுக்குப் பட்ட கடனிலை இருந்து இப்ப கட்டிற வட்டி வரைக்கும் கதை வளரும். வீண்பிரச்சனை வேண்டாம் உங்களுக்கு'' என்றாள் இதமாக அமெல்டா.

''என்னவோ நான் சொல்லுறதைச் சொல்லிப் போட்டன். நீர் என்னெண்டாலும் செய்யும். நான் நாளைக்கு முல்லைத் தீவுக்குப் போறன். வர ஒரு கிழமைக்கு மேலையாகும்'' என்றபடி அமெல்டாவை அணைத்துக் கொண் டான் அவன்.

★ ★ ★

'அம்மா, அம்மா' என்ற குரல் கேட்டு வாயிற் படலையைத் திறந்தாள் கனகம்மா.

படிப்பகம்

www.padippakam.com



''என்னம்மா, என்னைத் தெரியுதோ'' என்றான் கணேசலிங்கன்.

''ஓமோம், போன முறை வரேக்கை வந்திட்டுப் போனனீரெல்லே''

''ஓமோம். ஞாபகம் வச்சிருக்கிறியள் என்ன''

'எப்ப இனித் திரும்ப ஜெர்மனி போறது'

''நாளைக்கு காலை இஞ்சையிருந்து வெளிக்கிடுவன். எப்படியும் ஒரு கிழமைக் குள்ளே ஜெர்மனிக்கு போயிடுவன். தோழர் குமணன் நீங்களும் ஏதோ சாமான்கள் அனுப்ப இருக்கிறியள் வாங்கிக் கொண்டு போகச் சொன்னவர். அதுதான் வந்தனான்''

'தம்பி, சொல்லிப் போட்டுத்தான் போனவன். கொஞ்சம் இருங்கோ வாறன்' என்று அறைக்குள் நுழைந்தாள் கனகம்மா.

அமெல்டா கொண்டுவந்த குளிர் பானத்தை வாங்கிப் பருகிக் கொண்ட கணேசலிங்கன் பேசிக் கொண்டிருந்தான்.

கனகம்மா பெரிய கடதாசிப் பெட்டியை அவன் முன்னே கொண்டு வந்து வைத்த போது கணேசலிங்கன் திகைத்துப் போனான். எனினும் திகைப்பை முகத்தில் காட்டாமல் இரு கையாலும் பெட்டியைத் தாங்கியபடி, எத்தனை கிலோ இருக்குமென வினவினான். பத்துக் கிலோவும் வராது என கனகம்மா கூறிக் கொண்டிருந்ததைச் செவிமடுத்தாது கணேச லிங்கன் அட்டைப் பெட்டியை பிரித்துப் போட்டு 'மிக முக்கியமான அவசரமான சாமான்களை மட்டும் எடுத்துத் தாங்கோ' எனக் கூறி ஒரு சுங்கப் பரிசோதனை நடாத்திக் கொண்டிருந் தான்.

தான் கொண்டுவந்திருந்த கைக்கு அடக்க மான பைக்குள் மட்டும் தெரிவு செய்த பொருட் களை அடக்கிக் கொண்டு மிகுதியை அங்கேயே விட்டுவிட விரும்பினான். அதற்காக அவன் எடுத்துச் சொன்ன நியாயங்கள் எதுவும் எடுப் படவில்லை. ''மிளகாய்த்தூள், கோப்பித்தூள் போன்ற பொருட்கள் அங்கேயே தாராளமாக வாங்கலாம் எனக் கணேசலிங்கன் கூறியபோது கனகம்மாவுக்கு கிட்டத்தட்ட அழுகையே வந்து விடும் போலிருந்தது.

''நானே தெரிவு செய்து வாங்கி, நானே கஷ்டப்பட்டு வறுத்து, இடித்தது இது. இதிலை எவ்வளவு 'அன்பு' கலந்திருக்கும், கடையில வாங்குறதும் அப்படியே ஆனபடியால் கட்டாயம் எடுத்துக் கொண்டு போங்கோ தம்பி'' என இரங்கினாள். அத்தையின் அன்பெல்லாம் கரன்சி நோட்டுக்குள் மட்டுமே அடங்கும் எனத் தெரிந்திருந்த அமெல்டாவும் அத்தைக்காகப் பரிந்து பேசினாள்.

கேலியாகப் பேசும் விடாக்கண்டனான கணேசலிங்கன், ''அப்பிடி எண்டா நான் இதை எடுத்துக் கொண்டு போறன். ஆனால் என்ர சாமன்களோடை இதுகளை எல்லாம் பிளைற்றிலை கொண்டுபோகேலாது. கொண்டு போய் 'எங்கடை இடத்திலை' வச்சிட்டுப் போனால், பிறகு வாற யாரிடமேனும் குடுத்து விடுவான்கள் தானே'', என்றான் கண்களைச் சிமிட்டியபடி.

''அது வேண்டாம். நீங்கள் கொண்டு போறதெண்டா எடுத்துக் கொண்டு போங்கோ. இல்லாட்டி இஞ்சை கிடக்கட்டும். அங்கே கொண்டு போனா உங்கட ஆக்கள் மிச்சம் மீதி வைக்கமாட்டினம்'' என்றாள் அமெல்டா.

''என்ன என்ன எங்கட ஆக்களோ, ஏன் உங்கட ஆக்களும் தானே இருக்கினம். நான் குமணனிட்டையே குடுத்திட்டுப் போறேன'' என்றான் கிண்டலாக.

''எதுக்குத் தம்பி பிரச்சினை. உம்மாலை ஏலாட்டா விடும். நீர் எடுத்ததுகளை மட்டும் கொண்டு போய்க் குடும். மிச்சத்தை நாங்கள் ஏதோ வழியிலை அனுப்பிறம்'' என்றாள் கனகம்மா.

''அது கட்டாயம் செய்வன். அதுக்கு ஒண்டும் யோசிக்க வேண்டாம். அமெல்டா, குமணனிட்டைச் சொல்லுங்கோ நான் விசாரித்தது எண்டு. வேறை என்ன போய் வரட்டுமே'' என்று விடை பெற்றுக் கொண் டான்.

★ ★ ★

கனகம்மா கஷ்டப்பட்டுச் செய்த பொருட் களை அனுப்ப முடியவில்லையே எனக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கச் சகிக்கவில்லை வெங்கடேசுவரனுக்கு. தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு எங்கெங் கெல்லாமோ சுற்றி ஒரு வழியாக தொடர்பு ஒன்று ஏற்படுத்திக் கொண்டார். பரணியின் புருசனின் தங்கையின் கணவரின் சகோதரி ஜெர்மனி செல்வதற்காக கொழும்பு சென்றிருப் பதாகத் தெரியவந்தது. தீர விசாரித்ததில் அங்கிருந்து புறப்பட இன்னும் மூன்று தினங் களாகும் எனத் தெரியவந்தது. எனவே நாளை அல்லது நாளை மறுதினம் இங்கிருந்து புறப் பட்டால் கொழும்பில் அவர்களைச் சந்தித்து இந்தப் பொருட்களைக் கொடுத்து அனுப்பி விடமுடியும். பரணியுடனும் தொலைபேசி

படிப்பகம்

www.padippakam.com



மூலம் பேசிடலாம். அத்துடன் கடைசி மகன் அருந்தவத்தையும் கூட் அழைத்துச் சென்று விட்டால் நல்லது. கொழும்பில் தெரிந்த நண்பர்களுடன் அருந்தவத்தை தங்க வைத்து விட்டால் அவனது பாதுகாப்புக்கு நல்லது. இங்கேயே அருந்தவத்தை வைச்சிருந்தால் வீண் பிரச்சனைகள் வந்தாலும் வரலாம். குமணனைத் தேடி வாறவை அவனில்லை எண்டு இவனை ஏதும் செய்தாலும் கஷ்டம். ஆனபடியால் எப்படியும் இவனையும் கூட்டிக் கொண்டு நாளைக்கு வெளிக்கிட்டால் தான் சரி என முடிவு பண்ணிக் கொண்ட வெங்கடேசுவரன் தன் திட்டத்தை கனகம்மா விடம் ஒப்புவித்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கனகம்மா பரணியுடன் தொலைபேசியில் பேச தானும் வரப் போவதாகக் கூறினாள். பரீசில் இருக்கும் பரதனின் கல்யாண ஏற்பாடுகள் தொடர்பாக அவனிடம் பேச வேண்டும் என வலியுறுத்திய கனகம்மா இத்திட்டத்தை நிறை வேற்ற பணம் எப்படி? எனக்குத் தெரியாமல் ஏதும் வைத்திருக்கிறீரோ? என வினவினாள் கணவனிடம்.

'அதெல்லாம் நாராயணன் பார்த்துப்பான்' என்றார் வெங்கடேசுவரன் சர்வ சாதாரண மாக.

★ ★ ★

இருள் விலகத் தொடங்கிய அதிகாலை நேரம். வெங்கடேசுவரனும் கனகம்மாவும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டு விட்டனர். அவர்களை பஸ் நிலையம் வரை சென்று வழியனுப்பிவிட்டு வீடு திரும்பிய அமெல்டா வைத் தேநீர்க் கோப்பையுடன் வரவேற்றான் அருந்தவம். மெல்லிய தோற்றம். மிரண்ட விழிகள். ஒரு விதமான குழப்பம் நிறைந்த மனநிலையைப் பிரதிபலிக்கும் முகபாவம் அனைத்தும் சேர்ந்த அருந்தவத்தை பார்த்த போது அமெல்டாவிடம் அனுதாப உணர் வொன்றையே தோற்றுவித்தது.

அத்தை கனகம்மா, புறப்படும்போது போது 'பிள்ளைபிடிகாரர்களின் பிரச்சனை' தொடர்பாக அருந்தவத்தை எங்கேயும் வெளி யிலை கடைக்கு கூட அனுப்ப வேண்டாம்; அவனை வீட்டை விட்டு எங்கேயும் போகவிட வேண்டாம் என்றெல்லாம் கூறிய ஆலோசனை கள் அவள் காதுகளில் இன்னமும் ரீங்கரித்துக் கொண்டிருந்தது.

''அப்பரும் அம்மாவும் திடீரெனக் கொழும் புக்கு வெளிக்கிட்டினையே இவர்களிடம் இதுக்கு ஏது காசு'' என கதிரையில் இருந்த படியே அமெல்டாவிடம் கேட்டான் அருந்தவம்.

இவனது கனத்த யோசனைகளுக்கு இது தான் காரணமோ? இதற்கு என்னிடமிருந்து தான் பதில் எதிர்பார்க்கிறானோ எனத் தனக் குள்ளேயே எண்ணிக் கொண்ட அமெல்டா ''மாமா, காசு கொஞ்சம் வச்சிருந்தவர். அதோடை என்ரை காப்பையும் அத்தை வாங்கி அடைவு வைச்சவா'' எனக் கூறினாள்.

அப்பா, அம்மாவை வைச்சுப் பார்ப்பதும் போதாதெண்டு அவர்கள் நினைச்சப்பாட்டிற் கெல்லாம் செலவழிக்க வேண்டிக்கிடகே 'பாவம் குமணன் அண்ணை' என எண்ணிக் கொண்டு,

''அண்ணி'' என வியப்புடன் அவன் திரும்பிப் பார்த்த பார்வை 'ஏன் கொடுத்தீர்கள்? என்ன காரியத்தைச் செய்து விட்டீர்கள்?' எனக் கேட்பது போலிருந்தமையால் தர்ம சங்கடத்திற்குள்ளானாள் அமெல்டா.

''இல்லை அருந்தவம். பரணி மச்சாளோ டையும், உங்கடை அண்ணன் பரதனோடையும் அவசரமாய் ரெலிபோனிலை கதைக்க வேணுமாம். மற்றது இந்தச் சாமானுகளும் குடுத்துவிடத்தானே வேணும். அது தான் குடுத்தனான்'' எனச் சமாளித்தவளாய் ''ஏன் கொழும்புக்கு போக மாட்டன் எண்டு ஒத்தக்காலிலே நின்றனீர்?'' எனக் கேள்வி தொடுத்தாள்.

''இவர்களுக்கென்ன? கொண்டுபோய் விட்டு விட்டு வந்திடுவார்கள். பரீசிலை இருந்து காசு வரும், ஜெர்மனியிலை இருந்து காசு வரும் என்று நான் கனவு கண்டு கொண்டிருக்க வேண்டியதுதான். அவை ஒருத்தரும் ஒண்டும் செய்யப் போறதில்லை, அதும் குமணன் அண்ணைக்குத் தான் பிறகு கஷ்டம். இங்கை பள்ளிக்கூடமுமில்லை. இப்ப ரியூசன்களும் இல்லை; வீட்டோடை இருந்திட்டா பிரச்சனை வராது எண்டு நினைக்கிறன். எதுக்கும் குமணன் அண்ணன் வரட்டும் யோசிப்பம்'' எனக் கூறியபடி வானொலிப் பெட்டியைத் திருகினான்.

★ ★ ★

கொழும்பு பஸ் குழிகளிலும், கிடங்கு களிலும் விழுந்து நிமிர்ந்து ஓடிக் கொண்டிருக் கிறது. பஸ்சில் இருந்த பிரயாணிகள் அனை வரிடையிலும் ஒரு இனம் புரியாத அமைதி. ஒவ்வொரு சோதனைத் தடைகளையும் கடந்து செல்லும் போது ஏதோவொரு வெற்றி பெற்ற உணர்வு.

காலை உணவுக்காக பஸ்கள் தரிக்க வைக்கப்படும் முறிகண்டியில் தனது தெரிந்த நண்பர்கள் யாரும் வேறு ஏதாவது பஸ்களில்

படிப்பகம்

www.padippakam.com



வருகிறார்களா எனக் கண்களைச் சுழலவிட்டுத் தேடினார் வெங்கடேசுவரன்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பஸ் ஒன்றிலிருந்து இறங்கி தேநீர் கடைக்குள் நுழையப் போன சுப்பிரமணியத்தை கண்டார் வெங்கடேசுவரன். சுப்பிரமணியம் வெங்கடேசுவரனிடம் நெருங்கிய நட்பு கொணடவர் மட்டுமல்ல அயல்வாசியும் கூட.

'என்னப்பா வெங்கடேசா துலைக்ளே பயணம்' என ஆரம்பித்தார் சுப்பிரமணியம். 'இல்லை, கொழும்பு வரையும் போட்டு வர வேணும், மகளுக்கு இரண்டொரு சாமான் அனுப்பவேணும். அதோடை பரதனுடம் ரெலிபோன் பண்ண வேணும்' என்றார்.

'எப்படி மக்கள், மருமக்கள் சுகமோ. ஊரிலை என்ன விசேசம். நானும் கனகாலம் அங்காலை வந்து'

'ஓ...பரவாயில்லை. மக்களுக்கு பெண் குழந்தை பிறந்திருக்கு, போட்டோவும் அனுப்பி யிருக்கினம். பரதனுக்கும் பெம்பிளை பாக்கிறம். ஊர்க் கதையள் கண்டபடி கதைக்கேலாது தானே இப்ப' எனப் பெருமூச்செறிந்தார்.

'மூத்தவளுக்கு குழந்தை, குட்டி ஒண்டும் இன்றும் இல்லையே, அவள் எங்கை ஊரிலை தானே. நாள் ஒருக்கால் காண வேணும் அவளை,'

'அவனை நினைச்சால்தான் எனக்குப் பெரிய கவலை. எண்டைக்கு உருப்படப் படப் போறதோ? இதுகளை எல்லாம் விட்டுப் போட்டுத் திருந்தினால்தான் எனக்கு நிம்மதி; அதுக்காக திருப்பதியானுக்கு கூட நேர்த்தி வெச்சிருக்கிறேன்' என்றார் சோகம் கலந்த குரலில். வழமையாக இவர் சொல்லுவதுதானே இது. மெல்லியதாக புன்னகை ஒன்றை இழை யோடவிட்டார் சுப்பிரமணியம் தன் முகத்தில்.

'குமணன் தான் இவர்களின்ரை பிரச்சனை யெல்லாம் பார்க்கிறான். செலவழிக்கிறான். ஆனா இவையளுக்கு அதெல்லாம் திருப்தி யில்லை. இவர்களையெல்லாம் திருப்திபடுத்த ஒரு குமணன் இல்லை; ஓராயிரம் பேர் வந்தாலும் போதாது' என நினைத்தபடியே தேநீர்க் கடைக்குள் வெங்கடேசுவரனை அழைத்துச் சென்றார் சுப்பிரமணியம். □

*ஈழ நண்பர் கழக கலை மாநாட்டில்*

## எஸ். வி. ராஜதுரை பேச்சு

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கையெழுத் தாகி இரண்டு ஆண்டுகள் ஆகியும்கூட இந்தியா முழுவதும் அதைப் பற்றியே தொடக்கம் முதல் பேசப்பட்டு வருவதே இந்த ஒப்பந்தம் படுதோல்வி அடைந்திருக் கிறது என்பதற்கான சான்றாகும்.

தமிழர் தாயகம் அமைப்பதற்கான அடிப் படைக் கோரிக்கைகளில் ஒன்று, ''வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும்.'' இதற் காகத்தான் விலைமதிப்பற்ற உயிர்கள் பலி கொடுக்கப்படுகின்றன. எனவே ஒரு தொடர்ச்சி யான பூகோளப்பிரதேசம் இல்லாமல் ஒரு தேசம் என்பது இருக்க முடியாது; அந்த தேசத்தில் வாழக்கூடிய மக்கள் தங்களுடைய தனித்தன்மை யைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. அப்படி ஒரு பிரதேசம் அமைந்து விட்டாலும்கூட இத்தனை காலம் போராடி வருகின்ற தமிழர் களின் ஆர்வங்கள், அபிலாஷைகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டு விடும் என்றும் சொல்ல இயலாது. ஏனென்றால் அந்தப் பிரதேசத்து மக்களுக்கு தங்களது தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டிய உரிமையும் அதிகாரமும் இருந்தாக வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு நாட்டில் 'பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக இலங்கைக்குப் போகி றோம்' என்று சொல்லி இலங்கையில் போய் இருந்து கொண்டு 'நாங்கள் ஏன் அங்கேயே இருக்கிறோம் என்றால்...' என்று விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தால் அது அரசியல் மோசடியே தவிர வேறல்ல. ஏனென்றால் இந்திய அரசுக்கு என்றைக்கும் தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணமே கிடையாது. சரி அதுதான் இல்லை. புவிசார் அரசியல் நலனுக்காக — பாதுகாப்புக் காக அல்லது இந்துமகா சமுத்திரத்திலே தன் னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வ தற்காக அங்கு இருக்கிறதா — அதற்காகத் தான் போராடுகிறதா? என்றால் அதுவும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. வேறென்ன? இந்தியப் பெருமுதலாளிகளுடைய பொருளாதார நலன்களை ஆதரிக்கக் கூடிய நோக்கம் — அவர்களுடைய சந்தை விஸ்தரிப்பை — தொழில் விஸ்தரிப்பை—பொரு ளாதார விஸ்தரிப்பை — ஆதிக்கத்தை—உத்திர வாதம் செய்வதும் — செய்வதற்கான நோக்கம் இந்திய அரசாங்கத்துக்கு உண்டு என்று பத்திரிகைகள் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

"

'எங்களுடைய பிரச்சினை என்ன? நாங்கள் எதற்காக இவ்வளவு துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக்கொண்டு இந்த மண்ணின்மீது வாழவேண்டும் என்று துடிக்கிறோம்? நாங்கள் தனித் தன்மை மிக்க ஒரு தேசிய இனம். எங்களது வாழ்வை, இருப்பை உறுதி செய்வதற்கு முயற்சிக்கிறோம்.'

"

# எங்களது வாழ்வை, எங்களது இருப்பை உறுதி செய்யவே போராடுகிறோம்

## கலை மாநாட்டில் ஈரோஸ் சின்ன பாலா

நண்பர்களே! உங்களுடைய முன்னிலையில் எங்களின் கடந்த காலச் சோகங்களை எடுத்துச் சொல்லி உங்கள் கண்ணீரை வரவழைக்க நான் வரவில்லை. அல்லது எம்மவர்கள், போராட்டக் களங்களிலே பெற்ற வேதனைகளையும் துன்பங்களையும் எடுத்துச் சொல்லி அல்லது வீரங்களை எடுத்தியம்பி உங்கள் தோள்களைப் புடைக்கச் செய்ய நான் வரவில்லை. எங்கள் மக்கள் தங்களுடைய உள்ளங்களிலே எரிமலையைப் புதைத்து வைத்துக் கொண்டு அதைக் கண்ணீரால் கழுவிக் கொண்டிருக்கிற சோகத்தை உங்களிடம் சொல்லி உங்கள் அனுதாபத்தைப் பெற்றுச் செல்ல நான்வரவில்லை. எமது தேசத்து மக்கள்—இந்த நிமிடத்தில் — இந்த வேளையில் எந்த உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள்? அதை எவ்வாறு அவர்கள் பிரதிபலித்து வெளிக்காட்டுகிறார்கள் என்ற உணர்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே நான் ஆசைப்படுகிறேன்.

இந்திய - இலங்கை அரசுகளுக்கிடையில் ஏற்பட்ட முதலாவது, முடிவான ஒப்பந்தம் இதுதானா? வேறு ஒப்பந்தங்கள் எற்படவில்லையா? நேரு - கொத்தலாவ ஒப்பந்தம் ஏற்படவில்லையா? சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்படவில்லையா? சிறிமா-இந்திரா ஒப்பந்தம் ஏற்படவில்லையா? இவை தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கவில்லையா? அப்பொழுதெல்லாம் எங்களுடைய தமிழ் உணர்வுகளெல்லாம் எங்கே போய்க் கொண்டிருந்தன? கேட்கலாம். நேரு-கொத்தலாவ ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது இலங்கையிலே வாழுகின்ற மலையகத் தமிழ் மக்கள் இந்திய வம்சாவழியினர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். 64-இல் சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தம், அவர்களை நாடு கடத்துவதற்கு வழிசெய்தது. 74-இல் சிறிமாவோ - இந்திரா ஒப்பந்தம் இராமேஷ்வரம் போன்ற கடற்பகுதி மீனவர்கள் துன்பத்திற்கு உள்ளாகும் வகையில் இலங்கை கடற்படை கச்சத்தீவைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியது. இப்படி தமிழ் பேசும் மக்கள் இலங்கை இந்திய அரசுகளின் கூட்டு ஒப்பந்தங்களினால் காலத்துக்குக் காலம் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் எம்மக்கள் கண்டு கொள்ளவில்லை. எங்கள் மூத்த தலைமுறை எங்கள் தோள்களின் மீது தூக்கிவைத்துள்ள இந்த சுமைகள் எங்களை அழுத்திக் கொண்டிருக்கிற இந்த நிலையில் தான் நாங்கள் போராட வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கு முன்பு ஏற்பட்ட ஒப்பந்தங்களுக்கும் 87-இல் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கும் இடையே பெரிய வேறுபாடு இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். இலங்கையிலே இஸ்ரேலிய மொஸாத்துகளும் பிரிட்டனின் எஸ். ஏ. எஸ். களும் பாகிஸ்தானிய இராணுவக் கூலிகளும் முகாமிட்டு தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்பிக் கொண்டிருந்த நேரத்திலே, சிதைந்து அழித்துக் கொண்டிருந்த நேரத்திலே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. தமிழ்ப் பேசும் மக்கள் தங்களுடைய

படிப்பகம்

www.padippakam.com



சுய நிர்ணய உரிமைக்கான ஒரு போராட்டத்தை, ஒரு விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டிருந்த நேரம். இழப்புக்களுக்கு மத்தியிலும் தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் முன்னேறிக் கொண்டிருந்த சந்தர்ப்பம். இந்தச் சூழ்நிலையிலே தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது. சுருக்கமாகச் சொல்ல முனைந்தால், இந்து மகா சமுத்திரப் பகுதியிலே காலூன்ற முயன்ற பிற சக்திகளிடமிருந்து துணைக் கண்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று விளைந்த இந்திய அரசும், இலங்கையிலே தமிழ்ப்பேசும் மக்களின் போராட்டத்தை தணிக்க விரும்பிய நிலையில் இலங்கை அரசும் ஒரு இணக்கத்துக்கு வந்ததன் விளைவுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம். இலங்கையிலே காலூன்றக் கூடிய பிறநாட்டு சக்திகளை துரத்தி அடிப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது; மேலை நாட்டுக் கூலிகள் எமது நாட்டிலிருந்து வெளியேற வகை செய்யப்படுகிறது என்ற வகையில்தான் நாங்களும் அரசியல் நிலைமைகளை உத்தேசித்து இந்த ஒப்பந்தம் அமலாக்கத்துக்கு தடையாக இருக்கப் போவதில்லை என்பதை அப்பொழுதே எடுத்துச் சொல்லியிருந்தோம். ஆனால் எங்களுடைய பிரச்சனை என்ன? நாங்கள் எதற்காக இவ்வளவு துயரங்களையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு இந்த மண்ணின்மீது வாழ வேண்டுமென்று துடிக்கிறோம்? நாங்கள் தனித்ததன்மை மிக்க ஒரு தேசிய இனம்! எங்களது வாழ்வை, எங்களது இருப்பை உறுதி செய்வதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம். அந்த வகையில்தான் எங்களுடைய போராட்டம்.

87-இல் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகாவது எங்களது தீர்க்கப்படாத பிரச்சனைதீர்க்கப் பட்டிருக்கின்றனவா? என்பதை ஒரு நீண்ட பட்டியல் போட்டுக்காட்ட முடியும். 1948-லே இயற்றப்பட்டு மலையக மக்களை நாடற்றவர்களாக்கிய குடியுரிமைச் சட்டம் அப்படியே இன்னும் அமலில் இருக்கிறது; '56-இல் இயற்றப்பட்ட மொழியுரிமைச் சட்டங்கள் அப்படியே இன்னும் அமலில் இருக்கிறது; 70 வாக்கில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் திட்டங்கள் அப்படியே இன்னும் அமலில் இருக்கிறது; கிழக்கு மாகாணத்திலும் வன்னியிலும் தமிழ்ப் பேசும் மக்களின் வயல் நிலங்களைப் பறித்த குடியேற்றத் திட்டங்கள் இன்னும் தொடர்கின்றது; எங்கள் கழுத்துக்கு மேலே, ஒரு தூக்குக் கயிற்றைப் போலத் தொங்கிக் கொண்டிருப்பதாக நாங்கள் கருதுகின்ற — '79-இல் தாற்காலிக ஏற்பாடு என்ற பெயரில் இயற்றப்பட்ட அவசரகால நிலைச் சட்டம் — பயங்கர வாதத்தடுப்புச் சட்டம் இன்னமும் அமலில் இருக்கிறது; இதன்படி, பயங்கரவாதி என்று சந்தேகிக்கப்படுகின்ற எந்த நபரும் விசாரணையின்றி நீண்டகாலம் சிறையில் அடைத்து வைக்கப்படவும் அவர்கள் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படவும் வகை செய்யப்படுகிறது. இவை அனைத்துக்கும் மேலாக, தமிழ்ப் பேசும் மக்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அவமானப் படுத்தும் விதமாக, இழிவுபடுத்தும் விதமாக அமைந்த 6வது திருத்தச் சட்டம் இன்னமும் அமலில் உள்ளது. இவை எதற்குமே இலங்கை - இந்திய ஒப்பந்தம் பரிகாரம் கண்டுவிடவில்லை. இவை எதையுமே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கண்டுகொள்ளவே இல்லை.

இப்படி எமது பிரச்சனைகள் அடுக்கடுக்காகத் தீர்க்கப்படாத நிலையிலே எழுகின்ற எதிர்ப்புக்குரலை — ஒரு தேசிய இனத்தின் 40 ஆண்டு கால வரலாற்றில் பெறப்பட்ட படிப்பினைகளை — சுலபத்தில், இந்த இராணுவ அதிகாரிகளால் புரிந்து கொள்ளப்பட முடியும் என்ற நம்பிக்கை எமக்கில்லை. நாங்கள் கடந்த காலத்தில், தன்னிச்சையாக முடிவெடுத்து — துப்பாக்கி தூக்கி — கொலைவெறி பிடித்துப் போய் போராட்டத்தில் குதித்தவர்கள் அல்ல. எமது மக்கள் 1977 ஆம் ஆண்டிலே, ஜனநாயக ரீதியாக தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தி இருந்தார்கள்; நாங்கள் ஒரு தனியான அரசை அமைக்க வேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருந்தார்கள்; அந்த அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கு கையாலாகாத நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி இருந்த காரணத்தினால் அவர்கள் செய்ய வேண்டிய பணியை நாங்கள் செய்ய வேண்டியதாயிற்று.

எமது முன்னெடுப்பின் ஊடாக, 1983 கலவரம் தந்த படிப்பினைகள் எமது முடிவுகள் சரியானவை என்பதை உறுதிப்படுத்தின. இலங்கை அரசாங்கம் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள் ஒரு தேசிய இனத்தின் பிரச்சனைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது என்பதை உலகத்துக்கு எடுத்துக்காட்டப் பட்டிருந்தது. அந்தப் பின்புலத்தில்தான் '83 முதல் '87 வரை நோக்கப்படவேண்டும். ஈழத்தின் ஆயுதப் போராட்டப் பின்புலத்தில் '83 முதல் '87இல் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிலை ஏற்படும் வரை யாருக்கும் எந்த மயக்கமும் இருக்கவில்லை. தீர்வு — தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வு — என்பது ஒரு தனிஅரசு அமைப்பதுதான், என்பதில் எந்த போராட்ட அமைப்புக்கும் சந்தேகம் இருக்கவில்லை. ஆனல், அந்தத் தனி அரசு அமைப்பதற்கு இந்திய அரசினதும், மக்களினதும் ஒத்துழைப்புத் தேவை என்பதும், அதைப்

படிப்பகம்

www.padippakam.com



புரிந்து கொள்ளும் நிலையிலும்தான் தங்களுடைய போராட்ட நிலைகளை விரிவுபடுத்தி அமைப்புகள் செயல்பட்டு வந்தன. ஆனால் '85-இல் இடம்பெற்ற திம்பு பேச்சுவார்த்தையின் போது, இயக்கங்கள் காட்டிய ஒற்றுமை என்ற அரணை உடைத்துக் கொண்டு எத்தத் தீர்வையும் திணித்துவிட முடியாது என்ற நிலைமையில் அரசுகள் விடுதலை இயக்கங்களை கூறுபோட்டு அணுக முற்பட்டதன் விளைவுதான் இயக்கங்களுக்கிடையே ஏற்பட்ட பிளவு; ஒற்றுமைச் சிதைவு.

பதவிப் போராட்டம் என்றும் துரோகத் தனங்கள், தியாகத் தனங்கள் என்றும் இன்று கொச்சைப் படுத்தப்படுகின்ற இந்த நிலைமைக்கு இந்த அரசியல் ஆட்சிபீடங்களே காரணமாக இருந்திருக்கின்றன என்றுதான் நாங்கள் கருதுகிறோம். 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு இந்திய ராணுவம் இலங்கை மண்ணிலே காலடி எடுத்து வைத்த பிறகு அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா, ''இலங்கைக்கு இந்தியப்படை வந்திருப்பது இலங்கை ராணுவத்துக்கு வலுவூட்டும் படையாகவும், விடுதலை அமைப்புகள் தங்களுடைய ஆயுதங்களை தாமாக முன்வந்து ஒப்படைக்காவிடில் அவற்றை களையும் பணியில் ஈடுபடவும் தான். அந்த ஆயுதக்களைவு முடிந்ததும் இந்திய ராணுவம் வெளியேறும்'' எனறு சொன்னார். விடுதலை அமைப்புக்களிடையே ஆயுதக் களைவு என்ற அம்சத்தை அமல் படுத்துவதற்காக இந்திய ராணுவத்தை நிர்ப்பந்திக்கின்ற வகையிலேதான், விடுதலைப்புலித் தலைவர்கள் மீது நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அந்த சதி வலைக்குள் விழுந்த இந்திய ராணுவம் ஒரு மோதலை, ஒரு யுத்த நிலையைத் தோற்றுவித்தது. திருகோணமலையில் 1987 அக்டோபர் 4ஆம் தேதி அன்று நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலே, இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனா ஒரு வேண்டுகோள் விடுத்தார். ''இந்திய ராணுவம் விடுதலை போராளிகளிடம் ஆயுதக் களைவை முற்றாகச் செய்யாவிடில், இந்திய ராணுவத்தின் மீது நாங்கள் நம்பிக்கை இழக்க நேரிடும்.'' இந்த ஒரு எச்சரிக்கைதான் இந்திய ராணுவத்தை அசைத்துவிட்டது; டில்லி நிலைகுலைந்து விட்டது; நடுநிலை தவறிப்போய், இந்திய ராணுவம் தமிழ்ப்பேசும் மக்களை எதிரிகளாகப் பாவிக்கும் ஒரு நிலை ஏற்பட்டது. இந்த அர்த்தமற்ற யுத்தம், இன்று வரையிலும் தொடர்ந்து கொண்டிருப்பது தமிழ்ப்பேசும் மக்களின் ஒரு சாபக்கேடு. இந்த யுத்தச் சூழ்நிலையிலிருந்து நாங்கள் விடுபட வேண்டும்; யுத்தச்சூழ்நிலை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எமது மக்களின் விருப்பம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக மாகாணசபை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தமிழ்மக்களின் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று இந்தியா இன்னமும் நம்புகிறது. ஆனால், இந்த மாகாண சபைக்கே உரிய அதிகாரத்தை வழங்குவதில் இலங்கை அரசு தயக்கம் காட்டி வருகிறது என்பதை நாங்கள் அவ்வப்போது எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்; வருகிறோம். ஒப்பந்தம் ஏற்பட்டது முதலே இலங்கை அரசு ஒப்பந்தத்தை திட்டமிட்டே மீற முயற்சிக்கிறது, மீறுகிறது என்பதையும் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தோம். ஆயுத ஒப்படைப்புக்கு 24 மணி நேரம்; சிறைக் கைதிகள் விடுதலைக்கு 48 மணி நேரம்; இலங்கை ராணுவத்தை முகாமுக்குள் அடைப்பதற்கு 96 மணி நேரம் என்றவாறு மணிக்கணக்கில் திட்டமிட்டு கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் ஆண்டுக் கணக்காகியும் நீள்கிறது. 48 மணி நேரத்தில் விடுவிக்கப் பட்டிருக்க வேண்டிய 26 அரசியல் கைதிகள் இன்னமும் வெலிக்கடை சிறையில் இருக்கிறார்கள். பத்மநாபா மீதான பிடி விசாரணை கூட இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கிற சூழ்நிலையில் இதைக்கூட பேச அவர்கள் நாவிழந்து நிற்கிறார்கள் என்பதுதான் எமக்குக் கவலையளிக்கிறது. இதைக் கூட தட்டிக்கேட்க முடியாத சூழ்நிலையில் மாகாண அரசு இருக்கின்றது என்பதுதான் எமது குற்றச்சாட்டு. ஆனால் அவர்கள் இதைப் புரிந்து கொள்ளக் கூட தயாராக இல்லை. இந்தச் சூழ்நிலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்திய, இலங்கை அரசுகளிடையே ஒரு முரண்பட்ட நிலையை — விரிசலை—ஒரு கசப்பான நிலையைத் தோற்றுவித்து விட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது இதற்கு முன் செய்து கொண்ட ஒப்பந்தங்களைவிட இந்த ஒப்பந்த அமலாக்கலில் இலங்கை அரசாங்கம் பின்வாங்க முடியாது என்ற ஒரு நம்பிக்கை தமிழ்ப்பேசும் மக்களிடையே துளிர் விட்டது என்பது உண்மை. ஆனால், இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்தைக் கூட ஏமாற்ற முடியும் என்ற நிலையில் இனியும் இலங்கையின் ஒற்றை ஆட்சி அமைப்புக்குள் ஒரு தீர்வை எங்கள்மீது திணிப்பதற்கு இந்தியா முற்படக்கூடாது என்பதுதான் எங்களது பணிவான வேண்டுகோளாகும். 1977இல் தமிழ்ப் பேசும் மக்கள் அங்கீகரித்த சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான கோரிக்கையை தமிழகம் இன்னும் அங்கீகரிக்க வில்லையே என்பது எமது வேதனையான வெளிப்பாடாகும். தமிழ்நாடோ அல்லது இந்தியாவோ இதனை

படிப்பகம்

www.padippakam.com



இன்னும் கண்டுகொள்ளவில்லையே. தமிழன், தமிழுணர்ச்சி, மனிதநேயம் என்றெல்லாம் இங்கே அவசியமாகவும் அவசரமாகவும் குரலெழுப்பிய போதும்கூட தமிழ்ப்பேசும் மக்களுக்கான ஒரு தனி அரசு அமைக்கப்படுவதை நாங்கள் கொள்கையளவில் ஆதரிக்கிறோம் என்று அரசாங்க ரீதியிலான அறிக்கைகள் கூட வரவில்லை. இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கின்ற சக்திகளாக விடுதலைப் போராளிகளைப் பயன்படுத்தி அந்த வகையில் இலங்கை அரசு பணிந்து வந்தபொழுது விடுதலைப் போராளிகள் மீது நிர்ப்பந்தம் செலுத்துவதற்கு தயாராக இருக்கும் நிலையில்தான் இந்திய அரசு செயல்பட்டது. இதை தமிழ் மக்களோ, இந்திய மக்களோ இனியும் அனுமதிக்கக் கூடாது. எனவே தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களே தீர்மானிக்கும் விடயம். அதற்கு ஒத்துழைப்பும் உறுதுணையுமாக செயற்பட வேண்டும் என்பது தான் நாங்கள் விடுக்கும் பணிவான வேண்டுகோளாகும்.

இந்த நிலையிலே, இலங்கையின் ஒற்றையாட்சி முறையினையும் 6வது திருத்தச் சட்டத்தினையும் ஏற்றுக்கொண்டுதானே இலங்கை பாராளுமன்றத்துள்ளே நுழைந்தீர்கள்? பிறகென்ன பிரிவினை பற்றியும் விடுதலை பற்றியும் கூறுகிறீர்கள்? என்ற சந்தேகம் உங்களுக்கு எழக்கூடும்.

நண்பர்களே!

நாங்கள் - மரபுவழிவந்த - பாராளுமன்றவாதிகளே அல்ல. நாம் தத்தளித்துக் கொண்டிருக்கும் எமது தமிழ் தேசிய இனத்தின் குரலை ஒலிப்பதற்கான ஒரு பிரச்சார மேடையாக பயன்படுத்துவோம் என்பதை முன்வைத்துத்தான் பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்திருக்கிறோம். நாங்கள் இன்று கோருவதெல்லாம் இதுதான்: எமது மக்கள் தேர்தல் மூலம் வெளிப்படுத்திய அந்த உணர்வுகளை அங்கீகரியுங்கள்; அதன் அடிப்படையில் இலங்கை, இந்திய அரசுகளே! செயல்படுங்கள் என்பதுதான்.

இவற்றை பின்வருமாறு நாங்கள் வகைப் படுத்துகிறோம்.

○ நிரந்தர யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்துவதுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும்.

○ விடுதலை அமைப்புக்களிடையே நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை நடத்தி ஒரு இணக்க நிலைமைக்கு வழியேற்படுத்த வேண்டும்.

○ தமிழ் பேசும் மக்கள் தமது பாதுகாப்பை தாமே நிர்ணயிக்கக் கூடிய வழிவகையை அங்கீகரிக்க வேண்டும்.

○ வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டுள்ள இந்திய, இலங்கை இராணுவத் துறையினரின் படைக்குறைப்பு, வெளியேற்றம் என்பன குறித்து கால எல்லை நிர்ணயிக்கப்படவேண்டும்.

○ எல்லாவற்றுக்கும் மேலாக, நீண்ட காலமாகத் தமிழ்ப் பேசும் மக்கள் கோரி நிற்கும் 'சுயநிர்ணய உரிமை' அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இந்த உணர்வுகளை இலங்கை, இந்தியப் அரசுகள் புரிந்து கொண்டு தமிழ்ப் பேசும் மக்களது பிரச்சனைகள் தீர்வதற்கான அணுகுமுறை மாற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. ஒபரேசன் பூமாலையில் தொடங்கிய இந்திய இராணுவத்தின் செயல்பாடு ஒபரேசன் புயல் காற்றுவரை நடந்து முடிந்துவிட்டது. இவற்றின் விளைவுகள் மிக மோசமானவை; இந்த நிலைமையில் இந்திய அரசு, தமிழ்ப் பேசும் மக்களுடைய உணர்வுகளை அங்கீகரித்து— அந்த மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து — அவர்கள் தாங்கள் விரும்புகின்ற தீர்வு ஏற்பட வழி சமைக்க ஒத்துழைக்க வேண்டும். இந்தப் போராட்டம் பிசுபிசுத்து விட்டது என்றோ அல்லது பயனற்றுப் போய்விட்டது என்றோ யாரும் கருதத் தேவை இல்லை. இந்தப் போராட்டம் நிறையவே சாதித்திருக்கிறது; இன்னும் சாதிக்கக் காத்திருக்கிறதுஎன்பதைச் சொல்லி தென்கிழக்காசிய நாடுகளின் விடிவெள்ளியாக ஈழப் போராட்டம் திகழும் என்ற நம்பிக்கையை உங்கள் மத்தியில் விட்டுச்செல்ல விரும்புகிறேன். □

---

## முன்விலைத் திட்டம்
### எஸ்.வி. ராஜதுரை எழுதியுள்ள
## ரஷ்யப்புரட்சி : இலக்கிய சாட்சியம்
### (1917-1989)

எழுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ரஷ்யப்புரட்சியின் தாக்கத்தையும் அதன் பாதிப்புகளையும் இலக்கியத்தின் கண்ணோட்டத்திலிருந்து இந்த நூல் காண விழைகிறது.

டெமி 1/8 அளவில் ஏறத்தாழ 380 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் நவம்பர் இரண்டாம் வாரம் வெளிவரவுள்ளது. ரூ.60/= விலையிடப்பட்டுள்ள இந்நூல், நவம்பர் 10க்குள் (M.O. மூலம்) பணம் செலுத்துவோருக்கு ரூ. 50/=க்குத் தரப்படும். பதிவுத்தபாலில் அனுப்ப ரூ. 5/= சேர்த்து அனுப்ப வேண்டும். முகவரி: அன்னம் (பி) லிமிடெட், 2, சிவன் கோயில் தெற்கு, சிவகங்கை-623 560.

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை பிரச்சினையை இந்திய அரசியல் கட்சிகள் தங்கள் சுயலாபத்துக்காகப் பயன்படுத்துகின்றன

## நெடுமாறன் குற்றச்சாட்டு

□
□

ஈழ நண்பர் கழகம் நடத்திய கலை மாநாட்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தமும் இன்றையச் சூழ்நிலையும் எனும் தலைப்பில் நிகழ்ந்த கருத்தரங்கில் பலர் பேசினர். கருத்தரங்கில் பங்கேற்ற திரு. பழ. நெடுமாறன் பேச்சின் ஒரு பகுதி :

ஈழப் பிரச்சனையை சரியான நேரத்தில் தமிழ்நாட்டு மக்களிடையே தூண்டி விடுவதற்காக ஈழ நண்பர் கழகம் இந்த மாநாட்டினை ஏற்பாடு செய்திருக்கிறது. ஏனென்றால், தமிழ் நாட்டு மக்களுக்கு, ஈழப் பிரச்சனை பற்றிய விளைவுகள் — அந்த மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் பற்றிய உண்மையான செய்திகள் தெரிவிக்கப்படவில்லை; தமிழ்நாட்டில் உள்ள 5 கோடி மக்களில் எத்தனை சதவிகிதம் பேர் ஈழப்பிரச்சனையின் உண்மையான வடிவங்களை அறிந்திருக்கிறார்கள் ? மக்களுக்கு உண்மையான பிரச்சனையை எடுத்துச் சொல்லவேண்டிய பத்திரிகைகளும் உண்மையைச் சொல்லவில்லை; தமிழ்நாட்டில் இருக்கின்ற பெரிய அரசியல் கட்சிகளும் அந்த வேலையைச் செய்யவில்லை. ஆக மக்களுக்கு இந்தப் பிரச்சனைகளைச் சொல்ல இதுபோன்ற மாநாடுகளைக் கூட்டுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை; அதற்காக இதுபோன்ற மாநாடுகள் தமிழ்நாடெங்கும் ஏராளமாக நடத்தப்பட்டாக வேண்டும். அந்த வகையில் ஈழ நண்பர் கழகத்தை இங்கே நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கின்ற பெரும்பாலான பத்திரிகைகள் வியாபார நோக்கில்தான் செயல்படுகின்றன. எனவே, பத்திரிகை விற்க வேண்டும் என்று சொன்னால் அதற்காக எதை வேண்டுமானாலும் செய்ய இவர்கள் தயாராயிருப்பார்கள்.

20 மைல் தொலைவிலே இருக்கின்ற இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை அறிய எந்தப் பத்திரிகையாளனும் உள்ளே நுழைய முடியாமல் அங்கே ஒரு பெரிய இரும்புத்திரையை தொங்க விட்டிருக்கிறது இந்திய ராணுவம். அதையும் மீறித்தான் பன்னீர்ச்செல்வன் போன்ற பத்திரிகையாளர்கள் இலங்கை சென்று வந்து ஓரளவுக்கு உண்மையை வெளியிட முடிகிறது. ஆனால் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்?

இந்திய அரசாங்கத்தின் சார்பிலே எத்தனை பொய்ச் செய்திகளைக் கொடுத்தாலும் அதைப் பக்கம் பக்கமாக வெளியிடுவதிலே அக்கறை காட்டுகின்றனவே தவிர, ஒரு மனிதாபிமான உணர்வோடு அவை இந்தப் பிரச்சனையை அணுகவில்லை; அக்கறைகாட்டவில்லை.

இன்றைக்கு இலங்கைப் பிரச்சனை என்னென்ன கோணத்தில் எல்லாம் வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் இங்கு ஆராயவேண்டும். இங்கே இருக்கின்ற பெரிய அரசியல் கட்சிகள் எல்லாம் இந்த பிரச்சனையை தங்கள் சுய அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்துகின்றதே தவிர உண்மையான நோக்கத்துக்காக இல்லை என்று இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். அது ரொம்பவும் சரியான கருத்து. ஒரு வாரத்துக்கு முன்னாலே ராஜ்ய சபையிலே தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து, இலங்கை அரசாங்கத்துடன் இந்திய அரசு நடத்தியிருக்கின்ற பேச்சு பற்றிய முழுமையான விவாதத்தை ராஜ்ய சபையிலே நடத்தப்பட்டாக வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அந்தக்கோரிக்கை அரசாங்கத் தரப்பிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்காக நான் பாராட்டுகிறேன். சரி, ராஜ்ய சபையிலே விவாதிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிற நீங்கள் — தனி மெஜாரிட்டியில் தமிழ்நாட்டை யாளும் நீங்கள் — ஏன் தமிழ்நாடு சட்ட மன்றத்தைக் கூட்டி முழுமையாக விவாதம் நடத்த முன்வரவில்லை ? அதை செய்வதற்கு ஏன் உங்களுக்கு மனமில்லை ? டில்லியிலே கூக்குரல்

படிப்பகம்

www.padippakam.com



எழுப்புவது, இந்தப் பிரச்சனையில் ஏதோ உங்களுக்கு அக்கறை இருப்பது மாதிரி பாவனையை மக்களுக்கு காட்டுவதற்கு செய்கிறீர்களே தவிர, தமிழ்நாடு சட்டமன்றத்தைக் கூட்டி இந்தப் பிரச்சனையை முழுமையாக விவாதம் நடத்தி, இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வாபஸாக வேண்டும் என்று வற்புறுத்துவதற்கு நீங்கள் தயாரா என்று நான் கேட்க விரும்புகிறேன். சட்டமன்றத்தில், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திருநாவுக்கரசு எழுந்து, பிரபாகரன், மாத்தையா போன்ற தலைவர்களுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்று ஒரு தீர்மானம் கொண்டுவர ஆளும்கட்சி தயாரா என்று கேட்கிறார். அதற்கு, மதிப்பிற்குரிய முதலமைச்சர் என்ன பதில் சொல்கிறார்? நீங்கள் அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் நாங்கள் ஆதரிக்கத் தயார் என்று சொல்கிறார். அந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிகிறவரை இவரும் கொண்டு வரவில்லை; அவரும் கொண்டு வரவில்லை. ஆக, இது உதட்டளவுப் பேச்சே தவிர வேறல்ல. ஆனால் அதற்கு மாறாக, இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏராளமான இளைஞர்கள் இந்தப் பிரச்சனையிலே ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்கள் ஒரு அமைப்பின் கீழே வராமல் இருக்கலாம்; அல்லது சிறுசிறு இயக்கங்களாகக் கூட இயங்கலாம். ஆனால் இந்த உணர்வு கொண்டவர்கள் தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக இருக்கிறார்கள் என்பது மறக்க முடியாத உண்மை. அந்த மக்களை நாம் ஒன்று திரட்டியாக வேண்டும் அதற்கு இது போன்ற மாநாடுகள் துணைநிற்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இந்திய-இலங்கை உடன்பாடு செய்யப்பட்டபோது, யாருக்காக அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதோ அவர்களையோ அல்லது அந்த மக்களின் பிரதிநிதிகளையோ கலந்தாலோசிக்கவில்லை. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு இந்த உடன்பாடு உதவும் என இந்த உடன்பாட்டுக்கான காரணம் இந்திய தரப்பில் சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த உடன்பாட்டை நிறைவேற்ற இராணுவத் தளத்தை அமைக்க வேண்டும் என்று இந்திய அரசு முடிவு செய்த போது சின்னஞ்சிறிய இலங்கைத் தீவில் விகிதப் பொருத்தமான அளவை அவர்கள் கடைபிடிக்கவில்லை. விடுதலைப்புலிகள் 2000 பேர். எல்லா போராளிகளையும் சேர்த்தால் 5000 பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள் என்று சொல்லப்பட்டது. இவர்களை ஒடுக்குவதற்கு இந்தியா பயன்படுத்திய இராணுவத்தின் விகிதாசாரம் என்ன? ஒரு லட்சம்பேர் கொண்ட படையுடன் ஏராளமான நவீன இராணுவத் தளவாடங்களையும் கொண்டுபோய்க் குவித்து அதை உபயோகிக்கும் போது அதனுடைய விளைவுகள் எவ்வளவு மோசமாக இருக்கும்? அதனாலே ஏற்பட்ட அழிவும், மக்கள் சாவும் அதிகமாயிற்று. சரி, இராணுவ பலத்தைப் பயன்படுத்திப் பார்த்தீர்கள் முடியவில்லை; எனவே, இராஜதந்திர நிர்ப்பந்தங்களைப் பயன்படுத்தி ஒரு சுமுகமான முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் செய்த அந்த ராஜதந்திர நிர்ப்பந்தம், மிக மோசமான தவறுகள் நிறைந்ததாக இருந்தது. உதாரணத்துக்கு, புலேந்திரன், குமரப்பா உட்பட 15பேர் நஞ்சருந்தி மாண்டது. இந்த 17 பேரையும் ஒரு கருவியாகப் பயன்படுத்தி நிர்ப்பந்தம் செய்தால் விடுதலைப்புலிகள் இடைக்கால அரசு அமைக்க ஒத்துக்கொள்வார்கள் என்று நினைத்து இவர்கள் செய்த அந்த நிர்ப்பந்தம் நேர்மாறான எதிர்விளைவுகளை ஏற்படுத்திற்று. அங்கே அப்படி? இங்கே தமிழ்நாட்டிலே, கிட்டுவுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்த போதே 'தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது' என்ற பெயரில் அவரைக் கொண்டுபோய் சிறையிலே அடைத்தார்கள். அதற்கு தமிழ்நாட்டு மக்களிடத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பியவுடன் அவசர அவசரமாக அவரை தமிழ்நாட்டிலே இருந்து அப்புறப்படுத்தினார்கள். இலங்கையில் கொண்டுபோய் விடுதலை செய்வதாகச் சொல்லி கிட்டுவை மட்டும் விடுதலை செய்துவிட்டு மற்றவர்களை இன்னும் அங்கே சிறையில் வைத்திருக்கிறார்கள். இந்த ராஜதந்திரமும் முட்டாள்தனமாக அமைந்தது. அதே நேரத்தில் இவர்கள் துரோகம் செய்யவும் தயங்கவில்லை. கிட்டுவுடன் ஓரளவுக்கு பேச்சு வார்த்தை நடத்தி அதை தம்பி பிரபாகரனுக்குத் தெரியப்படுத்தி சம்மதம் பெறுவதற்காக, ஜானி என்பவரை இங்கே இருந்து அனுப்பினார்கள். ஆனால் அவர் இந்திய ராணுவத்தினாலேயே சுட்டுக் கொல்லப்படக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஈழத்தில், புலிகளானாலும் ஈரோஸானாலும் அல்லது மற்ற இயக்கங்களானாலும் எதற்காக அங்கே ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள்? அதன் பின்னணி என்ன? அதற்கு ஈழத்தமிழர்களின் ஆதரவு எந்த அளவுக்கு இருந்தது? இதைப் பற்றியெல்லாம் முழுமையாகத் தெரிந்துகொள்ளாமல் அரைகுறையாக, அவசர நடவடிக்கைகளிலே ஈடுபட்டு, கடைசியில் புலிகளுடன் போரைத் தொடுத்து, இப்பொழுது அந்தப் போரை எப்படி முடிப்பது என்று தெரியாமல் இந்தியா திணறுகிறது, திண்டாடுகிறது. (தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கைப் பிரச்சனை: ஒரு விற்பனைப் பொருள்

## கலை மாநாட்டில் ஏ. எஸ். பன்னீர்ச்செல்வன் வேதனை

இந்தியாவில் இருக்கின்ற பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள், பொருளியல் வல்லுநர்கள் போன்ற பலருக்கு இலங்கை என்பது ஒரு விற்பனைப் பொருள். இலங்கைக்குச் சென்று வந்து இலங்கையைப் பற்றி எழுதினால் பத்திரிகையாளனாக இருக்கும் பட்சத்தில் முதல் பக்கத்தில் உங்கள் பெயர் வரும். இரண்டு முறை சென்று வந்தால் உங்களுடைய புகைப்படமும் வரும். இது ஒரு 'கேரியரிசம்'. இலங்கைப் பிரச்சனையை இந்தியப் பத்திரிகைகள் பார்க்கும் விதமும் இந்த 'கேரியரிசத்தின்' ஒரு பகுதியாகத்தான் இருக்கிறது.

நான் சமீபத்தில் இலங்கை சென்று திரும்பி வந்தவுடன் விடுதலைப்புலி மாத்தையாவை வன்னிக்காடுகளில் நேரில் சந்தித்து எடுத்த பேட்டி எங்களுடைய பத்திரிகையான "இந்தியா வீக்"இல் வெளிவந்தன. ஆனால் அந்தப் பேட்டியை இங்கிருக்கிற பல தமிழ்ப் பத்திரிகைகள் எடுத்து வெளியிட்டன. என்னிடமோ, எமது பத்திரிகையிடமோ அனுமதி வாங்கவில்லை. அதுபற்றி இங்கிருக்கிற தமிழ்ப் பத்திரிகைகளிடம் கேட்டபோது, "தமிழர்கள் பிரச்சனையல்லவா? அதனால் தமிழர்களாகிய நாங்கள் அவர்கள்மீது அக்கறை கொண்டு வெளியிட்டோம்" என்று பதில் சொன்னார்கள். அவர்களையெல்லாம் பார்த்து நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்டேன். "இங்கிருந்து இலங்கை சென்றுவர 10 ஆயிரம் ரூபாய்தான் செலவாகும். ஏன், தமிழுணர்வு என்று சொல்லிக்கொள்ளக் கூடிய ஒரு பத்திரிகைகூட பத்திரிகையாளரை இலங்கைக்கு அனுப்பவில்லை?" காரணம், இலங்கை விற்பனைப் பொருள். அந்தப் பொருள் யார் மூலமாக வந்தாலும் நாங்கள் விற்பனை செய்யத் தயார். அதையும் நாங்கள் இரண்டு வகையாகவும் விற்பனை செய்வோம். ஒன்று: தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு நிலை எடுத்து அதை விற்பனை செய்வோம். இன்னொன்று: இந்தப் பிரச்சனையைப் பற்றி எந்தக் கவலையும் படாமல், எங்கள் அதிகாரிகள் தருகின்ற தகவல்களை மட்டுமே வைத்து இந்திய அரசுக்கு ஆதரவாக ஒரு நிலையையும் எடுப்போம். ஒன்று இப்படி முன்னேறலாம்; அல்லது அப்படி முன்னேறலாம் என்று ஒரு கீழ்த்தரமான முடிவையெடுத்து இந்தப் பிரச்சனையை பத்திரிகைகள் அணுகுவதாகத்தான் எனக்குப்படுகிறது. ஆனால் இவையிரண்டுமே கேரியரிசத்தின் இருவேறு பகுதிகள்தான்.

இலங்கையில் இனப்பிரச்சனையை விட பொருளாதாரப் பிரச்சனைதான் பிரதானமாக இருக்கிறது என்பதைக்கூட இங்கிருக்கிற பல பத்திரிகைகள் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. ஒன்று, தமிழர்களின் வீரவரலாறுகளைப் பற்றிப் பேச வேண்டும்; அல்லது இந்திய அரசின் தவறுகளைப் பற்றியே பேச வேண்டும்; இல்லாவிட்டால் இந்திய அரசின் நிலையை நியாயப்படுத்த வேண்டும். இந்த மூன்றே மூன்றின் அடிப்படையில்தான் எங்களது பத்திரிகைகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சரி, இலங்கையில், இவ்வளவு கொடுமைகளையும் மீறி தொடர்ந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டத்தினால் சமூக மாற்றங்கள் ஏதாவது நிகழ்ந்திருக்கிறதா? என்று பார்த்தால் அதுவும் இல்லை. இன்று EPRLF மற்றும் ENDLFஇன் அரசியல் நிலை மிக மோசமானதாக இருக்கலாம்; மிகப் பெரிய துரோகச் செயலாகக்கூட இருக்கலாம். ஆனால் அதை மக்கள் கண்டிக்கின்ற விதம் இருக்கின்றதே அங்குதான் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது, EPRLFஇன் துரோகத்தனத்தைச் சுட்டிக்காட்டி அவர்கள் பயன்படுத்துகிற சொல் 'ஈயப் பள்ளர்'. ENDLFஐ திட்டுவதற்காக அந்த மக்கள் பயன்படுத்துகிற சொல் 'ஈயென் நளவர்'. ஆக, 'சாதியம்' இன்னும் அப்படியேதான் இருக்கிறது. பத்தாண்டு காலத்துக்கும் மேற்பட்ட ஆயுதப் போர் சாதியத்தைத் துளிகூடத் தொடவில்லை. 'வரதட்சணை' அப்படியேதான் இருக்கிறது. என்ன கொடுமை இது?

இலங்கையில் என்னைச் சந்தித்த மக்களில் சிலர் கூறினார்கள்,

'நீங்கள் இயக்கக்காரர்களிடம் நாங்கள் சொல்வதைக் கூறுவீர்களா?'

'மாட்டேன்.'

'பத்திரிகையில் எழுதுவீர்களா?'

'மாட்டேன்.'

'அப்படியென்றால் சொல்கிறோம். ஆயுதந் தாங்கிய யாருமே இங்க இருக்கவேண்டாம். இந்தியப் படை, சிங்கள இராணுவம்

படிப்பகம்

www.padippakam.com



எல்லாருமே வெளியேறட்டும். நாங்க நிம்மதியா இருப்போம்.'

இது இலங்கையில் இருக்கிற 40 வயசுக்கு மேற்பட்ட பலருடைய கருத்து. அப்போது நான் கேட்டேன்,

'இயக்கத்துல இருந்து வந்தவங்கெல்லாம் உங்ககிட்ட இருந்து வந்தவங்க தானே. அவங்ககிட்ட சொல்ல வேண்டியதுதானே?'

'எல்லாருக்கிட்டயும் ஆயுதம் இருக்கே. ஆயுதம் வைச்சிருக்கிறப்ப அது இராணுவமா இருந்தா என்ன? இயக்கமா இருந்தா என்ன? இங்க நடந்த எந்தக் கொலைக்காவது ஏதாவது விசாரணை இருக்கா? சிங்கள இராணுவமும், இந்திய இராணுவமும் பண்ணுன அட்டூழியம் கணக்கு வழக்கு இல்லை. நாங்க ஒத்துக்கிறோம். ஆனா இந்த இயக்கத்துக்காரங்கெல்லாம் தவறு பண்ணிக்கிட்டே வர்றாங்களே. அதை நாங்க எவ்வளவு நாளைக்குத்தான் மன்னிக்கிறது.'

அப்ப, நான் அவங்களைப் பார்த்து இன்னொரு கேள்வி கேட்டேன்.

'எல்லாம் சரி, நீங்க ஏன் விடுதலைப்புலிகளைக் காட்டிக் குடுக்க மாட்டேங்கிறீங்க?'

'ம்...அவங்க எங்க இளைஞர்கள். எங்க இளைஞர்கள் சாகிறத நாங்க விரும்பல. இந்திய அரசு எங்கள என்ன செஞ்சாலும் நாங்க அவங்களைக் காட்டிக் குடுக்க மாட்டோம்.'

ஆக, மக்கள் வந்து ஒரு விஷயத்துல தெளிவாத்தான் இருக்காங்கறத உணர முடிஞ்சது. எனவே மக்கள் கிட்டயும் ஒரு கருத்து இருக்கு. அதைப் புரிந்து கொண்டு, அதிலிருந்து ஏதேனும் ஒரு வழியோ, தடயமோ கெடைக்குமாங்கிற முயற்சியில அங்க யாராவது ஈடுபடுறாங்களான்னா, இல்லேன்னுதான் சொல்ல வேண்டியிருக்கு.

அடுத்து ஈழப் பத்திரிகைகளை எடுத்துக்கலாம். அங்கிருந்து, மூணு நாளிதழ்கள் வருது. 'ஈழநாடு', 'உதயன்', 'முரசொலி' என்று. இந்த மூணு பத்திரிகைகளும் எந்தச் செய்திகளைச் சார்ந்து வருகிறதென்றால் விளம்பரங்கள். இன்னைக்கு இலங்கையிலே காலமானவர்கள் பற்றிய விளம்பரந்தான். காலமானவர்கள்பற்றி விளம்பரம் குடுக்கிறவங்க நிறுத்திவிட்டால், இலங்கையிலே எந்தப் பத்திரிகையுமே நடத்த முடியாது. அப்ப, பத்திரிகையினுடைய பொருளாதாரங்கிறது, இறந்தவர்கள் விளம்பரத்தை வச்சு ஓடிக்கிட்டிருக்கு. இதுல இந்தியாவினுடைய பங்கு ரொம்ப அதிகம். இது ஒரு பக்கம். சரி, இந்தியாவைப்பற்றி சிங்கள மக்கள் என்ன நினைக்கிறாங்கன்னு சொன்னா,

நான் ஒருநாள் கொழும்புக்கு டாக்சியில போய்க்கிட்டு இருந்தேன். அப்ப அந்த டாக்சி சிங்கள டிரைவர் சொன்னார்.

'நான் இந்தியா பெரிய நாடுங்கறதையும் அதுக்கு இருக்கிற பெரிய சக்தியவும் நான் மறுக்கல. ஆனா, இவ்வளவு பெரிய நாடு இந்தப் பிரச்சனையில எப்படி நடந்துக்கணுமுன்னா ஒரு பெத்த தாயைப்போல நடந்துக்கணும். ஒரு சித்தியப்போல நடந்துக்கக் கூடாது.'

நான் இலங்கையில போய் பேசினதிலேயே, most sensitive political statement ஒன்று உண்டு என்றால் அது இதுதான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் இப்படியானதுக்குக் காரணம் என்னன்னா, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இருந்த முதல் முரண், ஒப்பந்தம் ஏற்பட்ட சில மணி நேரங்களிலேயே ஒரு பிற்சேர்க்கை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம்தான்! அதாவது, பிரச்சனையினுடைய பலமுகங்களை, குறிப்பாக பொருளாதார ரீதியான நிலைகள் என்ன? இராணுவ ரீதியான நிலைகள் என்ன? என்று பல நிலைகளையும் எடுத்து வைத்து ஆராய்ந்து முடிவெடுக்கத் தவறிட்டாங்கன்னுதான் சுருக்கமாகச் சொல்லலாம். □

## டிசம்பர் இதழில்...

- □ பாரதிதாசன் பற்றி தியாகு எழுதுகிறார்
- □ துரை சீனிச்சாமி மொழிபெயர்ப்பில் சீனக் கவிதைகள்
- □ சமூக நிகழ்வுகள் பற்றிய விமர்சனத்தை மாறுபட்ட கண்ணோட்டத்தில் தருகிறார் சாதாரணன்
- □ ஈழம் பற்றிய சிறப்புக் கட்டுரை
- □ நூல் விமர்சனம்
- □ 'சூரியனிலிருந்து கடைசி கிரணம் வரை' நாடகம் விமர்சனம்
- □ சிறுகதைகள், கவிதைகள்
- □ திரைப்பட விமர்சனம்

படிப்பகம்

www.padippakam.com





பழ. நெடுமாறன்



சின்னபாலா



ஏ. எஸ். பன்னீர்ச் செல்வன்

அறிவுறுவோன்



ந. கௌதமன்



கவிதா நிகழ்வில்





சீனிவாசன்



செ. போத்திரெட்டி



முனைவர் இரா. இளவரசு

படிப்பகம்

www.padippakam.com






பறை முழக்க
வீர நாட்டியம்











படிப்பகம்